www.padippakam.com



கருணை ஒளியே வழிகாட்டு
வேலணை மத்திய மகா வித்தியாலயம்

# வித்தியாலயம் 2001

## பிரான்ஸ்

படிப்பகம்

www.padippakam.com



# இலக்கினை நோக்கிய இயக்கமாய்...

புலம் பெயர்ந்தோரிடையே விழாக்களும் வெளியீடுகளும், இணைப்புகளையும், உறவுகளையும் உருவாக்கியும் புதுப்பித்துக் கொண்டுமிருக்கின்றன. மிகச்சில பிரிவுக்கும் பிறழ்வுக்கும் இடம்கொடுத்துச் செல்கின்றன. சில முரண்பாடுகளைத் தந்துபோகின்றன. பல முரண்பாடுகள் பொது நோக்கிற்காய் உடன்பாடாகின்றன. இதற்கு ஊடகமாக விழாக்கள் பயன்படவேண்டும். மிகுந்த செலவில் செய்யும் விழாக்களும் வெளியீடுகளும் தேவையா? எனக்கேட்கையில் தேவைதான் எனச் சொல்லத்தான் வேண்டும். விழாக்களும், வெளியீடுகளும் விளம்பரத்திற்காகவல்ல. விலாசங்களுக்காகவல்ல. விலாசம், தேடுவதல்ல. ஒவ்வொருவருக்குமிருப்பது விலாசம். ஒருவனுக்கு விலாசம் இருக்கென்கையில் அவனிடத்தில் ஏதோ இருக்கின்றதென்பது அர்த்தம். விலாசம் இல்லாதவைக்கு விளம்பரம் தேடமுடியாது. விலாசம் இருந்தால் விளம்பரம் வரும். விளம்பரம் வர பிரபலம் வரும். பின் பிரமுகர் வரும். விழாவில் விளம்பரங்களில்லை, பிரமுகர்கள் ஆவதுமில்லை. இவைகள் ஊடாக எதையோ நாம் பேசிக்கொள்ளுகிறோம். பேசாதிருந்தால் எதையும் தெரிந்துகொள்ள இயலா. பேசியதையே பேசியும் செய்ததையே செய்து கொண்டிருந்தால், புதியவைகளைத் தெரியவும் மாற்றங்களைக் காணவுமியலா. விழாக்களும் வெளியீடுகளும் கேளிக்கைக்காய், குதூகலத்திற்காக செய்ய வேண்டியதல்ல. அதற்கு மட்டும்தான் என்றால் 'தண்ணி' அடித்துவிட்டு போர்த்துக்கொண்டு படுத்துறங்கலாம்.

"வேதவல்லி ரீச்சரிடம் தமிழ் படித்தேன், அடிவாங்கினேன்" என நினைத்தலும், அழுதலும், தொழுதலுமாய் ஆண்டுமலர்களும், சிறப்புமலர்களும் அமைவதைக் காண்கிறோம். அழுதலும் தொழுதலும் மேலும் மேலும் ஒடுக்கவும், ஒதுங்கவும் தொழுதுண்டு பின் செல்லவும் உற்சாகமிழக்கவுமே வழிசெய்கின்றது. வெளியீடுகள் யாவும் எடுத்தல், எழுதலாய், தெரிதலாய் இருக்கவேண்டும். இலக்கியமாய் மிளிரவேண்டும். இலக்கினை நோக்கிய இயக்கமே இலக்கியம். ஒவ்வொரு எழுத்தாக்கமும் இலக்கு நோக்கியே இருக்கவேண்டும். இலக்கு நோக்கிய அசைவியக்க எழுத்துக்களே எங்கும் வேண்டி நிற்பது. மிகுந்த பணச்செலவில் ஒரு சஞ்சிகையை, சிறப்புமலரை வெளிக்கொணர்கையில் அதில் சமூகத்திற்கு செய்தி சொல்லப்பட்டிருக்க வேண்டும். அஃதின்றேல் அதைவிடுதல் நன்று. அந்த வகையில் எமது *வித்தியாலயம் 2000* இதழ் சமூகத்தில் ஒடுக்கப்பட்டவர்களுக்காக குரல்கொடுக்கும் போர்குரல்களின் கவனத்தில் பதிந்துசென்றது மிகப்பெறுமதியான செய்தியைச் சொல்லிப்போனது.

'இந்த வித்தியாலயம் 2001' உம் ஏதோ சொல்லி நிற்கிறது. இந்த இதழிற்காக தொலைநகலில் கிடைக்கப்பெற்ற சில ஆக்கங்கள் தெளிவின்மையால் பிரசுரமாகாமல் போனதுடன் மீளவும் பெற காலஅவகாசம் காலாவதி ஆகிப்போனதால் ஆக்கதாரர்கள் மன்னியுங்கள். பல பட்டங்களைப் பெயருக்குப்பின்னே ஒட்டிவைத்திருக்கும் படித்தவர்கள் கூட கட்டுரைகள் தருவதாய் சொல்லி வெறும் வாழ்த்துச் செய்திகளை அனுப்பி இருந்தனர். எமக்குச் சொல்வதற்கு, அவர்கள் எங்களைவிட மேலதிகமாக எதையும் தெரிந்து வைத்திருக்கவில்லை யென்பது கவலையே. தேடலும், தெரிந்துகொள்ளலும், தெரிவித்தலும்தேவையென ஆர்வம் கொள்வோம். முயல்வோம். வாழ்த்துவது இலகு, எவரும் வாழ்த்தலாம், எப்பவும், எப்படியும், நானும் வாழ்த்துகிறேன், நன்றி சொல்கிறேன் அவர்களுக்கு. முன்னைய இதழ்களுக்கு கிடைக்காமல் போன மாணவர் ஆக்கங்கள் இந்த இதழிற்கு கிடைத்திருக்கின்றன, கிடைக்க வழியாகி நின்ற ஆசிரியர் பொ. ஈசன் அவர்கட்கு நன்றிகள் பல. மாணவர் எண்ணங்களே கல்லூரியின் கனவளவு.

இந்த இதழிற்கு ஆக்கங்கள் அனுப்பிய எல்லா ஆக்கதாரர்களுக்கும் ஆக்கம் கைவர இடையில் ஒத்துழைத்தவர்களுக்கும், கணனியில் எழுத்தாக்கிய சி. பிரியதர்சினி, ப.கந்தப்பபிள்ளை, க.சிவகரன், அ. இயல்வாணன், அட்டை வடிவமைத்த கிருஷ்ணா அச்சகத்தினர், ஓவியம் தந்த அ. தேவதாஸ், விளம்பரதாரர்களுக்கும் எமது சங்கம் என்றும் நன்றிகளை நல்கி நிற்கின்றது. நான் பெரிசா நீ பெரிசா பத்தையும் பத்தையும் கூட்டி இரண்டால் வகுக்க வரும் விடை வேறென விதண்டாவாதம் செய்யும் முரண்பாடோடும் கனடாவில் எமது கல்லூரியின் பெயரால் இயங்கிக் கொண்டிருந்த இரண்டு சங்கங்களும் ஒருங்கிணைந்த செய்தியால் மகிழ்வடைகிறோம். மேலும் தொடர்ந்து ஒற்றுமையோடும் ஒருமைப்பாட்டோடும் புரிந்துணர்வோடும் பகுத்தறிவுப்பாதையில் மனிதநேயத்தோடு இணைந்து பணிசெய்ய வாழ்த்துகிறோம். வழிகாட்டி வழிவிடுவோம்.

என்றும் தோழமையுடனும் அன்புடனும்

**- சு. கருணாநிதி.**



படிப்பகம்

www.padippakam.com



# தலைவரிடமிருந்து...

என்ன செய்தோம் என எண்ணிப்பார்த்து, என்ன இன்னும் செய்யவிருக்கிறது என எண்ணிய போது, எவ்வளவோ செய்வதற்கு இருக்கிறதே என பிரமிக்க ஒரு வருடம் உருண்டோடி விட்டது. 92ன் இறுதியில் பல கஷ்டங்களுக்கு மத்தியில் நாங்கள் அங்குரார்ப்பணம் செய்த பிரான்ஸ் கிளை இன்று இவ்வளவு வளர்ந்திருப்பது கண்டு மிகவும் பூரிப்படைகிறேன். இதற்கு இங்கு வாழும் பழைய மாணவர்களின் கல்லூரியின் மீதான பற்று இலங்கையிலும், உலகெங்கிலும் வாழும் ஆசிரியர்களின் ஆலோசனைகள், ஊக்கங்கள் முக்கியமாக அவர்கள் எங்களுக்களித்த கல்வி, இங்குள்ள வர்த்தக ஸ்தாபனங்களின் நிதியுதவி போன்றவை, தான் எங்கள் சங்கத்தை இவ்வளவு நிலைக்கு உயர்த்தியது என்றால் மிகையாகாது.

இவ்வருடம் பாடசாலைக்கு ரெலிவிஷனும், டெக்கும் வாங்க பணம் அனுப்பிதோடு தமிழர் புனர் வாழ்வுக் கழகத்துக்கும் எங்களாலான சிறு உதவியைச் செய்தோம். ஆங்காங்கு இருக்கும் கல்லூரியின் பழைய மாணவர்கள் சங்கத்தில் இணைந்து ஆதரவு தரவேண்டும் என தயவாகக் கேட்டுக் கொள்ளும் அதே நேரத்தில் எங்கள் ஒற்றுமையில்தான் கல்லூரியின் வளர்ச்சியும் அங்கு பயிலும் மாணவர்களின் அறிவும் வளரும் என்பது யாவரும் அறிந்ததே. சங்கங்கள், பழைய மாணவர்கள் எல்லோரையும் ஒரு இணைவலயத்திற்குள் கொண்டுவந்து விட்டுப்போன உறவுகளை எல்லாம் புதுப்பித்து பரஸ்பரம் ஒவ்வொருவரையும் புரிந்துகொள்ள உதவுகிறது. சின்ன வயதில் வாழ்ந்த கல்லூரிக் காலங்களை மீண்டும் அசைபோட்டு மனதில் மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது.

மேலும் பாடசாலையில் கல்வி பயிலும், எம் சகோதரர்களுக்கு உதவும் வகையில் அதிபர், ஆசிரியர்கள் ஆகியோரின் ஆலோசனைகள் பெறப்பட்டு மேலும் ஆக்கபூர்வமான உதவிகள் செய்வதற்கு சங்கம் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது. அத்துடன் இம்முறை எங்கள் சங்கத்தின் நிதிநிலைமை ஓரளவு திருப்தி உடையதாக உள்ளது. இதற்கு நிர்வாக சபை உறுப்பினர்களின் முயற்சி குறிப்பிடத்தக்கது. இவ் வருடத்து ஒன்றுகூடலில் ஜெர்மனியில் வாழும் பழைய மாணவர்களை ஒருங்கிணைத்து சங்கம் அமைப்பதற்கான ஆரம்ப நடவடிக்கையாக ஜேர்மனியிலிருந்து இங்கு சிலரை வரவழைத்திருக்கிறோம். அதன்பின்னர் அவர்கள் அங்கு சங்கம் அமைப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பார்கள். அதற்கு பாரிஸ் பழைய மாணவர் சங்கம் எல்லா விதத்திலும் அனுசரணையாக இருக்கும். இன்னும் பல பழைய மாணவர்கள் சங்கத்துடன் இணைய வேண்டும். அத்துடன் புதுப்புது எண்ணங்கள் கொண்டவர்கள் வந்து சங்கத்துக்கு சேவை செய்ய வேண்டும் என்பது எங்கள் அவா. நாங்கள் வெளிநாட்டில் வித்தியாசமான சூழலில் வாழ்ந்து வருவதால் எங்களிடமுள்ள விசாலமான பார்வைகளையும் செயல்களையும் ஜனநாயக ரீதியில் ஒன்றிணைத்து பாடசாலைக்கும், அங்கு பயிலும் மாணவர்களுக்கும், ஏன் எல்லோருக்கும் பயன்படத் தக்கதாக செய்ய வேண்டும். இதற்கு வரவிருக்கும் புதிய நிர்வாக சபையும் உதவி புரியும் என எதிர்பார்த்து கல்லூரித் தாயின் வளர்ச்சியும் என்றுமில்லாதவாறு எங்கள் ஒற்றுமையும் பிரதானமானது எனக் கூறி விடைபெறுகிறேன்.
வாழ்க கல்லூரித் தாய்

*தலைவர்*
**நாகையா மகேந்திரன்**



படிப்பகம்

www.padippakam.com



# கல்லூரிக்கீதம்

வாழ்த்துவோம் வாழ்த்துவோம் வாழ்த்துவோம்
வாழ்க பாடசாலையென்று
வணங்கிக் கூடி வாழ்த்துவோம்

ஆழி சூழும் ஏழு தீவும்
    அறிவு காணும் சாலையாம்
ஊழி ஊழி ஓங்கும் சேவை
    உயர்வு காணும் சாலையாம்
வாழி வேலணை மத்திய மகா
    வித்தியா சாலையாம்
வாழி ஊழி ஊழி யென்று
    வணங்கிக் கூடி வாழ்த்துவோம்
அன்பு ஒளியைக் காட்டும் வழியே
    ஆய சின்னம் அதுவாய்க்
கொண்டு ஓங்கும் கொள்கை வழியே
    குலாவும் சிறார்கள் வாழ்கவே
நன்று கல்வி நாளும் நல்கி
    நல்லொழுக்கம் வளர்க்குமே
நின்று நாமும் நாடும் வாழ
    நிலைக்கும் சேவை போற்றுவோம்
ஞானம் சீலம் நாடு எங்கும்
    நல்கி மல்கிப் பெருகவே
மான வீர மாணவர்கள்
    வளர்த்தெடுக்கும் தாயிவள்
ஆயகலைகள் அறிவியல்கள்
    அள்ளி அள்ளி ஊட்டுவாள்
தேனருந்து வண்டு எனத்
    திளைத்து நாங்கள் போற்றுவோம்
அன்பு ஆசார் அதிபர் கூடி
    ஆக்கம் காட்டும் கோவிலாம்
இன்பத் தமிழோடாங்கிலத்தை
    ஏந்திப் போற்றும் கோவிலாம்
நன்று ஆட நயந்துபேச
    நமக்கருள் செய் கோவிலாம்
நின்று நாமும் நாடும் வாழ
    நிலைக்கும் சேவை போற்றுவோம்
போற்றுவோம் போற்றுவோம்
    வாழ்த்துவோம் வாழ்த்துவோம் வாழ்த்துவோம்.



படிப்பகம்

www.padippakam.com



# 2000 ம் ஆண்டு செயலாளரின் செய்தி

வேலணை மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கப் பிரான்ஸ் கிளை 1992 கார்த்திகையில் இருந்து இயங்கி வருகின்றது. பாடசாலையின் முன்னாள் அதிபரும் இரசாயனவியல் ஆசிரியருமான திரு. பொ. கேதாரநாதன் அவர்களின் கடிதமூலமான வேண்டுகோளுக்கமைய பிரான்ஸ் பழைய மாணவர் சங்கம் உருவானது.

23 அவணி 1990இல் இலங்கை இராணுவம் ஊர்காவற்துறையில் கடல் வழியாக வந்து இறங்கிய பின்னர் கரம்பன், சரவணை, வேலணை, மண்கும்பான், அல்லைப்பிட்டி போன்ற கிராமங்கள் ஊடாக இராணுவம் யாழ்ப்பாணக் கோட்டை வரை முன்னேறியது. இந்த இராணுவ நடவடிக்கையின் போது இடம் பெயரத் தொடங்கிய மக்கள் இலங்கையில் நிலவுகின்ற போராட்டச் சூழ்நிலை காரணமாக, இப்போதும் இடப் பெயர்வுகளையும் பல்வேறு நெருக்கடிகளையும் எதிர்நோக்கிய வண்ணமே உள்ளனர்.

எமது சங்கம் 92ல் உருவாகியபோது இடம் பெயர்ந்த மாணவர்கள் யாழ்-கொட்டடி நமசிவாயம் மகா வித்தியாலயத்தில் மாலை நேர வகுப்புகளில் பங்குகொண்டு கல்வி பயின்றனர். மாணவர்கள் வரவு அதிகரித்து இடப்பற்றாக்குறை ஏற்பட்டது. இந்த வேளையில் எமது பாடசாலை மாணவர்கள் கல்வி கற்பதற்காக தனியாக ஓலைக் கொட்டில்கள் போடுவதற்கு பாடசாலை நிர்வாகம் முடிவெடுத்தது. அத்துடன் மாணவர்கள் இருந்து படிப்பதற்கான வாங்கில்கள் செய்ய வேண்டிய தேவைகள் ஏற்பட்டன.

மாணவர்களின் இவ்வாறான தேவைகளை தற்காலிக ரீதியிலேனும் பூர்த்தி செய்வதற்காக 1993ல் முதன் முறையாக ஒருலட்சம் ரூபாயை சங்கம் அனுப்பி வைத்தது. பின்னர் 1995 ஐப்பசியில் யாழ் குடா மக்கள் இடம் பெயர்வின்போது அதிபர் ஆசிரியர்கள் மாணவர்கள் வன்னி நோக்கி இடம் பெயர்ந்தனர்.இந்த இடப் பெயர்வின் பின்னர் சில காலம் தொடர்புகள் இல்லாமல் இருந்தோம். 1997ல் இருந்து எமது பாடசாலை வேலணை வங்களாவடி சரஸ்வதி வித்தியாலத்தில் இயங்கி வந்து தற்போது தனது சொந்த இடத்தில் 750 மாணவர்களுடன் இயங்கி வருகின்றது.

தற்போதும் மாணவர்கள் பலவிதமான அழுத்தங்களுக்கு உட்பட்டே தமது கல்வியைத் தொடரவேண்டி உள்ளது. அரசாங்கத்தின் பாராமுகம், அரசியல் அழுத்தங்கள், போக்கு வரத்துப் பிரச்சனை மற்றும் உணவு மருந்துத் தட்டுப்பாடுகட்கு மத்தியிலும், மக்களிலும் நாட்டிலும் நேசங்கொண்ட ஆசிரியர்கள் மாணவர்கட்கு கல்வியூட்டி வருகின்றனர்.

இன்றைய சூழ்நிலையில் மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கு துணை புரிகின்ற ஆவணங்களும் படங்களும் வீடியோ நாடாக்களில் வெளிவந்துள்ளன. எமது மாணவர்களும் பயன் பெற தொலைக்காட்சி வீடியோ அவசியம் என்பது எமது சங்கத்திற்கு தெரியப்படுத்தப்பட்டிருந்தது. இவற்றை வாங்குவதற்காக 2000 ஆண்டு கார்த்திகையில் 7000 பிரெஞ்சு பிராங்குகள் பணம் அனுப்பிவைத்துள்ளோம்.

மேலும் கடந்த மூன்றாண்டுகளாக சங்கம் வருடாந்தம் கலைநிகழ்ச்சி ஒன்றை நடாத்துவதுடன் ***வித்தியாலயம்*** என்ற மலரையும் வெளியிட்டு வருகின்றது.

1992ல் ஆரம்பிக்கப்பட்ட எமது பிரான்ஸ் கிளை ஆண்டுகள் பல ஓடியும் மாணவர்கட்கு உதவுவது என்ற அடிப்படைக் கோட்பாட்டில் இருந்து வழுவாமல் இயங்கி வருவது சங்க உறுப்பினர்கட்கிடையே நிலவிவரும் புரிந்துணர்வும் பொது விடயம் என்ற ரீதியிலான ஒருமைப்பாடுமேயாகும்.

வேலணை மத்திய மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்காக இங்குள்ள பழைய மாணவர்களும் நலன் விரும்பிகளும் உதவ முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**– யா. பாலகிருஷ்ணன்**
செயலாளர்
பழைய மாணவர் சங்கம்
வேலணை மத்திய மகா வித்தியாலயம்
10.01.2001



படிப்பகம்

www.padippakam.com



*ஒரு நோக்கு :-*

# புதிய கல்விச் சீர்திருத்தமும் தீவகமும்

- திரு. ந. பரமேஸ்வரன்.
**B.Sc,Dip in Ed**
*(ஆசிரியர், யா/சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி*

பத்தாண்டுகளுக்கு முன்பு ஜோம்டியனில் (தாய்லாந்து) நடந்த "எல்லோருக்கும் கல்வி" பற்றிய உலக மாநாட்டில் உலகிலுள்ள ஒவ்வொரு குழந்தையும் ஐந்து ஆண்டுகள் தொடக்கக்கல்வி பெற உத்தரவாதமளிக்கப்பட்டது. அதுமட்டுமல்லாமல் 2000 ஆவது ஆண்டிற்குள் வயது வந்தோர் எழுத்தறிவின்மையை சரி பாதியாகக் குறைக்க உறுதிமொழி அளிக்கப்பட்டது. இவை மிக உயரிய குறிக்கோள்கள். அது மட்டுமல்லாமல் "கல்வி ஓர் உரிமை மட்டுமன்று, மேம்பாடு அனைத்துக்கும் அடிப்படை" என்பதும் மேற்படி மாநாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்டதொன்றாகும்.

அந்த வகையில் மேற்குறித்த உயரிய குறிக்கோளை அடையவே இலங்கை அரசும் முயற்சி செய்து வருகின்றது. உலகளாவிய ரீதியில் நோக்குமிடத்து, இலங்கையின் கல்வி கற்றோர் சதவீதம் உயர்வாகக் காணப்படுவது போலத் தோன்றினாலும் அக்கல்வி எந்தளவிற்கு பயனுறுதித்தன்மை வாய்ந்தது? என்ற வினா இன்று சமூகத்தின் பல மட்டத்தினராலும் எழுப்பப்பட்டு வருகின்றது. ஒருவர் தான் கற்ற கல்வியைக் கொண்டு தான் விரும்பும் தொழிலைத் தெரிவு செய்யவோ, அல்லது அத்துறை சார் நிபுணத்துவத் திறனைப் பெறவோ போதிய வசதி வாய்ப்புகள் அற்ற நிலைமையே இலங்கையில் காணப்படுகிறது.

இந்நிலைமையை நன்குணர்ந்த அரசும் இன்று பழைய கல்வி அமைப்பினை முற்றாக மாற்றி அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றது. அந்த வகையில் 1997 இல் வடிவமைக்கப்பட்ட பொதுக்கல்வி சீா்திருத்த நிகழ்ச்சித் திட்டம் 1998 இல் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நடைமுறைப்படுத்தப்பட்டதோடு 1999 இல் அனைத்துப் பிரதேச பாடசாலைகளுக்கும் விரிவாக்கப்பட்டது. தரம் 1 இன் சீர்திருத்தங்களின் நடைமுறைப்படுத்தல் நாடு முழுவதிலும் அறிமுகப்படுத்தப்பட்டன. இவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்றவாறு ஆசிரியர்களுக்குப் பயிற்சியும் அளிக்கப்பட்டது. சிறுவர் 2ம் நிலை சீர்திருத்தங்கள் தரம் 6 இலிருந்து தரம் 9 வரை நடைமுறைப்படுத்தப்பட்டன. புதிய பாடவிதானங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு சீரமைப்பு குறிக்கோள்களுடன் இசைவுறுமாறு மீள எழுதப்பட்டன. அத்துடன் க.பொ.த. (உ/த) மாணவர்களுக்கும் முன்பிருந்த 4 பாடங்கள் 3 ஆகக் குறைக்கப்பட்டுள்ளதுடன் "பொது வினாத்தாள்" பத்திரமும் பல்கலைக்கழகக் கல்வியை நாடும் மாணவருக்காக விசேடமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல் வளர்ந்து வரும் உலகலாவிய தொடர்பாடல் விருத்தி, இணையத்தளங்களின் செல்வாக்கு என்பவற்றுக்கு ஈடுகொடுக்கும் வகையில் இலங்கை மாணவர்களும் உருவாகப்பட வேண்டும் என்ற நோக்கில் ஆங்கிலக்கல்வியிலும், கணணித்துறையிலும் கூடிய கவனம் செலுத்தப்படுகின்றது.

இந்தவகையில் பல மட்டங்களிலும் சீர்திருத்தத்தை அரசு மிகத் தீவிரமாக முன்னெடுப்பதில் முனைந்தாலும் மூலவளங்களின் கட்டுப்பாடுகளின் காரணமாக கற்பித்தல் பொருட்களினதும் கல்வி உபகரணங்களினதும் பற்றாக்குறையானது சீர்திருத்தங்களின் செயல்திறன் மிக்க நடைமுறைப்படுத்தலின் கட்டுப்பாடுகளை விதித்துள்ளன. அத்துடன் கல்விச் சீர்திருத்தங்களுடன் தொடர்புறும் வெளிநாட்டு நிதியங்களின் பயன்பாடும் திருப்திகரமானதாக இருக்கவில்லை. நிர்வாக நடவடிக்கை முறைகளில் காணப்படும் தாமதங்களும் ஏனைய குறைபாடுகளும் சீர்திருத்தங்களின் நடைமுறைப்படுத்தலை தாமதமடையச் செய்துள்ளன எனலாம்.

இந்நிலையில் தீவகப் பிரதேசத்தில் இக்கல்விச் சீர்திருத்தங்களின் நடைமுறைப்படுத்தலை நோக்குவோமாயின் பல சிக்கலான பிரச்சினைகளை எதிர்நோக்கி நிற்பதை அவதானிக்கலாம். தீவகக் கல்வி நிலை வளர்ச்சியை மூன்று பகுதிகளாக நாம் நோக்க முடியும். அவையாவன:

(1) 1991 ஆம் ஆண்டின் இடப்பெயர்வுக்கு முற்பட்டநிலை.

(2) 1991-1996 இடப்பெயர்ச்சி காலப்பகுதி.

(3) 1996 இன் பின்னைய நிலை.

1991 ஆம் ஆண்டின் இடப்பெயர்வுக்கு முற்பட்ட நிலைமையில் தீவகக் கல்வி வளர்ச்சி நிலை ஓரளவு திருப்தியான நிலைமையே காணப்பட்டது. 1991 - 1996 ஆம் ஆண்டுக் காலப்பகுதி மிகவும் இக்கட்டான நிலைமையாகும். பாடசாலைகள் யாவும் இடம் பெயர்ந்த நிலையில் யாழ் நகரை அண்டிய பிரதேசங்களிலும், நாவற்குழி, தெற்பலி போன்ற தூர இடங்களிலும் அடிப்படை வசதிகள் எதுவுமற்ற நிலையில் இணைந்த பாடசாலைகளாகவும், தனித்தும் மிகுந்த சிரமங்களின் மத்தியில் இயங்கின. இந்நிலையில் தீவகத்தின் (தரைத் தொடர்பற்ற தீவுகள்) ஏனைய பகுதிகள் கல்வி நிர்வாக இயந்திரத்துடன் தொடர்புகள் அற்ற நிலையில் இயங்கின. இந்நிலையில் கல்வி விருத்தி பற்றி மதிப்பிடுவது சிரமமானது.

1996 இன் பின்னைய காலப்பகுதியில் தீவகப் பகுதியுடனான தொடர்புகள் மீள அமையப் பெற்றன. என்றாலும் இடப்பெயர்வினை எதிர்நோக்கிய பிரதேசங்களில் மீளக் குடியமர்ந்தோர் வீதம் 25% இலும் குறைவானதே. இம்மக்களின்



படிப்பகம்

www.padippakam.com



கல்வித் தேவையை பூர்த்தி செய்யவும், மேம்படுத்தவும் வேண்டும் என்ற நோக்கில் தீவகம் தனிக்கல்வி வலையமாக்கப்பட்டது. எனினும் புதிய கல்விச் சீர்திருத்தம் தொடர்பான பணிகளை அமுலாக்குவதில் பல பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றது. இவை:

(1) மாணவர் சார்பானவை.
(2) ஆசிரியர் சார்பானவை.
(3) கல்வி முகாமையாளர்கள் தொடர்பானவை.
எனப்பகுத்து நோக்கலாம்.

மாணவர்கள் தொடர்பான பிரச்சினைகளை நோக்குவோம் எனின்,

(1) பல பாடசாலைகளில் போதிய அடிப்படை வசதிகள் நிறைவேற்றப்படாமை.

(2) முக்கிய பாடங்களுக்குரிய ஆசிரியர்களுக்கான பற்றாக்குறையினால் பாடங்கள் நடைபெறாமை.

(3) பிள்ளைகளின் பெற்றோர் போதிய கல்வி அறிவற்றவர்களாகவும், கல்வித் தேவை பற்றி உணராதவர்களாகவும் உள்ளமை.

(4) இன்று தீவுப் பகுதியில் இடைநிலை, உயர் வகுப்புகளில் பயிலும் மாணவர்களில் பெரும் பாலானவர்கள் 91-96 காலப்பகுதியில் தொடர் இடப்பெயர்வுகளால் தமது ஆரம்பக் கல்வியை முழுமையாக, பகுதியாக இழந்தவர்களாகவே காணப்படுகின்றனர்.

(5) பெரும்பாலான மாணவர்களிடையே எழுத்தாற்றல், வாசிப்புத்திறன் தொடர்பான குறைபாடுகள் காணப்படுகின்றன. இவை அம்மாணவர்களின் தொடர் கல்வியில் மிகுந்த பாதிப்பை ஏற்படுத்துகின்றது.

(6) தற்போது தீவகப்பிரதேசத்தில் கற்கும் மாணவர்களின் பெற்றோரில் பெரும்பாலோர் தொழில் அற்றவர்களாகவோ அல்லது கஷ்ட ஜீவனம் நடத்துபவர்களாகவோ தான் உள்ளனர். இதனால் மாணவர் போஷாக்கு தொடர்பான பிரச்சினைகளையும் எதிர்நோக்குவது அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

இது போன்ற காரணங்களை முன்வைக்கலாம். அது மட்டுமல்லாமல் மாணவர் கல்வி மேம்பாடு நேரடியாகத் தொடர்புறுகின்ற ஆசிரியர்களில் மிகப் பெரும்பான்மையானோர் வலிகாமப் பகுதியில் இருந்து பல சிரமங்களின் மத்தியிலேயே பிரயாணம் செய்து பணிக்கு வருகின்றனர். இதனால் பயன் மிக்க கற்றல் நேரத்தில் பல மணிகள் வீணாக்கப்படுகின்றன. அத்தோடு மேலதிக கற்பித்தல் பணிகளில் ஈடுபடவும் ஆசிரியர்களுக்கு வாய்ப்பு இருப்பதில்லை. இது கற்றல்-விருத்தியில் கடுமையான தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது.

ஆசிரியர்கள் தொடர்பான பிரச்சினைகளும் இங்கு முக்கியம் பெறுகின்றன. தீவகப் பிரதேசத்தில் கற்பிக்கும் ஆசிரியர்களில் பெரும்பாலானவர்கள் இப்பிரதேசத்தில் நீண்டகாலமாகவே பணியாற்றுகின்றார்கள். நீண்ட காலமாக கஷ்டமான பிரதேசத்தில் கற்பிப்பதனால் ஆசிரியர்கள் உடல், உளத்தாக்கங்களினால் பாதிக்கப்பட்டவர்களாகவே உள்ளனர். புதிதாக நியமனம் பெறுவோரும் தீவகப் பகுதிக்கு கடமை புரிய பின்னடிப்போராகவேயுள்ளனர். இவ்விடயங்களில் முறையான கொள்கைகள் ஏதும் பின்பற்றப்படுவதாகவும் இல்லை. இவற்றால் கல்விச் சீர்திருத்தப்பணிகளிலும் தாக்கம் ஏற்படுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

க.பொ.த. (உ/த) வகுப்பில் கற்பிக்கும் ஆசிரியர்களும் தமது கல்வி வயதிலேயே தனித்தியங்க முடியாத நிலையும், ஏனைய வலயங்களைச் சார்ந்து இருக்க வேண்டிய நிலைமையும் அவதானிக்கப்படுகின்றது.

கல்வி முகாமையாளர் தொடர்பான பிரச்சினைகளை நோக்குவோம் எனின்,

(1) தீவகப் பிரதேசத்தில் இருந்து இடமாற்றம் பெற்றுச் செல்லும் ஆசிரியர்களுக்குப் பதிலீடாகப் புதிய ஆசிரியர்களைப் பெறுவதில் எதிர் நோக்கும் இடர்பாடுகள்.

(2) இவை தவிர பௌதிக வளங்கள் தொடர்பாக எதிர் நோக்கும் பிரச்சினை.

(3) புதிதாக நியமனம் பெறும் ஆசிரியர்களை தீவகத்திற்குப் பெறுவதில் எதிர் நோக்கும் பிரச்சினை.

அ) உதாரணமாக தற்போது தீவகப் பிரதேசத்தில் காணப்படும் மாணவர் தொகையுடன் ஒப்பிடும் போது பாடசாலைக் கட்டடங்கள் போதுமானவையாக இருப்பினும் அவை இடிந்து சீரழிந்த நிலையிலேயே காணப்படுகின்றன.

ஆ) புதிய கல்விச் சீர்திருத்தத்திற்கு ஏற்றவாறான விஞ்ஞான ஆய்வு கூடம், செயற்பாட்டு அறைகள், மூடியவகுப்பறைகள், நூலக வசதிகள் போன்றவற்றில் காணப்படும் குறைபாடுகள்.

போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவற்றைப் புதிதாகவோ, சீரமைத்தோ வழங்குவதில் தீவக கல்வி முகாமை இடர்பாடுகளை எதிர்நோக்குகின்றன.

(4) தீவகக் கல்வி வலயமானது ஏனைய வலயங்களைப் போலன்றி தனித் தனித் தீவுகளாகக் காணப்படுகின்றமையால் கல்விச் சீர்திருத்தப் பணிகளை மேற்பார்வை செய்வதில், ஒன்றிணைப்பதில் பல சிரமங்கள் எதிர் நோக்கப்படுகின்றன.

(5) ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் பாடத்துறைகளுக்காக தொண்டர் அடிப்படையில் ஆசிரியர்களை தெரிவு செய்வதானாலும், அதற்குத் தராதரமுள்ளவர்கள் இப்பகுதிகளில் வதிபவர்களாக இல்லை. இவர்களைக் கூட ஏனைய கல்வி வலயங்களில் இருந்தே தெரிவு செய்ய வேண்டியுள்ளது.

(6) முக்கியமான பாடத்துறைகளுக்கான பாட ஆலோசகர், உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவிகளுக்கான ஆளணியினரைத் தேர்வு செய்வதில் எதிர் நோக்கும் இடர்பாடுகள்.

(7) க.பொ.த. (உ/த) வகுப்புகளைப் பொறுத்தவரை ஒப்பீட்டளவில் குறைந்தளவு மாணவர்களே உள்ளனர். எனினும் அவர்களுக்குத் தேவையான பாடத்துறைசார் பட்டதாரி ஆசிரியர்கள் கணிசமானளவு பயன்படுத்தப்படுவதனால் இடை நிலைக்கல்வி பெறும் மாணவர்களுக்கான ஆசிரியர்களை நியமிப்பதில் உள்ள இடர்பாடு என நோக்கலாம்.

இக்கட்டுரையில் குறிப்பிடப்பட்ட பிரச்சினைகளுடன் வேறு பல சிக்கற் காரணிகளும் கல்விச் சீர்திருத்தத்தை முன்னெடுப்பதில் செல்வாக்குச் செலுத்துகின்றன. இப்பிரச்சினைகளைக் கையாள்வதற்கான பல முன்மொழிவுகளை முன்வைக்கலாமெனினும் தற்கால சூழ்நிலையில் அவை எந்தளவிற்கு பயனுறுதித்தன்மையுடையனவாக இருக்கும் என்பதே எம்முன் எழும் வினா.



படிப்பகம்

www.padippakam.com



# அதிபரும் செயற் திட்டங்களும்

## எமது கல்லூரியில் ஒரு நோக்கு:-

ஒரு பாடசாலையின் வளர்ச்சி அதிபரில் தங்கியுள்ளது. அது மட்டுமல்ல பாடசாலை மாணவரின் கல்வி விருத்திக்காக மேற்கொள்ளப்படும் செயற் திட்டங்களிலும் தங்கியுள்ளது. இதற்கு அதிபர் பல செயற் திட்டங்களை முன்வைக்க வேண்டும். இவை அவரவர் ஆளுமைக்கேற்ப வேறுபடலாம்.

எமது பாடசாலை இடம்பெயர்ந்து 6 ஆண்டுகளுக்குப் பின் சொந்த ஊருக்குத் திரும்பியபோதும் சொந்தக் கட்டடத்தில் இயங்காத நிலையில் வேலணை கிழக்கில் கூட்டுப் பாடசாலையாக இயங்கியது. இது அதன் தனித்துவத்திற்குத் தடையாக இருந்தது. எமது பழைய மாணவர் சிலரினதும், சிரேஷ்ட ஆசிரியர்களினதும் விடா முயற்சியினாலும், முன்னாள் கல்விப் பணிப்பாளர் அமரர் திரு க.இரத்தினராசா அவர்களின் வேண்டுதலினாலும் நான் அதிபர் பொறுப்பை ஏற்றேன். 24.04.1997 இல் சரஸ்வதி வித்தியாலயத்தில் எமது பாடசாலை தனித்துவமாக இயங்கத்தொடங்கியது. அன்றிலிருந்து பாடசாலையின் வளர்ச்சிக்கு பல செயற்திட்டங்களை திட்டமிட வேண்டியதாயிற்று.



இடம் பெயர்ந்து குடியேறிய பெற்றோரிடமும் நிதியுதவி பெறமுடியாத நிலை. மாணவரிடமும் வசதிக்கட்டணம் அறவிட முடியாத சூழ்நிலை. எமது பழையமாணவர் சங்கத்துப் பிரான்ஸ் கிளை அங்கத்தவர் திரு.அ.தேவதாஸ் அவர்கள் சொந்த ஊர் வந்து திரும்பிய போது பாடசாலை இடர்பாடுகளை நேரில் பார்த்துச் சென்றதன் மூலமும், கனடாக் கிளையின் திரு எஸ்.இளஞ்செழியன் அவர்கள் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு வாழ்த்தியதுடன் தாம் ஆற்றக்கூடிய உதவிகள் பற்றிக் கேட்டதும் எம்மை உற்சாகப்படுத்தியது. இவர்களது ஊக்குவிப்பு எமது பாடசாலையின் வளர்ச்சிக்கு பல்வேறு செயற் திட்டங்களை திட்டமிட்டுச் செயற்படுத்த வழிகோலியது.

மாணவர் வளர்ச்சிக்கு பல்வேறு திட்டங்கள் திட்டமிடப்பட்டன. பின் தங்கிய மாணவரின் மொழிவிருத்திச் செயற்திட்டம், உடல் உள விருத்திக்கான உள்ளக வெளிக்கள விளையாட்டுக்களுக்கு ஊக்குவிப்புத்திட்டம், மாணவர்கள் வரவின்மையைக் குறைப்பதற்காகவும் தொகையினை அதிகரிப்பதற்கான திட்டம், மாணவர்கள் சோர்வின்றிக் கற்பதற்கான போசாக்கு உணவுத்திட்டம், கற்றலுக்கான நூலக அபிவிருத்தித் திட்டம், நவீன கற்றல், கற்பித்தல் எலக்ரோனிக் சாதனங்களுக்கான திட்டம், வறிய மாணவர்களுக்கு உதவித்திட்டம், புலமைப் பரிசில் திட்டம், ஆசிரியர் நலன் காக்கும் திட்டம், ஆசிரியர் ஓய்வு அறை செயற்திட்டம், எமது சொந்தப் பாடசாலையை பாதுகாப்புப்படையினரிடமிருந்து மீட்பதற்கான செயற்திட்டம் போன்றன வகுக்கப்பட்டன. அவற்றுக்கான திட்டப் படிகளை அமைத்து, நிதித் தேவைகளைக் கணித்து அவற்றின் பிரதிகளை ஒவ்வொரு கிளைச் சங்கங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டன.

வெளிநாட்டுப் பழையமாணவர் சங்கக் கிளைகள் நாம் முன் வைத்த மேற்படித் திட்டங்களைக் கவனத்தில் கொண்டு சிலவற்றுக்கு எமக்கு உதவி வருவது பாராட்டத் தக்கது. பிரான்சுக் கிளை மொழித்திறன் விருத்தி, நூலக விருத்தி, உள்ளக விளையாட்டுக்கள் விருத்தி ஆகிய திட்டங்களை ஏற்று அதற்கான நிதியுதவியை ஒரு ஒழுங்கு முறையில் செய்து வருகின்றது. கனடாக் கிளை போசாக்கு உணவுத்திட்டத்தை பொறுப்பேற்று நடைமுறைப் படுத்தியது. அவுஸ்திரேலியா சிட்னிக் கிளை வகுப்பு ரீதியிலான மாணவர் புலமைப் பரிசில் திட்டத்தைச் செயற்படுத்தி வருகின்றது. மெல்போன் கிளையும் லண்டன் கிளையும் நிதியுதவி செய்துள்ளன. சென்ற வருடங்களில் பொன்விழா,பரிசுத் தினம், கணனி அறை, இல்ல விளையாட்டுப் போட்டிகள் போன்றன பழைய மாணவர் சங்க நிதியுதவியினால் சிறப்பாக நடைமுறைப் படுத்தப்பட்டன.

மேற் சொல்லப்பட்ட செயற் திட்டங்களினாலும் சரஸ்வதி வித்தியாலயத்தில் இயங்கிய எமது பாடசாலை 27.08.1998இல் தனது சொந்தக் கட்டடத் தொகுதியின் பிரதான வீதிக்குத் தெற்காக உள்ள பகுதியை பாதுகாப்புப்படையினரிடம் பெற்று தனது சொந்த இல்லத்தில் எட்டு வருடங்களுக்குப்பின்னராவது செயற்பட்டு வருகின்றது. தீவகத்தில் மக்கள் தொகை குறைவாக உள்ள போதிலும் தரம் ஆறுக்குமேல் 460 மாணவர்கள் இன்று கற்கின்றார்கள். க.பொ.த. உயர்தர வகுப்புகளில் 70 மாணவர்களுக்கு மேல் கல்வி பயின்று வருகின்றார்கள். விரைவில் எமது கட்டடத் தொகுதிகள் யாவும் கிடைக்குமென எதிர்பார்க்கின்றேன். கிடைக்குமாயின் இன்றைய பல்வேறு தடைகள் நீக்கப்பெற கல்லூரி துரித வளர்ச்சியடையும் என்பது திண்ணம்.

அதிபரினால் முன்வைக்கப்பட்ட செயற் திட்டங்களிற் பல நடைமுறைப் படுத்தப் படாமல் உள்ளன. சில திட்டங்களையே பொறுப்பேற்று கிளைச்சங்கங்களால் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. பிரான்சுக் கிளையின் "வித்தியாலயம் 2000" மலரில் அதிபரினால் முன்வைக்கப்பட்ட திட்டங்கள் என்பதற்குப் பதிலாக செயற்படுத்தப் படுகின்ற இன்றைய திட்டங்கள் என நடைமுறைப்படுத்தப்படாத திட்டங்களையும் சேர்த்து தவறுதலாக குறிப்பிடப் பட்டுள்ளது. இது தற்செயலாக ஏற்பட்ட தவறுதலாகவே கருதுகின்றேன். அத்தகைய நடைமுறைப் படுத்தப்படாத திட்டங்களை நிறைவேற்ற பழையமாணவர் கிளைச் சங்கங்கள் மேலும் முன்வரவேண்டும். இவ் வருடம் கனடாக் கிளையின் ஏற்பாட்டில் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் வெள்ளிக்கிழமை பிரார்த்தனைக் கூட்டங்களுக்கும் பாடசாலை நிகழ்ச்சிகளுக்கும் பயன் தரும் வகையில் ஒலி பெருக்கி அமைப்புப் பெற்றுக்கொள்ளப்பட்டது. பிரான்சுக்கிளை தனது நூலக விருத்தித் திட்டத்தின கீழ் கேட்போர் கூடத்திற்கு மாணவர்கள் பயன்பாட்டிற்கென டெக், தொலைக்காட்சிப் பெட்டியும் வாங்கப்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com



**செயற் திட்டங்களுக்கு 1997 ஏப்ரல் 24இல் இருந்து பழையமாணவர் சங்கக் கிளைகளின் நிதியுதவி:-**

1) கொழும்புக்கிளை
 * சரஸ்வதி வித்தியாலயத்தில் இயங்க தொடக்கச்செலவிற்காக ரூபா 20,000.00
 * முன்னாள் அதிபர் அமரர் தம்பு ஞாபகார்த்த புலமைப் பரிசில் நிதி அவர்களின் நேரடித் தொடர்பு

2) கனடாக்கிளை
 * ஆனந்தராசா நிதி 37,252.65
 * போசாக்கு உணவுத் திட்டம் 52,400.00
 52,500.00
 53,160.00
 * பொன்விழா பரிசுத் தினம் 71,400.00 266,712.65

3) பிரான்சுக்கிளை
 * மொழித்திறன் விருத்தி,விளையாட்டுத் துறை 50,000.00
 * நூலக விருத்தி 58,600.00
 * பொன்விழா பரிசுத் தினம் 65,900.00
 * தொலைக் காட்சி, டெக் 70,700.00 245,200.00

4) அவுஸ்திரேலியா சிட்னிக்கிளை
 * ஆனந்தராசா நிதி 15,000.00
 * மாணவர் புலமைப் பரிசில் திட்டம் 72,000.00 87,000.00

5) மெல்போண் கிளை
 * நிதி வரவு 37,000.00

6) லண்டன் கிளை
 * நிதி வரவு 43,350.00

7) கனடா பழைய மாணவர் நலன் புரிச் சங்கம்
(இந் நிதி இதுவரை எது வித செயற்திட்டங்களுக்கும் சேர்த்துக்கொள்ளப்படவில்லை) 252,500.00

1997க்கு முன்னர் இயங்கிய பழைய மாணவர் சங்க நிதி 1995 ஒக்டோபர் இடம் பெயர்ந்த நிலையில் இன்னமும் ஒப்படைக்கப்படாது வங்கிச் சேமிப்பிலே உள்ளதால் தற்போதைய செயற் திட்டங்களில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை.

செயற்திட்டங்களுக்கான நிதி வரவுகள், செலவுகளுக்கான நடைமுறைகளை சரிவர மேற்கொள்ளுவதற்கு பாடசாலையில், பாடசாலை நிர்வாகத்திற்கு, அதிபருக்குத் துணையாகப் பலமாக பழைய மாணவர் சங்கம் இருக்கவேண்டும். அவ்வகையில் பாடசாலைப் பழையமாணவர்சங்கம் கொறுப்பான கடமைகளைச் செய்து வருகின்றது. வரவுகள், செலவுகள் இச்சங்கத்தின் அனுசரணையுடனே மேற்கொள்ளப்படுகின்றது.

கல்லூரியின் வளர்ச்சி, எவ்வகையான செயற்திட்டங்கள் திட்டமிடப்படுகின்றன, அவற்றில் எவை நடைமுறைப்படுத்தப்படுகின்றன என்பதிலேயே தங்கியுள்ளது. நல்ல செயற் திட்டங்களை காலத்தின் சூழ்நிலைக்கேற்ப தருகின்றோம். அதனை நடைமுறைப்படுத்தி உதவுவது பழைய மாணவர்களின் பொறுப்பேயாகும்.

**- கு. கணேசலிங்கம்**
அதிபர்.
02.11.2000



படிப்பகம்

www.padippakam.com



# பிரதி அதிபரின் வாழ்த்துச் செய்தி



வேலணை சேர்/வைத்திய லிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கங்கள் பரந்து பட்ட உலகின் பல பாகங்களிலும் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றன. அவற்றுள் சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கும் கிளைகளில் ஒன்று "வேலணை மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் சங்க பிரான்ஸ் கிளையினர் எனில் மிகையாகாது.

எங்கள் கலாச்சாரத்தையும் பண்பாட்டையும் பேணும் வகையிலே, பிரான்ஸ் நாட்டிலே நிகழ்த்தும் ஒன்று கூடலிலும், "மலர்2001" வெளியீட்டு விழாவிலும் கலந்து கொள்வதான எண்ணக்கிடக்கையில், கடந்த பல வருடங்களாக இன்னலுற்றுக்கொண்டிருக்கும் தாங்கள் கற்றுயர்ந்த பாடசாலை அன்னைக்கு ஆற்றிய உதவிகளை நன்றியுடன் கூறுவதில் பெருமிதம் கொள்கிறேன்.

எமது பாடசாலை 1991ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் வேலணையிலிருந்து இடம் பெயர்ந்து யாழ்/கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் அதிபர் அமரர் பொ.கேதாரநாதன் தலைமையில் இயங்கிக்கொண்டிருந்த வேளையிலே பாடசாலை தனித்து இயங்க வேண்டும் என்ற உந்துதலால் அதிபர் ஆசிரியர்களின் பெரு முயற்சி காரணமாக கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாணம் அரசடி வீதியில் அமைந்திருந்த வீட்டுடன் கூடிய வளவைப் பெற்று தற்காலிகமாக கொட்டில்களை அமைத்து இயங்க ஆரம்பித்த வேளையிலே அதிபர் அமரர் பொ.கேதாரநாதன் ஓய்வு பெற திரு. சு. கலாதரன் அதிபர் பதவியைப் பொறுப்பேற்று பாடசாலை வளாகத்தினுள் மேலும் பல தற்காலிக கொட்டில்களை அமைத்து நகரப் பாடசாலைகளோடு கல்வித்துறையிலும், விளையாட்டுத்துறையிலும் போட்டியிடும் அளவிற்கு செயற்பாடுகள் அமையும் வண்ணம் இயக்கினார். இவற்றையெல்லாம் திறம் படச் செயற்படுத்துவதற்கு, காலமறிந்து நிதியுதவி அளித்த பிரான்ஸ் கிளையினரின் சங்க நிர்வாகத்தினர் குறிப்பாக நிர்வாகத்திலிருந்த திரு.யா.பாலகிருஸ்ணன், திரு.சு.கருணாநிதி போன்றோர் பாராட்டப்பட வேண்டியவர்களே. மீண்டும் எமது பாடசாலை சொந்த இடத்திலே 1996 ஆம் ஆண்டு இயங்க ஆரம்பித்த பின்பும், இன்று சொந்தக் கட்டடத்திலே இயங்கிக் கொண்டிருக்கும் வேளையிலும், பாடசாலையின் எல்லாவித செயற்பாடுகளும் செவ்வனே நடைபெற பேருதவி புரிந்து வருகின்றனர். அண்மையிலும் பாடசாலை மாணவர்களின் நலன் கருதி தொலைக் காட்சிப் பெட்டி, டெக் முதலானவற்றைப் பெற்றுக்கொள்ள நிதியுதவி அளித்த திரு.நா.மகேந்திரன் தலைமையில் இயங்கும் பழைய மாணவர்சங்க பிரான்ஸ் கிளையினருக்கு பாடசாலைச் சமூகத்தினர் என்றும் நன்றியறிதல்

நிகழ்வுறும் ஒன்றுகூடலும், மலர் 2001 வெளியீட்டு விழாவும் இனிதே நடைபெற எனது நல்வாழ்த்துக்கள். சங்கம் மென்மேலும் வளர்ச்சியுற்று தாங்கள் கற்றுயர்ந்த கல்லூரித் தாய்க்கு தொடர்ந்தும் சேவைகள் புரிய பாடசாலையில் எழுந்தருளியுள்ள சிவகாம சமேத நடராஜப் பெருமான் அருள் பாலித்திடுவார்.

– **பொன். ஈசன்** B.Sc.



படிப்பகம்

www.padippakam.com



# அன்னையின் மடியிலிருந்து.....

அன்னையின் பிரான்ஸ் கிளையினர் "வித்தியாலயம் 2001" மலர் வெளியிட இருப்பதை அறிந்து மகிழ்வுறுவதோடு எமது ஆசிரிய குழாம் சார்பான வாழ்த்தையும் தெரிவிக்கின்றேன். இப்படியான வெளியீடுகளுக்கு வாழ்த்துச் செய்தியோ அல்லது வேறு ஆக்கங்களோ அனுப்பும் எந்தத் தகுதியோ அல்லது திறமையோ எனக்கில்லை. ஆனாலும் இரண்டே இரண்டு தகுதிகளைக் கொண்டு பின்வரும் விடயங்களை உலகம் முழுவதும் பரந்து வாழும் அன்னையின் புதல்வர்களுக்கு விடுக்க விரும்புகின்றேன். தகுதிகளில் ஒன்று: நானும் அன்னையின் புதல்வன். இரண்டு: இன்றும் அன்னையின் மடியிலிருந்து சேவையாற்றுபவன்.

அன்னையின் புகழ், கீர்த்தி, இவள் எமது கிராம மக்களுக்கு ஆற்றிய சேவை போன்றவற்றை யாருக்கும் யாரும் சொல்லித் தெரியவேண்டியதில்லை. அன்னையின் புதல்வர்கள் உலகம் முழுவதும் பரந்து உயர்பதவிகள் மற்றும் பல்வேறுபட்ட துறைகளில் பல்வேறுபட்ட தொழில்களை திறமையாக ஆற்றிவருவதிலிருந்து அறியலாம். ஆனாலும் நாம் எல்லோரும் சேர்ந்து அன்னையின் உயர்ச்சிக்கு இன்றைய நிலையில் சிறிதளவேனும் உழைக்க வேண்டியது அவசியமாகும்.

அன்னை இன்றைய நிலையில் நாட்டுச் சூழல், எமது கிராமச் சூழல், நிர்வாகக் கட்டமைப்புச் சூழல் போன்றவற்றால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளாள். இவற்றை சொந்த மண்ணில் இருக்கும் அன்னையின் சமூகத்துடன் சேர்ந்து வெளிநாடுகளில் இருக்கும் நீங்களும் உழைத்தால் நிச்சயம் அன்னை ஓரளவு தெம்பு பெறுவாள். அந்த வகையில் இவர்களுள் சிலர் அவர்கள் வாழும் நாடுகளில் அன்னையின் பெயரால் கிளைகள் அமைத்து அன்னைக்கும் அன்னையின் இன்றைய புதல்வர்களுக்கும் உதவி வருவது எல்லோரும் அறிந்ததே. உங்களின் பாசமும் அன்னைக்கு உதவுவதில் நீங்கள் கொண்டுள்ள பற்றையும் உணர்வுகளையும் நாம் எல்லோரும் நன்றாக புரிந்து கொண்டுள்ளோம்.

அன்னையிடம் அவ்வப்போது அதிபர்களாக, ஆசிரியர்களாக, ஊழியர்களாகப் பலர் வந்து போவார்கள். இவர்களில் சிலரே உயர் இலட்சியத்துடனும், தியாக மனப்பான்மையுடனும் சேவையாற்றி அன்னையின் புதல்வர்களின் மனதில் அவ்வப்போது ஆழமாக வேரூன்றி இன்றும் என்றும் தெய்வங்களாகக் காட்சி கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்நிலை காலத்துக்குக்காலம் ஆளுக்கு ஆள் வேறுபடலாம். ஆனாலும் அன்னையின் வாழ்நாளில் இந்நிலை தொடரும்.

இன்றைய நிலையில் அன்னையைத் தேற்றுவதற்கு நாம் உதவும் போதும், திட்டங்களை வகுத்துச் செயற்படும் போதும் நாட்டு, கிராம, உள் கட்டமைப்புச் சூழல்களை நன்றாக ஆராய்ந்து பல கோணங்களிலிருந்து நோக்கி பொருத்தப்பாடுடைய அவசர தேவைகள் என்ன? நீண்ட நாட்களுக்கு நிரந்தரமாக அமைக்கக் கூடியன எவை? என்பனவற்றை பாடசாலை சமூகத்தடன் கலந்தாலோசித்து இவை எவ்வாறு செயற்படுத்தப்படுகின்றது? எத்தனை சதவீதம் மாணவர்களுக்குப் பயன்படுகின்றது போன்றவற்றைச் சில குழுக்கள் மூலம் கண்காணித்து நடைமுறைப்படுத்தினால் நிச்சயம் அன்னை தற்போதைய நிலையிலிருந்து சிறிதளவேனும் தெம்பு பெறுவாள் என்பதும் அன்னை ஆரோக்கியமாகத் தனது சேவையைத் தொடர உதவும் என்பதும் எனது எண்ணம்.

அன்னையின் ஆரம்ப காலத்திலிருந்து அவளின் பெருமைகளையும் கீர்த்திகளையும் கேட்டு அறிந்தவன் என்ற வகையிலும் இடப்பெயர்வுக்கு முன் கூட இருந்து பார்த்தவன் என்ற வகையிலும் தற்போது அன்னையின் மெலிவைக் கூட இருந்து பார்த்துக் கொண்டிருப்பவன் என்ற வகையிலும் எல்லா நாடுகளிலும் உள்ள எல்லாக் கிளைப் புதல்வர்களுக்கும் ஓர் அன்பான வேண்டுகோள்: அன்னையின் பெயரால் நாம் பிரிவுகளை வளர்ப்பதை விட்டு ஒன்று பட்டு உழைப்பதோடு வீண் செலவுகளையும் ஆடம்பரங்களையும் தவிர்த்து அன்னைக்கு ஊட்டம் கொடுப்பதிலேயே எமது முழு வளங்களையும் பயன்படுத்த வேண்டும் என்று பணிவன்புடன் கேட்டுக் கொண்டு முடிக்கிறேன்.

- பழனிநாதன். ஆரூரன் -
(அன்னையின் புதல்வனும் சேவையிலுள்ள உதவி ஆசிரியரும்)



படிப்பகம்

www.padippakam.com



KUMAR SHOP

80, Bld BARBES, 75018 PARIS
M°: Marcadet Poissonniers
Tél.: 01 42 59 35 10

குமார்ஸ் ஜுவல்ஸ்
KUMARS JEWELS
193, Rue Fg. St. Denis - 75010 PARIS
TP : 01 42 05 41 36

DAYANA TELECOM SERVICE
197, Rue Fg. St. Denis
75010 PARIS
TP : 01 53 26 35 80

SINGAPORE ECHANGE CO
38, Rue Saint Quentin
75010 PARIS
TP : 01 48 74 48 21



படிப்பகம்

www.padippakam.com



# ஆசிரியர்க்கு ஓர் தினம்

ஆண்டிலே பல தினமாம் - அதில்
ஆசிரியர்க்கு ஓர் தினமாம்
எம் பள்ளி ஆசிரியர்க்கு ஓர் தினமாம்
அ வென்று சொல்லவைத்த ஆசான்களுக்கு
எம் வணக்கம்.

மடமையை ஒழித்து
அறிவினை ஊட்டிய
எம் குல தெய்வங்களே
உங்கள் சேவையினை
எப்படிநாம் போற்றுவது
எவ்வாறு நாம் புகழ்வது.

எம் பள்ளிக்கு உவந்தளித்த
உடற்பயிற்சியாம் உளநல
எமக்குத் தேவை - என்றுமாம்
உடலுறுதியாய் நிற்பவராம்
எம் சிவபாலன் - இவ் ஆசிரியர்
சிவனுக்கு உரிய அத்தனை குணமும் அமையப் பெற்றவர்

எம் கல்லூரி அதிபராம் கணேசலிங்கம் - அவர்
கண்ணியம் கட்டுப்பாடு கடமை
இம் மூன்றினையும் கருத்தில்
கொண்டு திகழ்பவராம் எமக்கு
கிடைத்த ஓர் உதய சூரியனாம் -அவர்
எம் வையகத்தில் வாழ்நாள் முழுக்க
சேவையாற்ற விரும்பினவராம்
எம் உப அதிபர் ஈசன்
அவர்கள் - அவர் முகம்
என்றும் ஈஸ்வர மயமான
ஒளியே பிரகாசிக்கும்

எம் கல்லூரி சக ஆசிரியர்களும்
எமக்கு கிடைத்த அரும் பெரும் முத்து

இக்கால சூழ்நிலைகளிலும்
சோதனைச் சாவடிகளையும் தாண்டி
எமக்கு போதனை செய்யும் எம் இனிய
தெய்வங்களே வாழ்க வாழ்க வளமுடன்

- சி. சசிகலா
கலைப்பிரிவு-13



படிப்பகம்

www.padippakam.com



# தீவக அபிவிருத்தியின் திறவுகோல்



- நா. க. சிவராமலிங்கம்
பழைய மாணவன் - முன்னாள் ஆசிரியர்

சீரைத் தேடின் ஏரைத்தேடு என்றனர் எம் முன்னோர். சுழன்றும் ஏர்பின்னது உலகு என்றார் வள்ளுவர், உண்டி கொடுத்தவர் உயிர் கொடுத்தவர் ஆவர். உழவுத் தொழிலின் உயர்வை இவை உணர்த்தி நிற்கின்றன. மனிதனின் அத்தியாவசியத் தேவைகளில் ஒன்றான உணவை உதவும் உழவன் உபகாரி எனபடுகின்றான், விஞ்ஞானத்தின் விருத்தியினால் விவசாயமும் விருத்தியடைந்துள்ளது கண்கூடு. உழவன் உலகத்தவர்க்கு உயிர்நாடியாக விளங்குகின்றபோதிலும் அறிவை வழங்கும் ஆசான் அவனிலும் மேம்பட்டவன் ஆவான். உடலும் உயிரும் அளிக்கும் பெற்றோருக்கு அடுத்தபடியாக வாழ்வின் உயர்வுக்கு அடித்தளமான அறிவைவழங்கும் ஆசிரியன் விளங்குகின்றான். பெற்றோருக்கு அடுத்த படியாக குருவை ஏற்றிப் போற்றுவது எமது மரபு. குரு இல்லாவித்தை பாழ் என்பதனால் குருவின் அவசியம் உணர்த்தப்பட்டுள்ளது. எனவே சீரைத் தேடின் சிறப்பான கல்வியைத் தேடு என்பதே இன்றைய கால கட்டத்தின் அறைகூவலாக உள்ளது. கல்வியே செல்வம் என்பதால் கல்வி அவசியமும் அத்தியாவசிய மானதாகவும் விளங்குவதுடன் ஏனைய செல்வங்களை அடையவும் எம்மை ஆற்றுப்படுத்துகின்றது. கல்வி சிறந்த நாடு எனும் பொழுது பெருமையும் பெருமிதமும் அடைகின்றோம். சென்றஇடமெலாம் சிறப்பைச் சேர்க்கும் கல்வியை வழங்கும் கல்விக்கூடங்களும் ஆசிரியர்களும் காலமெலாம் நினைவுகூரத்தக்கவர்கள். கண்ணெனத்தகும் எண்ணும் எழுத்தும் அறிவித்து எம்மை மண்ணில் திண்ணமாக வாழவைத்துள்ள கல்விச்சாலைகளையும் ஆசிரியப் பெருந்தகைகளையும் நம் நினைவில் நிலைக்கச்செய்ய வேண்டும் அத்திபாரத்தை மறந்து கட்டிடம் ஆரவாரமும் அகந்தையும் கொள்ளமுடியாது.

கடல் கோள்களினால் நிலப்பகுதி கடலுள் அமிழ்த்தப் படுவதும் கடல் பகுதிமேலே உயர்த்தப்படுவதும் இயற்கையில் ஏற்படும் நிகழ்வு என்பது புவியியலாளர் கருத்து. இதன் விளைவாக உருவான வையே தீவுகளாகும். இத்தகைய தீவுகள் யாழ்ப்பாண குடா நாட்டின் தென் மேற்கு திசையில் சிதறிக் காணப்படுகின்றன, நெடுந்தீவு, மண்டைதீவு, அனலைதீவு, எழுவைதீவு, லைடன்தீவு, புங்குடுதீவு, நயினாதீவு என்ற ஏழு தீவுகளும் சப்ததீவுகள் எனப்படுகின்றன. இவற்றுள் பெரியது லைடன் தீவு. சிறியது எழுவைதீவு. கடலால் பிரிக்கப்பட்டிருப்பது. இவற்றின் அபிவிருத்திக்கு பாதகமாக அமைந்துள்ள போதிலும் அவற்றின் கன்னித்தனமை பாது காக்கப்பட்டு வந்துள்ளது என்றே கூற வேண்டும். புங்குடுதீவுப் பாலமும் பண்ணைப்பாலமும் இவற்றை குடா நாட்டுடன் தரைவழியாக இணைத்துள்ளன. இது இவற்றின் அவிருத்திக்கான முயற்சி எனலாம். தீவக மாணவரின் இடப் பெயர்வுக்கும் இது வழிவகுத்தது .

தளராமுயற்சியும் உளமார நிறைந்த உறுதியும் உடையவர்களாக தீவக மக்கள் விளங்குவதால் ஊழையும் உட்பக்கம் கண்டு நாளை தமதாக்கியவர்கள் அவர்கள். வளம் குறைந்த சூழலை வாழ்க்கைக் களமாக அமைக்க நேரிட்ட போதிலும் தளம்பலில்லாமல் உளம்மகிழ்ந்து வாழ்த்து வந்தவர்கள் அவர்களது முன்னேற்றத்திற்கும் விருத்திக்கும் கல்விச்சாலைகள் பெருமளவில் கைகொடுத்துதவின, உழைப்பின்வாரா உறுதிகள் உண்டோ என்று வாழ்வில் ஏற்றம் கண்டு. பிறர் போற்ற வாழ்ந்தவர்கள். முயற்சியும் அன்பும் உபகாரமும் நட்பும் விருந்தோம்பலும் அவர்களது தனித்துவமான பண்புகள்,

யாழ் குடா நாட்டின் பகுதிகளில் கல்விக்கான அத்திபாரம் இடப்படும் முன்பே தீவுகளில் கல்விக்குரிய அடித்தளம் இடப்பட்டது எனலாம். குருகுலக் கல்விமுறை கல்வி அபிவிருத்தியின் முன்னோடி அங்கமாகும். மண்டைதீவு, வேலணை, கரம்பொன், நயினாதீவு, அனலைதீவு, நெடுந்தீவு ஆகியவற்றில் குருகுலக்கல்வி முறை இருந்து வந்தது குறிப்பிடத்தக்கது.
மாணவன் குருவினது வீட்டில் தங்கியிருந்து அவருக்கு பணிவிடை செய்து, கல்வி பெறுவதே குருகுலக்கல்விமுறை ஆகும். குரு மாணவனை அறிந்து, அவனது ஆற்றல்களை அறிந்து அவனை வழிப்படுத்தவும், நெறிப்படுத்தவும் இக்கல்வி முறை உதவிற்று இத்தகைய முறைசாராக் கல்விமுறையால் நன்மாணாக்கரும் நற்பிரசைகளும் உருவாக்கப்பட்டனர். குரு சிஷ்ய பரம்பரை ஒன்று உருவாகிற்று.

தீவகமக்களின் கல்வி வளர்ச்சியில் குருகுலக் கல்விமுறை (திண்ணைப்பள்ளிக் கூடங்கள்) தனியார் பாடசாலைகள், மிசனரி பாடசாலைகள், இந்து போட் பாடசாலைகள், அரசினர் பாடசாலைகள் முக்கிய பங்குவகித்தன. சில செல்வாக்கும் செல்வமும் மிக்க சிலரால் வேலணை, நயினாதீவு என்பவற்றில் தனியார் பாடசாலைகள் அமைக்கப் பட்டன. மிசனரிப்



படிப்பகம்

www.padippakam.com



பாடசாலைகள் வசதி குறைந்த மக்கள் மத்தியில் செல்வாக்கு பெற்றிருந்தன. அவர்களுக்கு கவர்ச்சியை ஊட்டி ஈர்த்து இழுத்தன மதமாற்றமும் அவற்றிற்கு போட்டியாக உருவாக்கப்பட்டவையே. இந்து போர்ட் பாடசாலைகள் சைவத்தையும், தமிழையும் வளர்ப்பதற்கு அமைக்கப்பட்டவை இவையாகும். பிந்திய காலகட்டத்தில் அரசினால் அரசாங்கப் படசாலைகள் அமைக்கப்பட்டன. ஆங்கில அறிவை விருத்தியாக்குவதற்கும் அரசஉத்தியோகத்தை பெறும் வாய்ப்பை ஏற்படுத்தவும் இவை அமைக்கப்பட்டன. தீவக மாணவர் பலர் உத்தியோக வாய்ப்பைப் பெறுதற்கு இவை உதவின. அடிமட்ட பொருளாதார நிலையில் இருந்த குடும்பங்களுக்கு அரசாங்க, இலிகிதர் பதவி ஒரு பெரும் பதவியாகும் என்றால் மிகையில்லை, நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாசாலை, நயினாதீவு தில்லையம்பலம் வித்தியாசாலை, அனலைதீவு சதாசிவ ஆங்கிலபாடசாலை. எழுவைதீவு முருகவேள் வித்தியாசாலை கரம் பொன் சண்முகநாதவித்தியாசாலை, சிறிய புஸ்பமகளிர் பாடசாலை, நாரந்தனை கணேசவித்தியாசாலை, சரவணை நாகேஸ்வரி வித்தியாசாலை, ஊர்க்காவற்றுறை அந்தோனியார் கல்லூரி, வேலணை சைவப்பிரகாசவித்தியாசாலை, புங்குடுதீவு கணேசவித்தியாசாலை, அல்லைப்பிட்டி பராசத்தி வித்தியாசாலை, மண்டைதீவு கார்த்திகேய வித்தியாசாலை என்பன தீவுகளின் முன்னோடிப் பாடசாலைகளாகும். தீவுகளின் முதற்பாடசாலை 1833ம் ஆண்டில் வங்களாவடி சந்திக்கு அருகாமையில் அமைக்கப்பட்டது.

இலவசக் கல்வியின் தந்தை என அழைக்கப்பட்ட கல்வி மந்திரி C.W.W. கன்னங்கரா அவர்களது, தொகுதி தோறும் ஆங்கிலப்பாடசாலைகள் அமைக்கும் திட்டம் பொதுவாக இலங்கைத்தீவு முழுவதிலும் குறிப்பாக யாழ்குடா நாட்டிலும் தீவுகளிலும் கல்வித்துறையில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது எனலாம். இலங்கையின் கல்வித்துறையில் புதுயுகம் ஒன்றை அவரது திட்டம். ஏற்படுத்தியது. தமிழ்மொழி மூலம் கல்வி பெற்றுவந்த தீவக மாணவர்கள் அன்னியமொழியான ஆங்கில மொழியைக் கற்கவும் அதில் பாண்டித்தியம் பெறவும் முடிந்தது. பணம் படைத்தவரின் ஏகபோக உரிமையாக இருந்த ஆங்கில மொழி மூலமான கல்வியை பாமர மக்களும் பெறுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டது ஒரு வரப்பிரசாதமெனலாம். அகலமானதும் ஆழமானதும், விரிவானதும் வேறுபட்ட துறைகளில் ஆனதுமான அறிவைப் பெறுதற்கு ஆங்கில மொழி உதவுகின்றது எனலாம். சர்வதேச மொழியான ஆங்கிலம் அறிவின் கதவை அகலத் திறந்துவிட்டது.

ஊர்காவற்றுறை தொகுதிக்கான ஆங்கில சிரேட்ட வித்தியாலயம் 1945ம் ஆண்டு நவம்பர் மாதம் வேலணையில் அமைக்கப்பட்டது. அதன் பின்னர் நெடுந்தீவு, நயினாதீவு, புங்குடுதீவு, மண்டைதீவு என்பவற்றில் ஆங்கில கனிட்ட வித்தியாலயங்கள் அமைக்கப்பட்டன. அனலைதீவில் சதாசிவ ஆங்கில வித்தியாலயமும் ஊர்காவற்த் துறையில் அந்தோனியார் கல்லூரியும் கரம்பொனில் சண்முகநாத வித்தியாலயமும். சிறிய புஸ்ப மகளிர் வித்தியாலயமும் இருந்தமையால் ஆங்கில வித்தியாலயம் அமைக்கும் தேவை அங்கு ஏற்படவில்லை. புலமைப் பரிசில் மாணவர்களைச்சேர்க்கும் வாய்ப்பு இருந்தமையால் நன்மாணாக்கரை பெறும் வாய்ப்பு வேலணை ஆங்கில சிரேட்டவித்தியாலயத்திற்கு ஏற்பட்டது. இவ்வித்தியாலம் அமைக்கப்பட்டதனால் இதுவரைகாலமும் தீவுகளில் கல்வித் துறையில் கோலோச்சி வந்த ஊர்காவற்றுறை அந்தோனியார் கல்லூயின் முக்கியத்துவம் குறைந்த தெனலாம். 52 மாணவர்களுடனும், 5 ஆசிரியர்களுடனும் ஆரம்பிக்கப்பட்ட எமது பாடசாலை. அதிபர் தம்புவின் பதவிக் காலத்தில் 1500 மாணவர்களுடனும் 50 ஆசிரியர்களுடனும் பெருவளர்ச்சி கண்டு பெரிய கல்லூரியாக விளங்கியது. அதன் அபரித வளர்ச்சியை சுட்டி நிற்கின்றது. 1945ம் ஆண்டு முதல் வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலையில் ஒட்டுக்குடித்தனம் நடத்திய எமது பாடசாலை 1955ம் ஆண்டு புதிய கட்டிடத்தில் குடிபுகுந்து மெருகும் மேன்மையும் பெற்றது. யாழ்ப்பாணத்து பெரிய கல்லூரிகளுடன் வைத் தெண்ணப்படும் தகுதிபெற்றது ஆங்கில மொழி வளர்ச்சியுடன் கணித விஞ்ஞானத் துறைகளும் வளர்ச்சி பெற்றன.

தீவுகள் தோறுமிருந்து 61 பாடசாலைகளில் தனிப்பெருகல்லூரியாக திகழ்ந்த எமது கல்லூரி பதினைந்து அதிபர்களினதும் பன்நூறு ஆசிரியப் பெருந்தகைகளினதும் சிறப்பான சேவையின் மூலம் தனது சேய்கள் கலை, கணிதம், விஞ்ஞானம், கணணி, தத்துவம், மெய்யியல், தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் பெருவளர்ச்சி கண்டது. ஆனால் பின்னாளில் காலத்தின் கோலத்தினால் அதன் சீலம் குறைந்து மக்களும் பழைய மாணவரும் ஓலமிட்டழவேண்டியநிலை ஏற்பட்டது. அரசன் எவ்வழி குடிகளும் அவ்வழி என்பதற்கேற்ப அதிபர் எவ்வழி ஆசிரியர்களும் அவ்வழி என்பதனால் ஆரம்பகால அதிபர் ஏ. கே. கந்தையாவின் பதவிக்காலத்திலும் அறிவிலும் ஆற்றலிலும் மிளிர்ந்த ஆசிரியர்களது துணையுடன் கல்லூரி சிறப்பான வளர்ச்சி கண்டது. அதிபர் தம்புவின் பதவிக்காலம் கல்லூரியின் பொற்காலம் எனலாம். அவரது பன்னீராண்டு அதிபர் சேவை பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டியது. அரசாங்க இலிகிதர்கள், பட்டதாரிகள் பொறியியலாளர், மருத்துவர் கணக்காளர். நில அளவையாளர் தொழில் நுட்பவியலாளர் தாதிகள் எனற பெருவிளைவுகண்டவர் அவர். அன்னாருடைய சேவையை மெச்சி வேலணை மக்கள் கல்லூரிவளாகத்தில் அவருக்கு உருவக்சிலை நிறுவியிருக்க வேண்டும். வேலணை மக்கள் அவர் பெயரில் புலமைப்பரிசில் நிதியம் ஒன்றை அமைத்து வறிய மாணவர்களுக்கு உதவி வருவது அவர்களது நன்றியுணர்வை வெளிக்காட்டி நிற்கின்றது பிள்ளைச் செல்வம் இல்லாத போதிலும் பிறர் பிள்ளைகளை பந்தமுடன் அணைத்து ஆதரித்து எந்த வேளையிலும் கல்விப் பணியில் ஈடுபட்டு அவர்களை அவையில் முந்தியிருக்கச் செய்தவர். அதிபர் ப. தம்பு அவர்கள் புகழுடம்பால் அவர் என்றும் வாழ்ந்து கொண்டிருப்பார்.

தாய் மொழி, போதனா மொழியாக் அமுலாக்கம் செய்யப்பட்டமை, அரசாங்கம் பாடசாலைகளை சுவீகரித்தமை, அரசியல்வாதிகளின் தலையீடு, 1991 இதில் லைடன்தீவு, புங்குடுதீவு, மண்டைதீவு ஆகியவற்றில் ஏற்பட்ட மக்கள் இடப் பெயர்வு எமது பாடசாலையின் வளர்ச்சியைப் பெரிதும் பாதித்தன. பெயர் மாற்றமும் உருமாற்றமும் ஏற்பட்டன. பௌதீக வளங்கள் இல்லா தொழிந்தன கல்விசார் வசதிகள் குறைந்தன. ஒரே கூரையின் கீழ் பல பாடசாலைகள் இயங்கும் துர்ப்பாக்கியநிலை ஏற்பட்டது. ஆசிரியர் மாணவர் தொகை வீழ்ச்சி அடைந்தது. பெயரளவில்தான் பாடசாலை இயங்கிவந்தது. பொன்விழாவை கொண்டாட முடியாது போய்விட்டது ஒருவளாகமாக வளரக்கூடிய வசதிகளுடைய எமது கல்லூரி இருப்பிடம் மாறி இன்னல்களையும் இடர்களையும் எதிர் நோக்கியமை கல்வியில் கரிசனையுடைய யாவரையும் கண்கலங்க வைத்தது இது



படிப்பகம்

www.padippakam.com



ஒரு சோதனைமிக்க காலப்பகுதியாகும் தமிழ் பகுதிகளின் துர்ப்பாக்கிய நிலைமை இதுவாகவே இருந்தது.

1996ம் ஆண்டிலிருந்து கல்லூரி மீண்டும் தனது ஆரம்ப இடத்தில் செயற்படுகின்ற போதிலும் முன்னைய வளமையும் செழுமையும் காணப்படவில்லை. மாணவர் தொகை ஆரம்பபாடசாலை நிலையில் தான் உள்ளது. ஆசிரியரின் தொகையும் வகையும் போதியதாக இல்லை. ஆய்வுகூடவசதி நூல்நிலைய வசதி. கல்விப் புறவசதிகள் என்பன திருப்திகரமானதாக இல்லை, இருந்தும் அந்தரிக்காமல் சொந்தமண்ணுக்கு வந்ததையிட்டு சிந்தையில் நிம்மதியும் நிறைவும் ஏற்பட்டுள்ளது. அதனை படிப்படியாக வளர்த்து முன்னைய. நிலைக்கு கொண்டு வருவது பழைய மாணவரினதும். நலன் விரும்பிகளினதும் முக்கிய முதற்கடமையாகும். அவுஸ்திரேலியா, ஐக்கியராச்சியம், கனடா, பிரான்ஸ் ஆகிய நாடுகளில். புலம் பெயர்ந்து வாழும் பழைய மாணவர்கள் தமது கல்லூரித்தாயை நினைவுகூர்ந்து, பல்வேறு வழிகளில் உதவி புரிந்து வருவது வரவேற்கத்தக்கது. இம்முயற்சி தளராமல் முனைப்புடன் தொடர்ந்தும் இடம் பெற வேண்டும் எனவே ஒன்றுபட்டு ஒற்றுமையாக உறுதியுடன் உழைத்து கல்லூரி அன்னையை உயர்த்துவோம், வாரீர் என அனைவருக்கும் அன்புக்கரம் நீட்டுவோம். தாயின் தளர்ச்சியைத் தாங்க வேண்டியது அனைவரின் பொறுப்பும் கடமையுமாகும். தீவுகள் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டிருக்கின்ற போதிலும் நிலவியல் நீரியல் அடிப்படையிலும், பொருளாதார ரீதியிலும் மக்கள் வாழ்க்கை முறையிலும் அது ஒரு தனியியலாகும். எனவே எல்லாத்தீவுகளையும் உள்ளடக்கிய பகுதி தீவகம் எனப்படுகின்றது. ஊர்காவற்றுறை தொகுதி என்றில்லாமல், தீவகத்தொகுதி என்பதே ஏற்புடைத்து. தீவக மக்களின் ஏற்றம் எழில் சுபீட்சம் யாவும் எம்கல்லூரியினாலேயே ஏற்படக் கூடியது. எனவே தீவக அபிவிருத்தியின் திறவுகோல் எமது கல்லூரிதான் என்பது சாலப் பொருந்தும்.

விஞ்ஞானம் வியத்தகு விந்தைகளைப் புரிந்துள்ள போதிலும் மெய்ஞானம் மெய்சிலிர்க்க வைக்கும் அற்புதங்களை ஏற்படுத்தியுள்ளது. அறிவுக்கா? அருளுக்கா? ஆற்றல் அதிகம் என்பது வாதமல்ல. அறிவு செயலற்ற நிலையில் ஆத்மீகம் வென்றுவிடுகின்றது. ஆதிபகவனை முதலாகவுடைய உலகம் சாதிசமயச் சண்டைகளாலும் நீதியற்ற செயல்களாலும் பாதிவழியிலே பாழாய் போய்விட்டது. உலகில் சண்டைகள் தொடர்வது ஒரு சாபகேடு. அறிவு உச்சியிலே கொழுந்து விட்டெரிந்தாலும் அது பரமனைப்பரவ மறுத்தால் பழுதுபட்டுப் போய்விடுகின்றது இதனாற்றான். வித்தியாலயங்களில் ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ன போலும். உலகில் சாந்தியும் சமாதானமும் நிலைக்கவும் சகல மக்களும் சுகமாகவும் சுபீட்சமாகவும் வாழ்வதற்கும் வரமருளும்படி எமது கல்லூரிமுன்றிலில்கோயில் கொண்டுள்ள சிவகாமியம்மை சமேத நடராசப் பெருமானை விநயமுடன் வேண்டிநிற்போம்.

'லோகா சமாஸ்தா சுகினோபவந்து'
'உலக மக்களனைவரும் சேமமாய்வாழ்க'

## வேலணை மத்திய மகா வித்தியாலயம்-பழைய மாணவர் சங்கம்- பிரான்ஸ் கிளையின் 2000ம் ஆண்டுக்கான வரவு செலவு விபரம்.

| வரவு | | செலவு | |
|---|---|---|---|
| 1999ம் ஆண்டு கையிருப்பு | 1152,50 F | வித்தியாலய விழா செலவு | 650,00 F |
| வரவு | 22710,00 F | 2000 விளம்பரம் ஈழமுரசு | 250,00 F |
| | | கர்ப்பிணிப் பெண்கள் நிதி TRO | 3000,00 F |
| மொத்த வரவு | 23862,50 F | வே.ம.ம.வி. TV - Deck ற்காக | 7000,00 F |
| | | தபால் செலவு | 559,00 F |
| | | | |
| | | மொத்த செலவு | 11459, 00 F |
| இறுதிக்கையிருப்பு | | | 12403,50 F |



படிப்பகம்

www.padippakam.com



க. வாசுதேவன்

# கந்தன் மணியோசையில்



*நாமமிடப்படாதவோர் பின்னணி அடிநாதமே நமது சிந்தனையின் ஊற்றுவாய். என்னைப் பொறுத்தவரையிலும் இப்பின்னணிக்கு இரண்டு பெயர்கள் இருக்கின்றன. சைவப்பிரகாசவித்தியாசாலை,வேலணை மத்திய மகா வித்தியாலயம் பாடங்களுக்கு எல்லைபோட்ட கந்தனின் மணியோசை ஆலயத்தில் தாலாட்டப்பட்ட பாடசாலை வாழ்க்கை பகலில் இரவுக்காவலாளி இரும்பிலறைந்து மணித்தியாலயங்கள் கரைவதை அறிவிக்கும் மணியோசையில் தொடரும் தூக்கம் இரவில்.*

**எனது** அக உலகின் தலைநகரத்து முட்கம்பி எல்லைகளில் அலரிப்பூக்களே மலர்ந்திருந்தன. ஆயினும் என்ன அதுவேயென் தலைநகரம்.
உன்னிலிருந்து நீங்கி வெகுதூரம் சென்றபின்னர்தான் நான் உன்னையும் என்னையும் உணர்ந்து கொண்டேன் என என் தலைநகரத்திற்கு ஒரு செய்தி அனுப்ப விரும்புகிறேன். வாசிக்கப் புத்தகமும், ஏடும், எழுதுகோலும் எனக்களித்தவர்களே எனது மூதாதையர்கள் என்று பிரகடனம் செய்ய எண்ணுகிறேன். எனது இருளைதுலக்கிய கைவிளக்கின் தீபங்களின் திரிகளுக்கு வாழ்த்துச் செய்தி அனுப்பவிரும்புகின்றேன்.

மாலை நேரங்களில் எழுதப்பழக அனுமதித்த எனது முற்றத்து மண்ணை என் மூளையிலிருந்து அடித்து வாரிச்செல்லும் வலு எக்காற்றுக்கும் இல்லையென எடுத்தியம்புகிறேன். இவையெல்லாம் ஒருபுறமிருக்க குடும்பம். பாடசாலை, ஆசிரியர்கள், சமூகம் என்பவற்றால் பதப்படுத்தப்பட்ட நானும், நாமும் இவற்றின் தன்மை பற்றியும். தாக்கங்கள் பற்றியும் ஆய்வு செய்வதும்,அறிவுறுத்துவதும் அவசியமானதெனவும் கருதுகிறேன். எம்மையும் எமது பின்வர இருக்கும் சந்ததியையும் முன்னேற்றபாதையில் இட்டுச் செல்வதற்கான முயற்சியாக இக்கருத்துகளை முன்வைக்கின்றேன்.

அறிதல் (connaître) என்ற வினைச்சொல்லைப் பிரஞ்சு மொழியில் உபயோகிக்கும்போது அச்சொல்லின் மூல அர்த்தம் (naî-tre avec) என்றாகின்றது. புலனனுபவங்கள் சிந்தனைமீது ஏற்படுத்தும் தாக்கங்களும், அவற்றின்பால் உருவாகும் புத்தனுபவங்களும் மனித உயிரினங்களை மீண்டும் மீண்டும் பிறப்பெடுக்க வைக்கின்றன. அறியும் மனித உயிர் மீண்டும் மீண்டும் பிறந்துகொண்டேயிருகின்றது. தனது புராதன அனுபவச் சேகரிப்புகளின் மீது புதிது புதிதாய் மீண்டும் மீண்டும் ஆக்கங்களை பிறப்பித்தவாறு மனித உயிர் தானும் பிறந்து கொண்டேயிருக்கின்றது.
கருப்பையிலிருந்தே, புலன்களின் உணர்திறன் செயற்பட ஆரம்பித்தவுடனேயே மனித உயிரின் அறிவும், ஆர்வமும் ஆரம்பித்துவிடுகின்றது. பின் அறிந்ததை அறிவிக்கும் ஆவலும் தோன்றிவிடுகின்றது. அதனால் மழலை தோன்றுகிறது. அதையடுத்து மழலையிலிருந்து மொழி தோன்றுகின்றது. மொழியென்பது மழலையின் முன்னேறிய வடிவமே தவிர வேறொன்றில்லை.

அறிந்ததை அறிவிக்கும் தேவையும், அறியும் ஆவலும் கூடியதால் பாடசாலைகள் தோன்றின. குருகுலங்கள் உருவாகின. ஆசிரியர்கள் என்றும் மாணவர்கள் என்றும் பிரிவுகள் உண்டாயின. எல்லா ஆசிரியர்களும் மாணவர்களே என்பதையும், எல்லா மாணவர்களும் கூட ஒருவகையில் ஆசிரியர்களே என்பதையும் உணர்வதற்கும், உணர்த்துவதற்கும் மௌனத்தடை விதிக்கப்பட்டிருந்தது. சமூகத்தின் எதிர்காலத் தலைவிதியை நிர்ணயம் செய்யும் மாபெரும் பொறுப்பை, அதிகாரத்தை ஆசிரிய-குருகுலம் கைப்பற்றிக் கொண்டது.

அறிதல் என்பது புதிதாய் பிறத்தல் என்றவகையில், யார்? எப்படி? எப்போது? எங்கே? பிறப்பதென்பதைத் தீர்மானிக்கும் தெய்வங்களாக தங்களை ஆசிரியர்கள் வரையறுத்துக் கொண்டார்கள். ஆரம்பத்திலே அறிவை மட்டுமே வெளிப்படுத்த நிர்ணயிக்கப்பட்ட ஆசிரியர்கள், காலப்போக்கில் அதிகாரத்தையும் வெளிப்படுத்திக் கொண்டார்கள். என்மகன் பட்டம் பெற்றுவிட்டான் என்று இறுமாப்படைய எண்ணிய குடும்பம், அந்த மகனைப் பதப்படுத்த ஆசிரியன் என்ற சிப்பாயை அழைத்து ஆணை கொடுத்தது. இந்தச் சிப்பாயோ தனது மூளையை பிரதியெடுத்து தனது கீழ்ப்படிந்தவனின் மூளையில் ஒட்டிவிட்டான். பட்டம் கிடைத்துவிட்டது.

குடும்ப-குருகுல ஒருமைப்பாட்டிற்குப் பலியாகிப்போனது மாணவனின் இயற்கைச் சுபாவமும், அவனின் சிந்தனைத் திறனுமே. குடும்ப-குருகுல ஒருமைப்பாட்டினாலும், அவற்றிக்கிடையேயான ஒருவகை வரட்டு ஒப்பந்தத்தாலும் உருவாகிய அலகான சமூகம் என்பது இந்நிலையை இன்னமும் வலுப்படுத்த உதவியது. மாணவன் பட்டிவளர்புக்குள்ளாகி பலவீனப்பட்டான். மீண்டும் மீண்டும் தாமாகவே பிறந்து, புத்தனுபவங்களைச் சேகரிக்கும் சக்தியை, பூரணத்தை நோக்கிப் பயணிக்கும் சக்தியை மாணவனிடம் மழுங்கடிக்க வைக்கும் ஆசிரியர்கள் எண்ணிலடங்காதவர்கள். இயல்பான அறியும் ஆவல் சிதைக்கப்பட்டு, இறகு இடுங்கப்பட்டு வெறும் சமூகப்பிராணியாகத் தண்டிக்கப்பட்ட மாணவன் சுயதன்மையிழந்து 'பணிந்துபோகும்' விலங்கானான்.

சமூக அந்தஸ்துக்காக, சீதனத்தேவைகளுக்காக, தொழிலுக்காக வென்றெல்லாம் பட்டம் தேடிய மாணவன், தனது சுயம் பற்றிய எந்தக் கேள்விகளையும் கூட கேட்கும் நிலையிலிருந்து பிடுங்கியெறியப்பட்டான்.
ஆசிரிய-குருகுல அடக்குமுறையிலிருந்தும், ஒழுக்கமுறையிலிருந்தும் தப்பித்துக் கொள்ள வழியில்லாத மாணவனின் முன்னால் ஆசிரியன் தனது அதிகாரத்தை உறுதி செய்யும் முகமாக 'நான் கூறுவதை நீ புரிந்துகொள், நீ



படிப்பகம்

www.padippakam.com



புரிந்து கொள்வதை புரியவைக்க நானில்லை' கூறிக்கொண்டான். சுயாதீனமாக அறியும் வேட்கைக்குத் தீனி கிடைக்காத மாணவன் வெகுண்டு வேறு தீனி தேடிய போது அவனுக்கு புள்ளிகளும் கிடைக்கவில்லை, பட்டங்களும் கிடைக்கவில்லை, பரிகாசம் பரிசாய்க் கிடைத்தது.

பாடசாலை நினைவுகள் பலமானவை. கற்கும் காலங்களின் சம்பவங்கள் ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் வரலாற்றுப் பதிவாகிவிடுகின்றது.

பெயர்ந்து குடிபோன புலங்களில் தத்தம் பாடசாலைகளை நினைவு கூருமுகமாகவும், அப்பாடசாலைகட்கு உதவிவழங்கவும், பழைய மாணவர்களின் ஒன்று கூடல்களுக்காகவும் உருவாக்கப்பட்டன பழைய மாணவர் சங்கங்கள்.

பாடசாலையை நினைவு கூருவதென்பது வெறும் கட்டிடங்களை நினைவு கூருவதல்ல. பாடசாலைச் சுவர்களையும், கூரையையும், விளையாட்டு மைதானத்தையும், வேப்ப மரங்களையும் நினைவு கூருதல் மட்டும் இச்சங்கங்களின நோக்கமாக இருந்தால் போதாது.

நாம் ஒவ்வொருவரும் எந்தச் சூழ்நிலையில் எந்த ஆச்சாரியர்களால், என்ன நோக்கத்திற்காக வளர்த்தெடுக்கப்பட்டோம் என்பதையும், அந்நோக்கங்கள் சரியானவையா என்பதையும் அவை நிறைவேறினவா என்பதையும் ..... இன்ன பிற அலகுகளையும் ஆராய்ந்து பார்ப்பதும் பாடசாலையை நினைவு கூருதல் என்பதில் அடங்கியிருக்க வேண்டும்.

பல்வேறு சூழல்களையும், பல்வேறு பாட முறைகளையும் பல்வேறு சமூகங்களையும் புலம்பெயர்ந்தவர்களாகிய நாம், நமது புதிய அனுபவங்களுடன், நம்மையும் நமது கல்விச் சூழலையும் பார்வையிடல் அவசியமானதே.

வெள்ளி தோறும் கொட்டாவி விட்டவண்ணம் சிவபுராணம் படித்த நேரங்கள் வீணடிக்கப்பட்ட நேரங்களே. எதற்காக நாம் சிவபுராணம் படித்தோம்? அதில் எதையாவது அப்போது புரிந்துகொண்டோமா? இப்போது கூட அதுபற்றி எதையாவது புரிந்துகொண்டோமா? எதன் பெயரால் எம்மை நாமே முட்டாள்களாக்கிக் கொண்டோம்?

ஒரு போலியான மகாஅடையாளத்திற்குள் எம்மை மறைத்து, எமது தனித்துவங்களைக் கொன்றொழித்தவர்கள் யார்?

'சுத்த அறிவே சிவம்' அன்று புகட்டிவிட்டு நடைமுறையில் 'அறியாமைக்குள் ஆண்டவனைத் தேடு' என்று ஆணையிட்டவர்களை எவ்வாறு மன்னிப்பது?

ஒவ்வொரு உயிரியும் தனக்குத் தேவையானபோது தனது ஆத்மீகத்தேவையை நிறைவு செய்ய முயலும். இது அதன் வாழ்வியல் அனுபவங்களுக்கூடாக தேடல்களுக்குள்ளாக இட்டுச் செல்லப்படும். ஆனால் அனுபவமில்லாத வயதில் ஆத்மீகம் என்னும் பெயரில் எமது நேரங்களை வீணடித்து எமக்கு போலியான மூளைச் சலவை செய்தவர்களின் உளவியல் நிலையை எவ்வாறு கண்டுகொள்வது?

'சாதியிரண்டொழிய வேறில்லை' என்று பாடசாலையில் மாணவர்களுக்கு அறிவுறுத்திய ஆசிரியர்களில் எத்தனைபேர் கொடுமையான சாதியவாதிகளாய் இருந்தார்கள்? எதிர்காலச் சமூகத்தைச் சமைக்கும் பொறுப்பையும் ஏற்று வழிநடத்தும் சிலா் வெளிநாடுகளில் வாழ்கிறார்கள். வெள்ளை இனவெறியின் அநீதிகளுக்கு உட்படுகின்றார்கள், கேவலப்படுத்தப்படுகின்றார்கள். இருந்துமென்ன, இவர்கள் இன்னமும் சாதியவாதிளே, இன்னமும் அடிமைகளே. இன்னமும் அறிவீனர்களே.

தனது மாணவர்களுக்கெல்லாம் தானே தெய்வம் என்றும், அவர்கள் தன்னிடம் கடமைப்பட்டவர்கள் என்றும் கருதும் ஆசிரியர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள். தன் கடமை அறிவை வெளிப்படுத்துதல் என்பதை மறந்து அதிகாரத்தை வெளிபபடுத்திய ஆசிரியக்கூட்டத்தை அடையாளம் காண்பது இலகுவானதல்ல.

வசதிபடைத்தவர்க்கும், உயர்குடிக்கும் ஒரு கவனிப்பு. வறுமைப்பட்டோர்க்கும் தாழ்தப்பட்டோருக்கும் அலட்சியக் கவனிப்பு என்று பலவகுப்புகளிலே நாம் கண்டிருக்கிறோமல்லவா? நீங்கள் காணாமல் விட்டிருக்கலாம் நானும் அப்போது காணவில்லை. இப்போது அப்போதைய நிகழ்வுகளை அலசிப்பார்க்கும் போது இந்த உண்மைகள் பட்டவர்த்தனமாய்த் தெரிகின்றன. துரோணாச்சாரியர்கள் உயர் குலத்திற்களித்த முன்னுரிமை எத்தனை ஏகலைவன்களை பலிகொண்டது.

## சிங்கள அரசின் தரப்படுத்தலுக்கு முன்பாகவே வகுப்புக்களிலே ஆசிரியர்கள் மேற்கொண்ட தரப்படுத்தல்கள் அநீதியானவை?

அமெரிக்கக் கவிஞன் வோல்ட் விற்மன் கூறினான்! நான் ஒரு மல்யுத்த ஆசிரியன் என்றால், என்மாணவன் யாராகவிருந்தாலென்ன, அவன் எப்போது என்னைத் தாக்கிச் சரித்து தோற்கடித்துவிடுகிறானோ அப்போதுதான் அவன் என்னை ஒரு சிறந்த ஆசிரியன் என்று உறுதிப்படுத்துகிறான்.

என்னைத் தாண்டிச்செல் என் மாணவனாகிய நீ எப்போது என்னைத் தாண்டி வெகுதூரம் செல்வாய்? என்று வினாவும் ஆசிரியர்களை நாம் எமது பாடசாலைகளில் பார்த்திருக்கிறோம்? 'ஊரோடில் ஒத்தோடு' என்னும் உபதேசமொழி இன்னும் வலுவிழக்கவில்லை. புலம்பெயர்வால் உலகின் பல ஊர்களைப் பார்த்து, பல ஊர்களில் வாழ்ந்த இளம் தலைமுறைக்கு எந்த ஊருடன் ஒத்துப்போவதென்றும் புரியவில்லை. 'ஊருலகம் தெரியாத பிள்ளை' என்று என் தாயார் அடிக்கடி என்னைப் பார்த்துக் கூறுவது போல் சிலவேளை நானும் ஊர்களையும் உலகங்களையும் புரிந்து கொள்ளவில்லையோ என்ற சந்தேகமும் எழுகின்றது. ஊராலும் உலகாலும் புரிந்துகொள்ளப்படாத மனிதர்கள்! மிகச்சிறுபான்மையினர் ஊரையும் உலகையும் புரிந்துகொள்ளாவிட்டாலும் ஒத்துப்போகத்தெரிந்தவர்கள்! மிகப் பெரும்பான்மையினர். ஆசிரியர்களில் பெரும்பான்மையினர் இதில் இரண்டாவது வகையினர். இதற்கான ஆதாதரங்களை அடுக்கிக்கொண்டே போகலாம். 'ஊரோடு ஒத்துப்போதல்' விதியை ஒழுங்காகக் கடைப்பிடிக்கும் ஆசிரியர்கள், ஆசிரியர்களல்ல அப்பாவி அநாதைகள். அறிவால் கைவிடப்பட்ட அநாதைகள், பாடமாக்கி ஒப்புவித்துப் பட்டங்களைச் சூடிக்கொண்டவர்களை ஆசிரியர்கள் என்றால், ஊரைக்கட்டியமைப்பது எவ்வாறு?

விஞ்ஞான மேதை ஆசிரியன் விநாயகனுக்குப் பாலூட்டினால், அதற்கான காரணங்கள் இரண்டைக் கற்பிக்கலாம்! அந்த ஆசிரியன் ஊரோடு ஒத்துப்போபவன். மக்களுக்கு கோயில் கட்டி உபயம் செய்து அவர்களின் முதுகில் சவாரிசெய்யும் கீழ்நிலை அரசியல் வாதியைப் போன்றவன். அல்லது தனது மேதாவித்தனத்தை சமூக அந்தஸ்தாக மாற்றுவதற்கு அறியாமையுடன் விபச்சாரம் செய்பவன். பாரதி யென்றொரு ஆசிரியனை அறிந்திருக்கிறேன். அவனது உபதேசங்களால் ஈர்க்கப்பட்டிருக்கிறேன். அந்த ஆசிரியன் ஊரோடு ஒத்துப்போனவனல்ல. தன் உள்ளத்தோடு மட்டுமே ஒத்துப்போனவன். இதன் காரணமாக ஊரால் ஒதுக்கப்பட்டவன். தனிமையில் அழிந்து போனவன். ஊரோடு ஒத்துப்போபவர்கள் பாரதி புகழ் பாடித் தம்மைத் தாமே கேலிபண்ணிக்



படிப்பகம்

www.padippakam.com



கொள்கிறார்கள். எத்தனை மாணவர்கள், எத்தனை இளைஞர்கள் 'பொதுக் கருத்துடன்' முரண்பட்டதால் கேவலப்பட்படுத்தப்பட்டார்கள். தூக்கியெறியப்பட்டார்கள். உதாரணமாக ஒரு சம்பவத்தை கூறுகிறேன்! அரசியல் இழிமையை அந்தஸ்தாக உயர்துவதற்கு எமது பாடசாலையின் பெயரை மாற்றியபோது அதனையெதிர்துக் கொடிபிடித்த குரல்கொடுத்த மாணவர்களை 'காவாலிகள்' எனப் பட்டம் சூட்டப்பட்டனர்! இந்த தவறை இழைத்த ஆசிரியர்கள் பகிரங்க மன்னிப்பு கேட்பது மட்டுமல்லாமல், எமது பாடசாலையின் ஆரம்ப பெயரை மீண்டும் வைபவரீதியாகவும், அலுவலக ரீதியாகவும் உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதும் எனது கருத்தாகும்.

**பாடசாலை என்ற நிறுவனத்தின் முதுகெலும்புகள் ஆசிரியர்கள். இவர்களிடம் இருக்கக் கூடிய பலவீனங்களும் அறியாமைகளும் பலசந்ததிகளைச் சிதைத்துவிடும் தன்மை வாய்ந்தன. தங்களது பொறுப்பின் மீது பிரஞ்ஞை கொண்டவர்களாகவும் போராளிகளாகவும் ஆசிரியர்கள் மாறியே ஆகவேண்டும்.**

மாணவன் என்ற தேசத்தை அறியாமை என்னும் அடிமைத் தளையிலிருந்து விடுவிக்கும் போராளியாக, எதிர்கால சமூகத்தை அமைக்கும் இளைஞனின் இயல்பான நிலையையும், சுயதன்மை கட்டிக்காக்கும் போராளியாக ஆசிரியன் மாற வேண்டும். இவ்வாறான ஒரு ஆசிரியன் என்ற போராளி முதலில் தன் கட்டுகளிலிருந்தும் கட்டளைகளிலிருந்தும் விடுபட்டுச் சுயாதீனமானவனாக மாறவேண்டும். தனது இயற்கையான சுபாவத்தையும், இயல்பான தேடல் ஆர்வத்தையும் பேணிக்காக்கக் கூடிய ஆசிரியர்களாலேயே அவ்வாறன மாணவர்களை உருவாக்க முடியும். அறிவியலின் முன் அந்நியப்படக் கூடிய கலாச்சார,மத அலகுகளை அடியோடு தொலைத்து விடும் வீரியம் ஆசிரியர்களை வழிநடத்த வேண்டும் இருபதாம் நூற்றாண்டின் அசுரவேகத்தால் அடித்துச் செல்லப்படாத, சர்வதேச தரத்திற்கு ஏதுவான மாணவனை உருவாக்குவது இனி இன்றியமையாததாகி விட்டது. இந்தக் கடமையிலிருந்து தப்பித்துக்கொள்ள நினைக்கும் பாடசாலைகளும் ஆசிரியர்களும் வரலாற்றுத் தவறை இழைப்பவர்கள் ஆகின்றார்கள். கிணற்றுக்குள் தவளை வளர்த்த காலமே கரையேறிவிட்டது. சமுத்திரத்தில் முதலை வளர்க்க ஆசிரியர்கள் தம்மை நவீனப்படுத்த வேண்டும். பல்நூற்றாண்டுகளாக பேரிருளை விரவிய பிராமணனின் பிடியிலிருந்து விடுபடுவதற்கு இளைஞர்கள் மேற்கொள்ளும் முயற்சிகளுக்குத் துணையாக நவீன ஆசிரியன் தோள்கொடுக்க வேண்டும். நிபந்தனைப்படுத்தப் படாத, இயல்பு நிலையான, நிர்ப்பந்தம் அற்ற சிந்தனைச் சிருஷ்டிகளாக எதிர்கால மாணவர்களை உருவாக்குவது சமுதாயம் முழுவதிலுமான வரலாற்றுக் கடமையாகும்,

முன்னேறிய நாடுகளில் இணைவலையம் கல்விமுறையில் பல புரட்சிகளை ஏற்படுத்தியுள்ளது. அறிவியல், விஞ்ஞான,மருத்துவ, தத்துவ, தொழில்நுட்பத் துறைகளிலான பாடங்களும், கலந்துரையாடல்களும் ஆச்சரியமூட்டும் வகையில் அறிவுப்பரம்பரையைக் கூர்மைப்படுத்தியுள்ளன. பல நாடுகளிலுள்ள விஞ்ஞானிகள் தமது ஆய்வுப்பெறுபேறுகளை இணைவலயத்தில் தொடர்பு படுத்தி புதிய கண்டுபிடிப்புகளிற்கான சாத்தியக் கூறுகளை அதிகரித்துள்ளனர். வீட்டிலிருந்தவாறே உலகின் மிகப்பெரிய நூல்நிலையங்களுக்குள் நுழையும் வாய்ப்பு சாதாரண விடயமாகிவிட்டது. செய்தித்துறையின் மீதான மேற்கத்திய நாடுகளின் சர்வாதிகாரத்தை நொருக்கி யெறியும் சாதனையை இணைவலையம் வெகுவிரைவில் ஆற்றி முடிக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் கொள்ளத்தேவையில்லை. அடக்கியொடுக்கப் பட்ட, ஒழிக்கப்பட்ட, மறைக்க பட்ட கருத்துக்களும், மக்கள் போராட்டங்களும் இணைவலயப் பிரதேசத்தில் அம்பலமாகி விட்டன. அரசியல் மோசடிகள் பலவும் இக்கருவியினால் வெளிப்படுத்தப்பட்டது.

ஜனநாயகத்தை மேன்மேலும் வளம்படுத்த, வாக்குரிமையளிக்கும் குடிமகனின் தெரிவைத் தெளிவாக்க, அவனது அறிவு நிலையை உயர்த்தப் பல்வேறுவித கருத்து வெளிப்பாடுகளும், செய்திகளும், அறிவுறுத்தல்களும் கைக்கெட்டிய தூரத்தில் போடப்பட்டுள்ளன. கல்விபுகட்டலுக்கும், சுயாதீனமான, நிபந்தனைப்படுத்தப்படாத அறிவுவளர்ச்சிக்குமான இந்த புதிய சாத்தியக் கூறுகளின் காரணமாக 'ஆசிரியன் இறந்து விட்டான்' என்ற ஒரு குறியீட்டுக் கோசமும் முன்னேறிய நாடுகளில் கேட்கக் கூடியதாகவுள்ளது. ஆனால் வளர்முகநாடுகளிலுள்ளவர்களுக்கோ, அங்குள்ள மாணவர்களுக்கோ இப்புதிய தொழில் நுட்பக் கண்டுபிடிப்புகளின் தாக்கங்கள் சரியான முறையில் சென்றடையவில்லை. அவ்வாறு சென்றடையும் வரையும் அவர்கள் பரிவபூரணமாக ஆசிரியர்களின் தயவிலேயே அறிவைப் பெறவேண்டியவர்களாகிறார்கள். இந்நிலையைச் சரியான முறையில் பிரஞ்ஞையில் கொண்டு, மாணவனிடம் கட்டைவிரலை வெட்டித்தாவெனக் கேட்காது, இன்றைய ஆசிரியர்கள் தொழிற்பட வேண்டுமென்பது எனது அவாவாகும். எது எவ்வாறிருப்பினும் 'துரோணாச்சாரியான் இறந்துவிட்டான்' என்று இன்றைய மாணவர்கள் கோசமிடுமாறு அவர்களைச் சுயாதீனமாக்கி அவர்களுக்கு அறிவு புகட்ட வேண்டும். துரோணன் இறந்தாலும் பரவாயில்லை, அவனின் கல்லறையிலேனும் நமது கட்டைவிரலை வெட்டிபோடுவோம் என்று சபதம் கொண்டுள்ள சில அடிமைப்புத்திகள் இன்னமும் இருக்கத்தான் செய்கின்றன. தாண்டிச் செல்வோம். மேலேயெழுதியவற்றை மீண்டும் வாசித்தபோது எனக்கு என்னில் ஒரு வெட்கஉணர்வு தோன்றுகின்றது. மாணவன் என்றும், இளைஞன் என்றும், ஆசிரியன் என்றும், அனைத்தையும் ஆண்பாலிலேயே கூறிக்கொண்டு வந்திருக்கும் எனது சிந்தனைப் போக்கு எதை வெளிப்படுத்துகின்றது? ஆணை முதன்மைப் படுத்தி, ஆணுக்கு முன்னுரிமையளித்து, ஆணாதிக்கத்தை நிலைநாட்டிய, தொடர்ந்து நிலைநாட்டிக் கொண்டிருக்கும் ஒரு சமூகத்தில் வளர்த்தெடுக்கப்பட்ட ஆண்மகன் நான் என்பதை வெளிப்படுத்துகின்றது.

பல்லாண்டு காலக் கலாச்சாரப் பணியின் பெறுபேறுகளிலிருந்து விடுபடுவதென்ன அவ்வளவு இலகுவான ஒன்றா? படித்தாலும், பட்டம் பெற்றாலும், சுயமாகத் தொழில்புரிந்தாலும் பெண் என்பவள் இன்னமும் வெறும் 'கலாச்சாரப் பண்டமாகவும்' 'கலாச்சாரம் பேணும் காரணியாகவும்' தொடரும் நிலைக்கு நமது கல்விநிலையங்களும் மிகப்பெரிய அளவில் உதவியிருக்கின்றன என்பதை யாராலும் மறுக்க முடியாது. மாணவனையும், மாணவியையும் அனைத்துநிலைகளிலும், அனைத்துத் துறைகளிலும் நேர்நிகரானவர்களாகக் கருதிக் கல்வி புகட்டும் காலம் எப்போ வரப்போகின்றது? ஆணுக்கிருக்கும் அனைத்து உரிமைகளையும் பெண்ணுக்குமுண்டு என்று உறுதியான மனநிலை மாற்றம் எப்போது தோன்றப்போகிறது? கோசங்களாலோ, கூட்டங்களாலோ இவையெவையும் கூடிவரா. அடிப்படையான மனமாற்றங்களும், அடுத்தவர்க்கஞ்சாத வீரியமும் 'பொதுக்கருத்தைப்' போட்டுடைக்கும் நேர்மையும், போதுமானளவு'கிறுக்குப் புத்தியும்' இருந்தால் மட்டுமே இவையனைத்தும் சாத்தியமானவையாகும்,

□



படிப்பகம்

www.padippakam.com



*It gives me enormous pleasure in sending my greetings, on behalf of my entire family, on the occasion of the Annual Meeting and publication of the Vidhyalayam 2001 by the French Branch of the Velanai Madhya Maha Vidyalayam. Besides me, my family includes two brothers and three sisters who are old students of the VMMV. We are all very proud of being part of a tradition and legacy behind this great institution.*

*Many of you may not even remember me. I joined the school in 1951 and completed my OL in 1956. My scholarship was transferred to the Nelliady MMV where I completed the AL and was one of the first two to enter the Ceylon University in 1959. After I graduated in 1962 with First Class honors and being an Assisitant Lecturer in Physics, I joined the Survey Department as an Assistant Superintendent of Surveys in 1963. A Sri Lankan Scholarship led me earn a Masters Degree from Cambridge University in UK and a US Fulbright Scholarship enabled me to earn more Masters and Ph.D degrees from the Ohio State University in the USA. These still remain to be some of my prodest achievements of my life at no cost to me, thanks to God's Grace and the solid foundation I received at tha VMMV. This only goes to demonstrate that anybody with almost no beginning and with "honesty, sincerity and regularity" can achieve anything. I hope that all the students today would take this to their hearts and commit to work hard at it.*

*I would like to congradulate the entire membership of the French Branch of the Old Student Association for their tireless endeavor in undertaking so many activities in support of the VMMV. It is remarkable that they are able to actively involve themselves in these activities inspite of their already more than full days of commitments.*

*Recently, I attended the 5th Annual Get-together 2000 of the Canadian Branch of the VMMV OSA as the Chief Guest. My wife and I were overwhelmed by the warmest hospitality extended to us and the fond memories brought on by meeting so many of our old friends and families. We will relish these memories forever in our lives.*

*We are hoping and praying that our dearest motherland would find eternal peace one day that we may be able to physically be onsite to participate in the success and progress of our beloved institution.*

*In the meantime, please be assured of our best wishes and prayers for the continued success of the OSA in its selfless service, your annual celebrations, and the release of the Vidhyalayam 2001.*

*"Self is Getting and forgetting; Selflessness is giving and forgiving"*
*"Love All; Serve All"*

**Siva Gopal**

**7731 Jordan Crossing**
**Reynoldburg OH 43068**
**USA**



படிப்பகம்

# நாம் காணும் கணனியும் இணையமும்

– விக்னா பாக்கியநாதன்

இன்று மனிதனே வியக்கும் வகையில் மனிதனுக்காக மனிதனால் உருவாக்கப்பட்ட அற்புதப் படைப்பு கணனி என்றால் மிகையாகாது. மனிதன் பலநூறு ஆண்டுகளுக்கு முன்னே கணக்குகளுக்கு தீர்வு காணவும், காலங்களை கணிக்கவும் பெருமளவுக்குத் தனது மூளையையே நம்பியிருந்தான். கைவிரல்கள் பத்துடைய மனிதனின் கணக்கு விபரம் அன்றைய காலகட்டத்தில் பத்துவரையே இருந்தது. பதினொன்றை அரிதாக எண்ண வேண்டுமானால் அல்லது கணக்கிடும் தேவை ஏற்பட்டால் இன்னொருவரின் கைவிரல்களையே பயன்படுத்தினர் என ஆதிவரலாறு செப்புகின்றது. பின்னர் கி.மு.3000-ம் ஆண்டில் சீனர்கள் மரச்சட்டத்தில் மணிகளைக் கோத்து எண்ணும் அல்லது கணக்கிடும் மரச்சட்டமுறையைக் கண்டு பிடித்தனர். இது "அபாக்கஸ்" முறை எனப்பட்டது. இந்தக் கணக்கிடும் கருவியிலே இருந்து மெல்ல மெல்ல புதுப்புது கண்டு பிடிப்புகளுடனும் திருத்தங்களுடனும் பரிணாம வளர்ச்சி பெற்றது தான் இன்றைய கணனி எனலாம். எனவே கணனியின் ஆதிமூலம் ஒரு கணக்கிடும் கருவியான அபாக்கஸ் என்றால் ஆச்சரியம் தான். அபாக்கஸ் என்ற கணக்கிடும் கருவியை அடிப்படையாக வைத்து 1614-ம் ஆண்டில் ஸ்கொட்லாந்து கணித நிபுணர் "லாகரிதம்" எனப்படும் தசமக் கணக்கு, பெருக்கல், வகுத்தல் கணக்குகளுக்காக ஒரு திருத்தமான கணக்கிடும் கருவியைக் கண்டறிந்தார். 1642-ல் "பிளேய்ஸ் மஸ்கால்" என்ற பிரெஞ்சுக்காரர் சிறிய முன்னேற்றத்துடன் கூடிய கணக்கியந்திரத்தைக் கண்டு பிடித்தார். இது சாதாரண கூட்டல், கழித்தல்களைக் கணக்கிடும் சக்கரம் போன்று சுழலும் வகையில் வரிசையாக எண்கள் எழுதப்பட்டு பல்லோர் தேவைக்கும் பயன்படும் இயந்திரமாகப் புகழ் பெற்றிருந்தது. இந்தக் கணக்கியந்திரத்தின் வளர்ச்சியே மின்னோட்ட மேசைக் கணக்கிடும் யந்திரமாக பின்னர் மாற்றம் பெற்று ஒருபடி உயர்ந்தது.

1880-ம் ஆண்டு அமெரிக்காவிலே சனத்தொகைக் குடியிருப்புக்களை கணக்கிடவும், மக்களின் அதாவது தனிநபர் விபரங்களை அறியவும் ஒரு இலகுவான கருவி தேவைப்பட்டது. மின்னோட்டச் சக்கர கணக்கிடும் இயந்திரத்தின் அடிப்படையிலே 1889-ம் ஆண்டு துளை அட்டைகள் போன்று (துவாரமிடப்பட்ட மட்டை) தயாரிக்கப்பட்ட கருவியொன்றில் ஒருவரைப் பற்றிய சகல விபரங்களும் அறியக் கூடிய வகையில் புதுமாதிரியாக உருவாக்கம் பெற்றது. இதன் பெயர் "ஹொலியத் துளை அட்டை இயந்திரம்". இதைத் தயாரித்த கம்பனி "ஹொலியத் துளையட்டை நிறுவனம்" ஆகும். அப்போது "சர்வதேச வியாபார இயந்திரக் கூட்டுத்தாபனம்" என்ற அமைப்புடன் ஹொலியத் துளையட்டை நிறுவனமும் இணைந்து கொண்டது. (INTERNATIONAL Business Machines Corporation) இணைந்த இந்த IBM நிறுவனமே உலகின் மிகப் பெரிய கணனி நிறுவனமாகும். ஹொலியத் துளையட்டைக் கணனியே 1930-ம் ஆண்டுவரை நிலைத்து நின்றது. ஜேர்மனி, இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய பல நாடுகளில் இக்கணனி பரவியது. பின்னர் இரண்டாம் உலகப் போரின் போது எதிரிகளின் இரகசிய வழிகளை உடைக்கவும், விமானங்களை புதிய மாதிரிகளில் அமைக்கவும், இலக்குகளை மட்டுப்படுத்தவும், வழிகளைக் கண்டு பிடிக்கவும், எதிரியின் கண்ணுக்குப் புலப்படாமல் ரேடார் போன்ற கருவியை நாடி எதிரிகளை நிர்மூலமாக்கிட கணக்கீடுகள் தரும் அட்டவணைகள் மூலம் உருவங்களைத் தயாரிக்கவும் புதுரகக் கணனி (கம்பியூட்டர்) 1946-ம் ஆண்டு அமெரிக்காவிலே உருவாக்கம் பெற்றது.

அதாவது 1946-ம் ஆண்டு ENIAC எனப்படும் முதற்தரமான மின்னணுக் கணனி கண்டு பிடிக்கப்பட்டமை உலகை வியப்பில் ஆழ்த்தியது. நூறு பொறியியல் வல்லுநர்கள் ஒரு வருடத்தில் செய்யக்கூடிய கணக்குகளை இரண்டு மணி நேரத்தில் இந்தக் கணனியால் செய்யக் கூடியதாக இருந்தது. இதற்கு ஞாபகப் பிரிவு இல்லாமை அந்நேரம் குறையாகத் தெரியவில்லை. இதை இன்றைய கணனியுடன் ஒப்பிடும் போது குறைந்த தரத்தில் மின்னணுக் கணக்கிடும் யந்திரம் எனக்கூறுதலே பொருத்தமானது. சலக துறைகளிலும் சாதனை புரிய வேண்டும் என்ற மனிதனின் அபரித சிந்தனை தான் கணனியின் பிறப்பு.

இதுவரை விஞ்ஞானம் கண்டிராத வகையில் உலகைக் கலக்குவது மின்வலைப் பிணைப்பு (Inter Net) ஆகும். கணனியின் வழியே வெளிவரும் இந்த மின்னணு வலைப்பிணைப்பு என்றால் என்ன? என்பது பற்றி சிறிது நோக்குவோம். உதாரணமாக ஒரு அறை ஒன்று இருக்கின்றது என வைத்துக் கொள்வோம். அங்கே பெருந்தொகையான சிலந்திகள் நிறைந்து வாழ்கின்றன எனக் கொள்வோம். அவை ஒவ்வொன்றும் தனித்தனி வலைகளைத் தாமே பின்னி ஒன்றுடன் ஒன்று இணைத்துக் கொள்ளும். இவ்வாறு பின்னப்பட்ட வலைப் பின்னல் சிக்கலானதாகப் பார்ப்போருக்குத் தோன்றும். ஆனால் சிலந்திகளோ அந்த வலையினூடாக எளிதாகப் போய் வருகின்றன. ஒன்றுடன் ஒன்று பின்னித்



படிப்பகம்

www.padippakam.com



தொடர்புற்றுச் சிக்கலாக இருந்த போதும் சிலந்திகள் போய் வருகின்றன. தொடர்பு கொள்கின்றன. இதே போன்று ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்ட பல்வேறு வகையான கணனிகள், கணனி வலைப்பின்னல்களின் உலகளாவிய தொகுப்பு எனலாம். உலகின் இன்னோர் பகுதியிலுள்ள தொலைபேசி வைத்திருக்கும் எமது உறவினருடன் எமது தொலைபேசி மூலம் கதைப்பது போல கருத்துப் பரிமாற்றம், தகவல் பரிமாற்றம் செய்வது போல இன்ரர் நெற்றிலும் பரிமாறிக் கொள்ளலாம். அதாவது ஒருவர் தன்னுடைய கணனியைப் பயன்படுத்தி உலகின் எந்த இடமாயினும் ஒரு நகரத்தில் வசிக்கும் ஒருவரின் கணனியுடன் இணைப்புச் செய்து தகவல்களைப் பரிமாறிக் கொள்வது என்பது விந்தையான தொன்றே. இன்ரர் நெற்றில் சுமார் 30,000 க்கும் மேற்பட்ட இணைப்புக்கள் உள்ளன. உலகம் முழுவதும் உள்ள 1,00,00,000 க்கு மேற்பட்ட கணனிகளையும், 3,00,00,000 கணனி பாவிப்போரையும் இணைக்கின்றன. இன்ரர் நெற்றுடன் இணைக்கப்பட்டிருக்கும் கணனிகளின் தொகை ஒவ்வொரு ஆண்டும் இரு மடங்காகி வருகின்றது.

இன்ரர் நெற் மூலம் தகவல்கள், மருத்துவம், அறிவியல், தொழில்நுட்பம், கலைகள், புவியியல், பொருளியல், பொழுது போக்கு, அகராதிகள், கலைக்களஞ்சியம், சினிமா, வரைபடங்கள், விளம்பரங்கள், ஆய்வறிக்கைகள் எனப் பலதரப்பட்ட, பல துறைசார்ந்த அனைத்துத் தகவல்களையும் பெற்றுக் கொள்ள முடியும். மற்றும் மாணவர்கள் தமது பாடம் சார்பான மேலதிக குறிப்புக்களைப் பெறுவதற்கும், ஆசிரியர் தமக்குத் தேவையான உசாத்துணைகளைப் பெறுவதற்கும், இல்லத்துத் தேவைகளை கட்டளை பிறப்பித்துப் பெற்றுக் கொள்ளவும், கடிதத் தொடர்பு (மின்னஞ்சல்) (ஈ-மெயில்) கொள்வதற்கும் இன்ரர் நெற் என்ற ஆங்கிலப் பதம் குறிக்கும் மின்னணு வலைப்பின்னல் அமைப்பு பெருந்துணை புரிகின்றது. இன்ரர் நெற்றில் தேடல்மையங்களைப் (Search Sites) பயன்படுத்தி தேடிக் கொண்டிருக்கும் விடயம் அல்லது வார்த்தையை எழுதி தகவல்களைக் கண்டு பிடித்து விடலாம்.

இணையத்தை உருவாக்கியவர்கள் யார்? எந்த நோக்கில் உருவாக்கப்பட்டது? இப்பொழுது இது யாருக்குச் சொந்தம்?

1957களில் சோவியத் அரசு தனது ஸ்புட்னிக் என்னும் செயற்கைக்கோளை விண்ணில் ஏவி வெவ்வேறு இடங்களுக்கு உடனுக்குடன் தொடர்பு கொள்வதற்கான செயற்கைக் கோள் சார்ந்த ஒரு தொலைத் தொடர்பு வலையமைப்பை ஏற்படுத்தியது. இதனைக் கண்டு அதிர்ந்த அமெரிக்க அரசின் பாதுகாப்புத்துறை, ARPA அதாவது Advanced Research Projects Agency என்றதொரு புதிய அமைப்பை உருவாக்கி அதனிடம் கணனி சார்ந்த தகவல் தொடர்பு வலையமைப்பொன்றை ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக் கொண்டது.

கணனியை ஒரு கணக்குப் போடும் இயந்திரமாகவே பாவித்து வந்த அக்காலத்தில் அதனை ஒரு அதிவிரைவுத் தகவல் பரிமாற்றச் சாதனமாக்கும் தனது நீண்ட நெடிய ஆராய்ச்சியில் இறங்கியது ARPA அமைப்பு. வெவ்வேறு இடங்களில் உள்ள கணனிகளை ஒன்றாக இணைப்பதற்கான கோட்பாடுகள் வடிவமைக்கப்பட்டன. தொலைதூரக் கணனிகளைத் தொலைபேசிக் கம்பிகள் வழியாக இணைப்பதற்கான வழிமுறைகளும் ஆராயப்பட்டன. நீண்ட ஆராய்ச்சியின் விளைவாக 1968 ஜீன் மாதம் ARPA தனது ஆராய்ச்சியின் முடிவான ARPANET என்னும் கணனி வலையமைப்பினை அரசின் பார்வைக்குக் கொண்டு வந்தது.

இவ் ARPANET வலையமைப்பின் சிறப்பம்சங்கள் யாதெனில் அது வெவ்வேறு இடங்களில் உள்ள கணனிகளை வெவ்வேறு வழிகளில் ஒன்றாக இணைக்கிறது. அதனால் ஒரு பகுதியில் இணைப்பில் ஏதேனும் கோளாறுகள் ஏற்பட்டாலோ அல்லது போர்க்காலங்களில் ஒரு பகுதி வலையமைப்போ துண்டிக்கப்பட்டாலோ பிறபகுதி எந்தவிதப் பாதிப்புமின்றித் தகவல் தொடர்புக்குப் பயன்படும். ஏதேனும் ஒரு வழியை நம்பிக் கொண்டிருக்க வேண்டியதில்லை.

நம்முடைய இணையமும் அவ்வாறே! உலகின் ஒரு பகுதியே அழிந்து பட்டாலும் மற்றொரு பகுதி எந்தவிதப் பாதிப்பும் அடையாமல் தன்னுடைய கடமையை ஆற்றிக் கொண்டிருக்கும். இதற்குக் காரணம், இணையத்தில் பயன்படுத்தும் TCP/IP போன்ற கோட்பாட்டு மென்பொருட்களும், Router போன்ற சாதனங்களும் தகவல் பொட்டலங்களை அனுப்பும் போது பாதைகள் பாதிப்படையாமல் இருக்கின்றனவா என்று பார்த்து விட்டே அனுப்புகின்றன. எனவே அப்பொட்டலங்கள் பாதிக்கப்பட்ட உலகப் பகுதிக்குள் சென்று காலங்கடத்தும் வாய்ப்பே இல்லை.

அடுத்ததாக இவ்வமைப்பு வெவ்வேறு வகையைச் சார்ந்த வேறுபட்ட அமைப்பில் உருவாக்கப்பட்ட அதாவது நாம் பயன்படுத்தும் IBM வகைத் தனிக் கணனிகள், APPEL MAC வகைக் கணனிகள், MAINFRAME, அதிவிரைவுக் கணனிகள் (Super Computer) மற்றும் MINI க் கணனிகள் போன்ற கணனிகளையும் ஒன்றாக இணைத்து அவற்றுக்கிடையிலும் தகவல்களைச் செலுத்தும் வல்லமையுடையதாக அமைக்கப்பட்டது. இதனை ஆங்கிலத்தில் Machine Independant என்று கூறுவதுண்டு.

அதுமட்டுமல்லாது இது வேறுபட்ட வினைக்கலன்கள் (Operating System) பயன்படுத்தப்படும் கணனிகளையும் வெற்றிகரமாக இணைக்கும் படியும் உருவாக்கப்பட்டது. இதனை ஆங்கிலத்தில் Platform Independent என்று கூறுவது வழக்கம்.

இத்தகைய ARPANET முதலில் அமெரிக்க இராணுவத்தில் பயன்படுத்தப்பட்டாலும் பின்பு ஆராய்ச்சிக்கான தகவல்களைப் பரிமாறிக் கொள்ளும் பொருட்டு அமெரிக்க பல்கலைக்கழகங்களுக்கிடையே ஒரு வலையமைப்பை ஏற்படுத்தி அதைத் தம்மோடு ஒன்றாக இணைத்துக் கொண்டது.



படிப்பகம்

www.padippakam.com



# வளர்க எமது கல்வியகம்!

**வே**லணை மத்திய மாகா வித்தியாலயம் பிரான்ஸ் கிளையின் வித்தியாலயம் 2001 வெளியீடு மிகவும் வரவேற்கத்தக்க ஒரு முயற்சியாகும். இதனை யிட்டு ஐக்கிய அமெரிக்கா வாழ் எமது பாடசாலை பழைய மாணவன் சார்பில் எனது வாழ்த்துக்களை இச்செய்தி மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

எமது பாடசாலை மாணவர்கள் படும் இன்னல்களை யாவரும் அறிவோம். பாடசாலைகளின் தேவைகள் அளப்பரியன வெளிநாடுகளில் புலம் பெயர்ந்து வாழும் பழைய மாணவர்களாகிய நாம் தான் பாடசாலையையும் அதன் எதிர்கால மாணவர்களையும் மேன்மை மிக்க நிலைக்கு கொண்டு வர முடியும். இதற்காக பலநாட்டிலும் குடி புகுந்திருக்கும் நாம் எம்மால் முடிந்த உதவிகளை வழங்க முன்வரவேண்டும்.

பாடசாலைக்கு நாம் செய்யக்கூடியதாக என்ன இருக்கின்றது என்று சிந்தித்து பார்த்தால், ஒரு பெரிய பட்டியலலே குறிப்பிட முடியும். இதனில் மிக அத்தியா வசியமானவை என்ன என்பதைத் தேர்ந்து எடுத்து ஒவ்வொரு பழைமாணவர் சங்கமும் ஒவ்வொன்றும் பொறுப்பேற்று செய்ய முன் வர வேண்டும். இந்த வகையில் எமது பழைய மாணவர் சங்கங்களின் ஒரு கூட்டுறவு முறையில் பாடசாலைத் தேவையை ஆராய்ந்து கடமைகளைப் பொறுப் பேற்க வேண்டும்.

பிரான்ஸ் நாட்டுக்கிளை, எடுத்திருக்கும் இந்த "வித்தியாலயம் 2001" வெளியீட்டு முயற்ச்சி கிளையின் கடமைப்பாட்டில் எடுத்திருக்கும் முதற்படியாகும். திறமை மிக்க இந்த கிளை அங்கத்தினரின் கடமை உனர்ச்சியை என்னால் வார்த்தைகளில் குறிப்பிடமுடியாது. அவர்களின் அளப்பரிய சேவையை நினத்து நான் மிகவும் பெருமைப்படுகின்றேன். அத்துடன் பிரான்ஸ் கிளையிற்கு உயிருட்டி அதன் வளர்ச்சிக்கு காரணமாக இருக்கும் பிரான்ஸ் வாழ் எமது பழைய மாணவர்களுக்கும் எனது வாழ்த்துகள் உரித்தாகுக. உங்களது முயற்ச்சி மிகவும் உன்னதமானது. பாடசாலையின் சரித்திரத்தில் இடம் பெறுமளவிற்கு மேன்மை பெற்றுள்ளது.

வாழ்க தமிழ் ! வளர்க எமது கல்வியகம் !

**– சி. மோகனச்சந்திரன்**
பழைய மாணவன், ஆசிரியர்.
Microsoft, USA
MS (CIS), MS(Maths), Bsc (Physics)



படிப்பகம்

www.padippakam.com






# CYBER DOT SIDE

*(Cyber Café)*

- **Internet libre service**
- Navigation
- E-mail
- Abonnement Internet 100F / mois
- Provider illimitée
- Cours d'Initiation Informatique

**60 rue de Dunkirque**
**75009 Paris**
**Tél.: 01 42 81 40 48**

# SANTIA AUTO



## MECANIQUE GÉNÉRALE

- TOUTES MARQUES
- CARROSSERIE
- LAVAGE AUTO À LA MAIN VIDANGE

**239, Avenue de Rosny**
**93130 Noisy le Sec**
**Tél.: 01 48 50 23 21**




படிப்பகம்

www.padippakam.com



அ. தேவதாஸ்
இருப்பு பிரான்ஸ்.
ஓவியனாய், நடிகனாய்,
நாடகாசிரியனாய்,
20 வருடங்கள்.
இவரது படைப்புக்கள்
கவனத்திலெடுக்கப்படுவதோடு
வடிவமைப்பிலும் கருத்து
கூர்மைப்பட்டிருப்பதை
அவதானிக்கலாம்.
கலையிலிருந்து எழுத்துப்
பிரவேசம்
அண்மைக்காலமாக...

# பள்ளிக் கூடமும் பாடத்திட்டமும்

அ. தேவதாஸன்

கற்றவர்கள் பற்றிய உலகக் கணிப்பீட்டின் படி இலங்கையும் முதன்மையான இடத்தில் உள்ளது. அதிலும் தமிழர்கள் குறிப்பாக யாழ்ப்பாணிகள் முதன்மை பெற்ற காலமும் உண்டு.

இலண்டனிலும் அமெரிக்காவிலும் கூட அதிகமான இலங்கைத் தமிழர்கள் பெருமை தரக் கூடிய பொறுப்புக்களிலும் பதவிகளிலும் இருப்பதாக இங்குள்ள எம் தமிழ் மக்கள் பெருமை பேசிக் கொள்வதை என்னால் அவதானிக்க முடிகிறது.

வெள்ளையன் இந்த நாட்டை சுதந்திரம் கொடுப்பது என்பதென்ற பெயரில் தனது விசுவாசிகளிடம் ஒப்படைத்துச் செல்ல, அவர்களும் வெள்ளைக்காரன் மனம் நோகாமல் இன்றுவரை சட்டதிட்டங்கள், கல்விப் பாடத் திட்டங்கள் என்பனவற்றை அப்படியே எந்த மாற்றமும் இன்றி நடைமுறைப் படுத்தி வருகின்றனர்.

குறிப்பாக இப்பாடத் திட்டங்கள் மூலம் எமது சமூக வாழ்வு உயர்ந்திருக்கிறதா? தாழ்ந்திருக்கிறதா? என்பன பற்றிய ஆய்வுகள் செய்யப்பட வேண்டியது அவசியமாகிறது. அப்படி ஆய்வு செய்யப்பட்டாலும் இந்த வெள்ளைக்காரப் பாடத்திட்டத்தைப் படித்து கரைத்துக் குடித்த கல்விமான்களே இந்த ஆய்வினையும் மேற்கொள்வர். இதன் தீர்ப்பும் அவர்களது நலன்களுக்கு உகந்ததாக இருக்கிற இக்கல்வி முறையே சிறந்தது எனத் தீர்ப்பும் வழங்கப்பட்டு விடும்.

எமது தமிழ்ச் சமூகத்தில் ஒவ்வொரு பெற்றோரும் தத்தமது பிள்ளைகளை டாக்டர் ஆக்க வேண்டும், இஞ்சினியர் ஆக்க வேண்டும் என்று தான் முயற்சிக்கிறார்களே ஒழிய நல்ல மனிதனாக உருவாக்க வேண்டும் என்கிற முயற்சியே எடுப்பதில்லை. இதற்கு பாடத்திட்டங்களும் பயன்படவில்லை. இதனால் தான் சாதி அமைப்பு முறைகளும் சீதன அமைப்பு முறைகளும் அப்படியே பாதுகாக்கப் பட்டு வருகிறது.

சாதாரணமான கூலி வேலை செய்யும் ஒரு ஆண் தனது மணவாழ்க்கைக்கு சீதன பாதனம் என்று எதையும் எதிர்பார்ப்பதில்லை. ஆனால் ஒரு படித்த பட்டதாரியோ பல இலட்சங்களையும், வீடு, நகைகள் என்று அனைத்தையும் சீதனமாக கேட்கிறான். ........... அதற்கு என்ன காரணம். அவன் பட்டம் பெறும் வரை படித்ததில் மனிதநேயக் கல்வியோ, சுயசிந்தனையோ இல்லாமல் வெறும் பாடத்திட்டங்களை பாடமாக்கி பாசாகியதன் காரணம் தான் இது.

ஒரு குழந்தை தாயின் அரவணைப்பில் இருந்து, "தலைவாரிப் பூச்சூடி என்னை பாடசாலைக்குப் போவென்று சொன்னாளே அன்னை" என்பது போல நாலு வயதிலோ ஐந்து வயதிலோ பள்ளிக் கூடம் என்று வெளியேறும் குழந்தை குறைந்தது பத்து வருடங்களாவது பாடசாலை வாழ்க்கையில் அவள் காலம் கழிகிறது. ஒவ்வொருவர்க்கும் ஒவ்வொரு திறமை அவர்களிடத்தே ஒழிந்திருக்கும். அத்திறமை எதுவெனக் கண்டு பிடித்து அதை வளர்த்தெடுத்து மனித வளர்ச்சிக்கு பயன்பெறும் வகையில் உருவாக்குவதே ஆசிரியர்களின் கடமையாக இருக்க வேண்டும். ஆனால் மாறாக சமூக அந்தஸ்து காரணமாக விஞ்ஞான பீடத்திற்கு தெரிவாகிறவர்கள் அதிக கெட்டித் தனம் உடையவர்கள் என்றும் பின்னர் வர்த்தகம், சரித்திரம் என்று படிப்படியாக கழிக்கப்பட்டு சிற்பத்தில் திறமையுடையவர் இசையிலே ஓவியத்திலே திறமையுடையவர்கள் இவர்களில் இருந்து கழிக்கப்பட்டவர்களாகவே கருதப்படுகிறார்கள். அதனால் தான் கலையிலே நாட்டம் உள்ளவன், விளையாட்டிலே நாட்டமுள்ளவனை சமூகம் அங்கீகரிப்பதில்லை. அதனால் இத்துறை எமது



படிப்பகம்

www.padippakam.com



சமூகத்தில் அறவே வளரவில்லை.

பழைய பாடத்திட்டங்களுக்கும் புதிய பாடத்திட்டங்களுக்கும் சிறிய மாற்றங்கள் இருந்தாலும் அடிப்படை அப்படியேதான் இருக்கிறது. இப்பாடத்திட்டத்தில் வடிகட்டல் முறை என்பது பலரின் உண்மையான திறமைகளை முடங்கப்பண்ணி விடுகிறது. சுய சிந்தனை அழிக்கப்படுகிறது. பாடமாக்கி சித்திபெறுபவர்கள் சமூகத்தில் பெரிய இடத்தில் வரக்கூடிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி விடுகிறது. இதனால் எவ்வளவு தரமான சுயசிந்தனையுள்ள திறமை சாலியை பாடமாக்கி சித்திபெற்ற முட்டாளே நிர்வகிக்க முன்வருகிறான்.

தீவுப் பகுதி தொகுதியிலே தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் திரு.கா.பொ.இரத்தினம் அவர்கள் பாராளுமன்ற உறுப்பினர் பதவி வகித்த காலத்தில் பல வாத்திக் கூட்டம் அவரை வட்டமிட்டுக் கொண்டு திரிந்ததை பார்த்திருக்கிறேன். பின்னர் அவர்களது பிள்ளைகளில் பெரும்பாலானோர் வாத்திமார் ஆகி விட்டனர். இவர்கள் உண்மையிலே நான் ஆசிரியராகி எமது பிள்ளைகளுக்கு கல்வி அறிவை ஊட்ட வேண்டும் என்ற இலட்சியத்திலா அப்பதவிகளுக்கு சென்றார்கள். இல்லவே இல்லை. சமூக அந்தஸ்தும், சம்பளமும் மட்டுமே...

சமூக அந்தஸ்துக்காகவும் சம்பளத்துக்காகவும் கற்பிக்க வரும் ஆசிரியர்கள் எப்படிப் படிப்பிப்பார்கள் என்பதை சொல்ல வேண்டிய அவசியமே இல்லை.

எமது கிராமத்தில் நான் சிறுவனாக இருந்த போது தோட்டவேலைகள், சுமைதூக்கும் வேலைகள் என்பனவற்றிற்கு அதிகமாக பயன்படுத்தும் மாட்டு வண்டியிலே, சாதாரணமாக மாட்டு வண்டில் என்றால் பலகையில் சில்லு செய்து சுற்றிவர இரும்பு வளையம் பொருத்தப்பட்டிருக்கும். ஆனால் யாதவராயர் என்பவர் மட்டும் பெரிய லொறியின் ரயர் பூட்டியிருந்தார். அப்போது நான் அவரைக் கேட்டேன், ஏன் ரயர் பூட்டியிருக்கிறீர்கள் என்பதற்கு அவர், உருளுவது இலகுவாக இருக்கும் மாட்டுக்கும் கஷ்டம் குடுக்காது என்கிற விளக்கத்தைக் கொடுத்தார். இதை ஏன் நான் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால் இச்சிறிய மாற்றங்களுக்கு பெரிய பட்டப் படிப்போ அல்லது விஞ்ஞானி ஆகவேண்டிய அவசியமோ இல்லை. சுயசிந்தனையின் அடிப்படையில் வருவது தான் இது. இப்படிப் பலர் சிந்திக்கின்றதை செய்வதற்கு சந்தர்ப்பங்களும் சூழ்நிலைகளும் எம் பாடத்திட்டத்தில் இருக்கிறதா?

பார்ப்பனியர்களின் ஆதிக்கம் வட-இந்தியாவில் ஆரம்பித்து தென்-இந்தியாவைக் கடந்து இலங்கையிலும் புகுந்து கொண்டது. அதன் பயனாக தமிழ் இலக்கியம் என்று சொன்னால் கம்பராமாயணம், மகாபாரதம் என்பன எமக்கும் பாடத்திட்டங்களாயின. பொய்யானவற்றைப் படித்துப் படித்து அதனையே பெருமையாகப் புகழ்ந்து இன்று வரை பொய் எழுதிப் பொய் எழுதி புகழ் சேர்க்கப்படுவதனால் உண்மை இலக்கியங்கள் உருவாக வாய்ப்பில்லாமல் போயிற்று.

நீண்ட நெடுங்காலமாக தொடர்ந்து வரும் சாதிக் கொடுமைகளும் பெண் அடிமைத் தனங்களும் இவ் இலக்கியங்களால் விருட்சமாக வளர்ந்து நிற்கிறது. எமது பாடத் திட்டங்களில் பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கைகளும் சுயசிந்தனைக் கருத்துக்களும் பாடத்திட்டங்களுக்குள் புகுத்தவேண்டியது அவசியத் தேவையாகும். இதன் மூலம் தான் மனித நேயம் உருப்படவும் மக்கள் வாழ்வு மேன்மை அடையவும் வாய்ப்பு உண்டு.

எமது வேலணை மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கக் கிளை கனடாவிலும் உள்ளது. அவர்களுக்குள் இருக்கும் பிரச்சினை இயக்க மோதல்களை விட அதிகமாகி விட்டது. நம் நாட்டில் படிப்பதற்கு எந்த வசதியும் இன்றி தத்தளித்துக் கொண்டு இருக்கின்ற எதிர்காலச் சந்ததியைப் பற்றி உண்மையான நேயம் இருந்திருந்தால் ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை வந்திருக்கும். மாறாக, கோஷ்டி மோதல்கள் வளர்ந்து கொண்டு வருகிறதென்றால் கல்வித் திட்டத்தின் கோளாறு தான் காரணம். மனித நேயக் கல்வி கற்பிக்கப்படாமல் வெறும் நிசல்சீட் கல்வித் திட்டங்கள் உருவாக்கப்பட்டதன் காரணமே இப்பிரச்சினைகளுக்கு அடிப்படை என்றே நான் கருதுகிறேன். எனவே இன்று நடைமுறையில் இருக்கும் கல்வித் திட்டங்களை மனிதநேயத்திற்கும், மனித வாழ்வின் மேம்பாட்டிற்கும் உதவுகின்றனவா என்னும் ஆய்வுகளை பழைய மாணவர்களும், அறிவு ஜீவிகளும், மனித நேயம் கொண்டவர்களும் மேற்கொள்வது அவசியமாகும்.



படிப்பகம்

www.padippakam.com





*கலைப்பீடாதிபதி அலுவலகம்*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*
*இலங்கை*
*11 - 11 - 2000*

# வாழ்த்துக்கள்

அன்புடையீர்,

சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலயம், இன்று பொன்விழாவை நிறைவு செய்து வைர விழாவை நோக்கி பல்வேறுபட்ட இன்னல்களுக்கு மத்தியில் இயங்கி வருகின்றது. கல்லூரியை சுற்றி இராணுவ முகாம் அமைந்துள்ளது. சுற்றியுள்ள கிராமங்களில் வாழ்ந்த மக்களில் 1% மக்களே இன்று வாழ்கின்றனர். ஏற்ற போக்குவரத்து வசதி இல்லை. இருக்கும் மக்களும் பல துயரங்களை அனுபவித்துக்கொண்டு பொழுதைப் போக்குகின்றார்கள். இப்படியுள்ள நிலையில் கல்லூரி இயங்குகின்றது என்று கூறினால் அது அதனது அதிபர்,ஆசிரியர்கள், அபிவிருத்திச் சபையினர், பழைய மாணவர் சங்கத்தினர், வெளிநாடுகளில் இயங்குகின்ற மாணவர் சங்கத்தினர், கல்வித் திணைக்களத்தினர் ஆகியோரின் மொத்த உழைப்பினால் தான் என்று கூறினால் அது மிகையாகாது.

இவர்களை வாழ்த்துவது கல்லூரியை வாழ்த்துவதற்குச் சமமானது. இவர்கள் அனைவரும் நீடுழி வாழவேண்டும். கல்லூரியும் தனது பொற்காலத்தினை நோக்கி வீறு நடை போடவேண்டும் என வாழ்த்த விரும்புகிறேன்.

இந்த நிலையில் எமது பழைய மாணவர்கள் கனடா, பிரான்ஸ், பிரித்தானியா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் கிளைச் சங்கங்களை அமைத்து எமது ஊரின் புகழையும் கல்லூரியின் புகழையும் வளர்ப்பதுடன் மட்டுமல்லாமல் எமது கல்லூரிக்கு பல விதங்களில் உதவி செய்தும் வருகின்றனர். கனடா வாழ் பழைய மாணவர்கள் "கலாதீபம்" என்ற இதழை வெளியிட்டு வருகின்றனர். அதே வழியில் பிரான்சில் நமது மாணவர்களும் "வித்தியாலயம்" என்ற இதழை வெளியிடுகின்றனர். இந்த வெளியீட்டிற்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

மக்கள் இடம் பெயர்ந்த போதும் கல்வி நிலையங்கள் இயங்குகின்றன. ஆலயங்களில் நித்திய நைமித்தியங்கள் நடைபெறுகின்றன. திருநாவுக்கரசு நாயனார் "ஆலயம் இல்லாத ஊரில் குடிவாழக் கூடாது" என்று அருளினார். சுப்பிரமணிய பாரதியார் கல்வி நிலையம் இல்லாத ஊரில் குடிவாழக் கூடாது என்று பாடினார். இவை இரண்டு விடயங்களும் வேலணையில் மட்டுமல்ல, தீவுப் பகுதியில் மட்டுமல்ல யாழ்ப்பாணம், வலிகாமம், வடமராட்சியிலும் இயங்குகின்றன. இது தொடர வேண்டும். சண்டை வேண்டாம் சமாதானம் வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

வணக்கம்

பேராசிரியர் செ.பாலச்சந்திரன்
பீடாதிபதி, கலைப் பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை.



படிப்பகம்

www.padippakam.com



# திரும்பல்

நடந்து வந்த பாதையை நானும்
திரும்பிப் பார்க்கிறேன்
கடந்து போன காட்சிகள் யாவும்
கனவாய் காணுகிறேன்

கோயில் கட்டி பூசைகள் செய்த
கோலத்தை எண்ணுகிறேன்
சாவில் கூடி ஆடிப்பாடிய
காலத்தை எண்ணுகிறேன்

பாயும் அருவியில் பாய்ந்து குளித்ததை
பாங்காய் எண்ணுகிறேன்
நோயும் பிணியும் கவலையுமின்றி
வாழ்ந்ததை எண்ணுகிறேன்

கள்ளம் கபடம் கவலைகளின்றி
கடமையைச் செய்தேனே
அதிபர் ஆசிரியர் ஆகியோர்க்கடங்கி
கல்வி பயின்றேனே

மெல்ல மெல்ல பதுங்கி வேலி
பாய்ந்து தாண்டிய பின்
துள்ளித் துள்ளி தோழர்களோடு
திருவிழாப் பார்த்தேனே

நண்பர்களோடு சேர்ந்து செய்த
குறும்புகளை நான் மறவேன்

தந்தையின் கையில் தடியைக்கண்டு
ஒழித்ததை நான் மறவேன்

செத்தையில் பிடித்து சைக்கிள் பழகிய
காலத்தை மறக்கவில்லை
பத்தையில் விட்டு கிழவியை மோதிய
கதையையும் மறக்கவில்லை

சந்தைக் கடகம் சிதறி விழுந்த
காட்சியை நான் சொல்லவா
சிந்தை நொந்த பாட்டியின் வேதனை
திட்டுகள் நான் சொல்லவா

இளநீர் பிடுங்கிக் குடித்த கதையை
இன்னமும் மறக்கவில்லை
பழங்கள் காய்கள் பிஞ்சுகள் இனிமை
இலேசில் மறைந்திடுமோ

மணலில் சோறு கறிகள் காய்ச்சிய
மகத்துவம் காணுகிறேன்
பலனில்லாத வேலைகள் செய்து
திட்டும் வாங்கியுள்ளேன்

ஆடி ஓடி அடங்கிடும் வாழ்க்கையின்
அருமையை நானறிவேன்
கோடி கொடுத்துக் கும்பிட்டாலும்
போனது வந்திடுமா

வானவில்லாம் வாலிபம் மறையுமுன்
செய்வன செய்வோமே
போன வாழ்வு திரும்பி வராது
என்பதை உணர்வோமே

*சி. ஜெயந்திமாலா*
*ஆண்டு — 12 (கலைப்பிரிவு)*

---

▶▷▶ *வாழ்க கல்லூரிச் சேவைவங்கக் கடல் சூழ்ந்திருக்க வயல்வெளிகள் செழித்திருக்க*
*வந்தோரை வரவேற்கும் வேலணையம் பதி தன்னில்*
*சங்கத் தமிழின் பெருமையினை தன்மக்கள் அறியவைத்த*
*எங்கள் கல்லூரித் தாயால் ஏற்றிவைத்த தீபங்கள்*
*செங்கதிரோன் ஒளி போல தேசமெல்லாம் ஒளி பரப்ப வாழ்த்துகின்றேன்.*

*சங்கேதம் நிறைந்த மாணவர் சங்கங்கள் பல தோன்றி*
*பங்கங்கள் சூழ்ந்திடாமல் படித்த கல்லூரியின் பெருமை காத்து - நற்*
*பணிகள் பல செய்து நலிந்தோரின் துயர் துடைக்கும்*
*அற்புதம் நிறைந்த செயலை அகிலம் போற்ற வாழ்த்துகின்றேன்.*

*அறிவுடைச் செல்வங்கள் அவனியில் தழைத்தோங்க*
*நெறியுள்ள வாழ்வுதனை நேர்மையுடன் நிலை நாட்ட*
*வழி சமைத்துக் கொடுத்த தெங்கள் வழமான கல்லூரி*
*வளர்ந்துவிட்ட மாணவரின் சேவைதனை மனதார வாழ்த்துகின்றேன்.*

*சிப்பி வாய் முத்துக்கள் சிரிக்கின்ற தெம்மண்ணில்*
*அத்திபோல் பூத்து அகிலமெல்லாம் மணம் பரப்பி*
*புத்தி யீவிகளை புகழுடனே வாழ வைத்த வேலணை*
*மத்திய மகா வித்தியாலயமே உன் புகழ் வாழ வாழ்த்துகின்றேன்.*

*ஆக்கம்*
*–வேலணையூர் சிவா–*
*ஐக்கிய ராச்சியம்*



படிப்பகம்

www.padippakam.com



# ஆடும் குட்டியும்

## உருவகக் கதை

**பச்சை** பசேலென்றிருந்து அந்தப்புல் வெளி. கண்ணுக்கெட்டியதுாரம் சமனற்ற தரையாக இடையில் வரம்புகளற்றிருந்தது. ஆவினமோடி இல்லிடம் நாட புள்ளினமோடி புகலிடம் நாட இரவும் பகலும் கலவியலில் ஈடுபடும் மனோரம்மியமான இளம்மாலை நேரம்.
அந்த அற்புதமான அமைதியான அழகான மாலைப்பொழுதில் இருப்பிடம் போக வேண்டுமென்ற அவசரத்துடன் ஆடொன்று வேகமாக மேய்ந்துகொண்டு நின்றது. ஆட்டின் குட்டி துள்ளிக்குதித்து அமர்கொண்டிருந்தது. குட்டி தாய்க்கு தனிக்குட்டி என்றதாலோ வளர்ந்து மிருந்தது.
குட்டி பால்குடிப்பதும் இடையிடையே " டேஸ்ட் " டிற்காக புல்லைக் கடிப் பதுமாக இருந்தது.
" அம்மா சண்டை பிடிக்க வா "
குட்டி தாயை சமருக்க ழைத்தது.
" சும்மா இரடா " தாய் தடுத்தது.
" வீட்ட போக வேணும் நேரம் போச்சுது நீ விளையாடியிண்டு நிக்கிற ".
" அப்ப வீட்ட போய் சண் டை பிடிப்பமா? "
"ஏன்ரா என்னை இப்ப சண்டைக்கிழுக்கிற உனக்கு கொழுப் பெண்டா அந்தக் கல்லோட போய்ச் சண்டைபிடியன்.
"கல்லு திருப்பி அடிக்காதே கல்லும் திருப்பி அடிச்சால்த்தான் சண்டைபிடிக்கிறமாதிரி இருக்கும் ".
குட்டி சண்டைக்கு வரை விலக்கணம் கூறியது.
தாயை சண்டை பிடிக்க வரும்படி குட்டி கட்டாயப்படுத்தியது. தாயாடு அப்படி இப்படி சாக்குப் போக்குச் சொல்லி சமா தானப்படுத்த முயன்றும் இறுதியில் முடியாமல்ப் போனது. சண்டைக்கு ஒப்புக்கொண்டது.
தாய் பிள்ளையிடையே சண்டை மூழ்வது இயல் பாயிருந்தாலும் அதற்கும் தகுந்த காரணம் வேண்டுமல்லவா?
தாயாடு காரணம் கேட்டது.
குட்டி ஒரு ஐடியா சொல்லலானது.
" அம்மா நீ போய் அந்தக் கல்லுக்கு மேல ஏறி நிண்டு இது என்ர கல்லு எண்டு சொல்லு நான் வந்து உன்ன இடிச்சுத்தள் ளிப்போட்டு இது என்ர கல்லு எண்டு உரிமை கொண்டாடுறன்.
அப்ப ரெண்டு பேருக்கும் கோபம் வரும் கோபம் வந்தா சண்டை தொடங்கும் ".
" உனக்கென்ன கொழுப்பு புடிச்சுட்டுதாடா நீ குழந்தப்பிள்ளை விளங்காத் தனமா இடிப்ப நான் உன்ன பெத்துவளத்து ஆளாக்கினனான் உனக்கிடிக்க எப்பிடியடா மனம் வரும் ".
தாயாடு பாசத்தோடு பரிந்துரைத்தது.
" ஆறு அறிவுள்ள மனுச ரெல்லாம் சண்டை பிடிக்கினம் நாம பிடிச்சா என்ன? அமெரிக்கா விட்ட வாங்கின ஆயுதத்தால அமெரிக்காவுக்கே திருப்பி அடிச்சது ஈராக்".
உவமான உவமேயங்களோடு குட்டி விளக்கமளித்தது.
" மனுசர் அப்பிடிச் செய்யினமெண்டா நாமளும் அப்பிடிச் செய்யிறதா ? "
மனிதரை பலவீனப்படுத்தியது தாயாடு.
குட்டியினதும் தாயினதும் விவாதம் தொடர்ந்தது.
" வாத்தியாரிட்ட படிச்ச பிள்ளையள் வாத்தியார் வேல தான் பாக்கவேணுமா? இஞ்சினியர், டொக்டர் ஆகிறதில்லையா? நான் பெரிய ஆளா வந்தால் உனக்குத் தான் பெருமை. உன்ர மகன் வீரனா வாறது உனக்கு விருப்பமில்லையா? ".
" ஓமடா நீ வீரனா வந்தால் எனக்குத்தான் பெருமை அதுக்கு அம்மாவோடயாடா சண்டைபிடிக்கவேணும் எதிரியள அடிச்சாத் தான் நீ வீரன் எண்டு தெரியும் அதவிட்டுப் போட்டு தாய் தகப்பனோட இனசனததோட சண்டித்தனம் பண்ணி உன்ர கொழுப்பைக் காட்டவாற.
ஆடும் குட்டியும் குறிப்பிட்ட அந்தக் கல்லை நெருங் கியது.
" இவ்வளவு காலமும் அம்மாவோட எதிர்த்து வாயடிச்ச இப்ப என்னடா எண்டா சண்ட பிடிக்கிற அளவுக்கு வந்திட்ட ".
தாயின் பழமையும் பண்பும் பேசியது.
" இப்ப இந்நக் கல்லில ஏறி நிக்கறியா இல்லையா? "குட்டி அவசரப்பட்டது.
குட்டி விட்டுக்கொடுப்ப தாகவில்லை. குட்டியின் குருட்டுத்தனத்தையும் குழந்தைத்தனத்தையும் மன்னித்து சமாளிக்கமுடியாமல்ப் போனது.
" கல்லின் மேல் ஏறி நின்று இது மனுசர் நட்ட கல்லு. எல்லைக்கு வைச்சினமோ அடையாளத்துக்கு வைச் சினமோ தெரியாது? "மனுசர் வைச்சாலென்ன, மாடு வைச்சசாலென்ன, எல்லைக்கல்லா இருந்தாலென்ன, தொல்லைக்கல்லா இருந்தாலென்ன ஏறிநில்".
குட்டி பாய்ந்து இடித்தது, தாயும் எதிர்த்து இடித்தது. எதிர்த்து இடிப்பதை இடையில் நிறுத்திவிட்டு தாயாடு வீட்டை நோக்கி ஓடியது.
குட்டி உடலைக்குலக்கி தான் வென்றுவிட்டதாக தனக்குள்ளே எண்ணிபெருமிதம் கொண்டது.

**- வேலணையூரான் -**



படிப்பகம்

www.padippakam.com





# தொப்புள்கொடி உறவை மறக்க முடியுமா?

என் இதயத்தில் வாழும் அன்பான உறவுகளே!!!

நெருங்கிய தொப்புள் கொடி உறவை ஏற்படுத்திய அந்தப் பொன்னான கிராமத்திற்கு உங்களைச் சிறிது நேரம்
அழைத்துச் செல்லட்டுமா???

மீண்டும் அந்த கல்லூரி மண்ணை நினைத்துப் பார்க்கிறேன்.
ஏறத்தாழ 35 வருடங்களுக்கு முன்னர் அரைக்காற்சட்டை போட்ட பொடியனாக சைக்கிளில் சுதந்திரமாக சுற்றித்திரிந்த காலங்கள் என் நெஞ்சில் பசுமையாகப் பதிந்திருக்கின்றன.

கரம்பன் கிழக்கு காளிகோயில் ஒழுங்கையில் உள்ள எங்கள் வீட்டில் இருந்து சைக்கிள் மிதித்து தார்றோட்டில் ஏறி முருகமூர்த்திகோயில், பேழிரீச்சர்வீடு, முத்தையர்கேணி, சபாரட்ணத்தார்வீடு, செருக்கன்சந்தி, மூன்றாம்கட்டை, சின்னமடு, புளியங்கூடல்சந்தி இவ்வளவும் முடிந்து அப்பால் செல்கின்ற போது என் சைக்கிளின் வேகம் தானாகக் குறைய எனது சிரம் மதிலின் மேலாக உயர்ந்து, கணித ஆசிரியை திருமகள் கேதாரநாதன் அவர்களை சற்று எட்டிப்பார்க்க, இதயம் கனிந்த நன்றிகளை என் உள்ளம் மௌனமாக முணுமுணுக்கும். தொடர்ந்து சிறிது தூரம் செல்ல வேலணையின் அறிவுக்களஞ்சியமாக கம்பீரமாக உயர்ந்து பரந்து நிற்கின்ற மத்திய மகா வித்தியாலயம் என்னை வாவா என்று வரவேற்கும்.

ஆறாம் வகுப்பில் இருந்து G.C.E.(A/L) வரை படித்த பின்னர், யாழ்ப்பாணம் புனித சம்பத்தாசிரியர் கல்லூரி அதன்பின்னர் கட்டுப்பேத்த பல்கலைக்கழகம், என என்வாழ்க்கையைச் செப்பனிட்ட இம்மாபெரும் கல்லூரியையும், படிப்பித்த ஆசிரியர் ஆசிரியைகளையும் என்றும் எண்ணிப் பெருமைப்படுபவன். அதைவிட வேலணைக்கிராமத்தில் மட்டுமல்லாமல் தீவுப்பகுதியின் சுற்றியுள்ள சகல கிராமங்களிலும் வாழும் மாணவர்களுக்கு வழிகாட்டியாக அமைந்து, வேலணைமண்ணின் பெருமைக்குப் பெருமை சேர்த்த மாபெரும் நிறுவனம் என்பதை எண்ணி மீண்டும் பெருமைப்படுபவன்.

சட்டத்தரணி திரு. ரகுபதி அவர்கள், கரம்பன் மேற்கு சண்முகநாத வித்தியாசாலையில் அதிபராக இருந்தகாலம், கணிதத்தில் பி.எஸ்.சி. சிறப்புப்பட்டமும், டிப்ளோமாப்பட்டமும் பெற்று, கணிதம் கற்பிப்பதற்காக திரு. வே. தம்பு அவர்கள் மயிலிட்டியிலிருந்து, கரம்பன் மேற்கு வந்து சேர்ந்தார். எனது தந்தை அமரர் சிவனடியான் அவர்களும் கரம்பன் மேற்கை பிறப்பிடமாகக் கொண்டதால் இவர்கள் இருவரின் நட்பு மிகவும் இறுக்கமானது.

சில வருடங்கள் கழித்து 1951 இல் திரு. வே. தம்பு அவர்கள் Super Grade Principal ஆக பதவி உயர்வு பெற்று வேலணை மத்திய மகா வித்தியாலயத்தில் கடமை ஆற்றத் தொடங்கினார். இதேவருடத்தில் பிறந்த எனக்கு ஸ்ரீ வரக்கூடியதாக பெயர் வைக்கும்படி, நண்பன் தம்பு அவர்களிடம் ஆலோசனையை நாடினார் எனது தந்தை. அதிபர் ரகுபதிக்குக் கீழ் பணிபுரிந்தகாலம் மிக முக்கியத்துவம் வாய்ந்ததெனக் கூறும் அதிபர் வே. தம்பு அவர்கள் ஸ்ரீயுடன் யையும் சேர்த்து, எனக்கு ஸ்ரீபதி எனும் பெயர் சூட்டி இக்கல்லூரிக்கும் எனக்கும் இடையே ஏற்படுத்திய தொப்புழ்கொடி உறவை மறக்க முடியுமா???

**ஸ்ரீபதி சிவனடியான்**
*10.12.00*
பிராங்பேர்ட் ஜெர்மனி



படிப்பகம்

www.padippakam.com



# போதையால் யாவும் அழிகின்றது

இன்றைய உலகின் இளம் தலைமுறையினரை தன் வலையில் வீழ்த்தி அவர்கள் வாழுகின்ற நாடுகளுக்குப் பெரும் தலையிடியைத் தந்து கொண்டிருக்கும் பெரும் பிரச்சினை போதை வஸ்துகளால் வந்ததாகும். உடலிற்கு மனவெளுச்சியை அல்லது உளமாற்றத்தை தரும் இரசாயனப் பொருள் அனைத்தும் போதைவஸ்து ஆகும். மதுசாரம், புகையிலை, கோப்பி, தேயிலை, கொக்கோக் கோலா முதலான பானங்களில் இருக்கின்ற கஃப்பெயின் கூட ஒரு போதை வஸ்து தான். இதை அளவாக நீண்ட காலமாகப் பாவித்துக் கொண்டு வருவதால் உடல் உள ரீதியாக பெரும் பாதிப்புக்கள் ஏற்படவில்லை. இன்று கூடுதலான மனவெளுச்சியைத் தருகின்ற போதைப் பொருட்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அவையாவன: மரியவானா, அம்ரெற்றாமைன்ஸ், பாபிற்று, றேற்ஸ், நாகோற்றிக்ஸ் கொக்கையின் போன்றனவாகும். இந்தப் போதைப் பொருளால் ஏற்பட்ட, ஏற்பட்டுக் கொண்டிருக்கும் அழிவுகள் பற்றிப் பார்ப்போம்.

உலகிலே உள்ள அனைத்துப் போதை வஸ்துக்களுமே மனிதனுக்குத் தீங்கு பயப்பன என்பதில் சந்தேகமே இல்லை. போதைவஸ்துக்களை ஊசிமூலம் ஏற்றிக் கொள்பவர்கள் ஊசிகளின் தூய்மையின்மையால் இடருக்குள்ளாகின்றனர். எயிட்ஸ் எனப்படும் மகா கொடிய நோய் பலருக்குப் பரவியதன் காரணம் ஒரே ஊசியைப் பலருக்கு ஏற்றியமையாகும் என்பது புதிய செய்தியல்ல.

பல்வகையான போதைப் பொருட்களை மாறி மாறி உபயோகிக்கும் மனிதர்கள் அபாயமுறும் போது அவர்களை காப்பாற்ற முடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்படுகின்றது. அவர்கள் என்ன பொருட்களைப் பாவித்தார்கள் என அறிய முடியாத காரணத்தினால் வைத்தியர்களால் எதுவும் செய்ய முடியாத நிலையில் அவர்கள் மரணத்தை தழுவி விடுகின்றனர்.

இன்று பொதுவாக இளம் வயதினர் மதுசாரம், புகையிலை, மரியவானா என்பவற்றைக் கூடுதலாக பாவிக்கின்றனர். புகையிலையில் உள்ள நிக்கோட்டின் எனப்படும் நச்சுப் பொருள் இதயத்தையும் நரம்பையும் உருக்குலைக்கின்றது. சிகரெட் ஒன்றின் புகை உள்வாங்கப்படும் போது நுரையீரலும், இதயமும் வேகமாக அடித்துக் கொள்கின்றன. அதனால் இரத்த அழுத்தம் அதிகரித்துக் கொள்கின்றது. உலகின் சனத்தொகையில் 1/3 பங்கினர் புகை பிடிப்பவர்களாக உள்ளனர்.

தொடர்ந்து பாவிக்கும் போது அவர்கள் உடல் நலம் குன்றுகின்றார்கள். நுரையீரல் பாதிப்புற்று இருதய நோய் ஏற்படுகின்றது. புற்றுநோய்க்கும் உள்ளாகின்றனர்.

வைன், பியர், விஸ்கி, சாராயம் முதலான குடிவகைகளில் இருக்கின்ற மதுசாரம் உடலிற்கும் உள்ளத்திற்கும் தீங்கு தருவதாகும். இவற்றினை தொடர்ந்து மிக அதிகமாகப் பாவிப்பதால் ஈரல் கருகிப்போக வாய்ப்புண்டு. மூளையும் இருதயமும் பாதிப்புறும். தொடர்ந்த குடி மூளையின் நிரந்தரமான இயக்கத்திற்கு தடையாகி விடும். நினைவிழக்கச் செய்யும். "அல்க்கோலிசம்" என்பது இன்று உலகின் மிகப் பெரிய பிரச்சினைக்குரிய வியாதியாகி விட்டது.

கடந்த தசாப்தங்களில் அபிவிருத்தி அடைந்த நாடுகளில் குறிப்பாக அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் மரியவானாவும், ஹொல்சிஸ்சும் அதிகமாகப் பாவிக்கப்பட்டு வருகின்றன. இதனைப் புகைப்பதன் வாயிலாக உடலிற்குள் செலுத்தவும் முனைகின்றனர். இவற்றின் போதையால் இன்று அமெரிக்காவில் 45 மில்லியன் மக்கள் பாதிக்கப்பட்டு இருக்கின்றனர். இவற்றால் நரம்பு மண்டலம் பாதிக்கப்பட்டு இருக்கின்றது. தொடர்ந்து பாவித்து விட்டு திடீரென விட்டவர்கள் தலையிடி, நரம்புத் தளர்ச்சி போன்ற வியாதிகளுக்குட்படுவர். அதற்காக தொடர்ந்து பாவிப்பவர்கள் விரைவாக மரணவாயிலை நெருங்குகின்ற அற்புதக் காட்சியை காண முடிகின்றது.

**செல்வி. இ. கம்சத்தினி**
**ஆண்டு - 8A**



படிப்பகம்

www.padippakam.com





*க. வாசுதேவன் இருத்தல் பிரான்ஸ். பிரெஞ்சு தமிழ் இலக்கியத்தில் மிகுந்த ஈடுபாடு. பிரான்சுக்குவந்து நான்கு வருடத்தில் பிரெஞ்சு சிறுகதைகளைத் தமிழில் மொழிபெயர்த்த அபார மொழியாற்றல், மொழியைக் கையாளல், அற்புதம். பற்றுறுதியான கருத்துநிலை, கருத்துகள் கருக்குகள், வார்த்தையில் "வித்தகன்". தற்போது Nanterre University இல் Internet Engineering படித்துக் கொண்டிருக்கிறார்.*

# Fernando Perssoa

## உடன் ஓர் சந்திப்பு

### கல்லறைக்கப்பால்...

## 'நான் அவனல்ல'

– க. வாசுதேவன் –

சிலவேளை ஒரு காலையாகவிருந்திருக்கலாம்.
அன்றில் ஒரு மாலையாகவிருந்திருக்கலாம்,
காலையைப் போன்றும் மாலையைப்போன்றும் தோன்றும் ஒரு மதியப்பொழு தாகவும் இருந்திருக்கலாம்,
தகரக்கூரையில் பொழியும் அர்த்தராத்திரி மழையை வீட்டிற்குள் தனியாக விழித்திருந்து கேட்பதுபோல், ஜன்னலோரமாகக் கதிரையொன்றில் அமர்ந்திருந்து, வெளிப்புறத்து மரங்களின் இலைகளில் காலம் பொழிவதைக் கண்களால் கேட்டவாறே, வானொலியை ஏதேச்சையாக முடுக்கி விட்டேன்.

### கவிதை நிகழ்வு.

துணிவுடன் என்னை வாசிக்கப்போகின்றவர்களுக்கு எனது தொப்பியை அகற்றி வணக்கம் செலுத்துகிறேன்.
நான் அவர்களை வணங்குகிறேன்.
அவர்களுக்கு வெய்யிலும் தேவையானபோது மழையும் பொழியட்டும்.
எனது கவிதைகளை வாசித்தவாறு அமர்ந்திருப்பதற்கு அவர்களின் இல்லத்தில் ஒரு கதிரையும் இருக்கட்டும்,
அங்கிருந்து என்னை வாசித்தவாறு என்னை ஒரு இயற்கைப்பொருளாக எண்ணட்டும்,
விளையாடிக் களைத்து ஓய்ந்து தொப்பென்று குந்தி வியர்வை துடைத்து குழந்தைகள் இளைப்பாறும் நிழலைக்கொடுக்கும் ஒரு கிழமரமாக அவர்கள் என்னை எண்ணட்டும்...
கவிதை தொடர்ந்தது. திறந்த ஜன்னலருகே கதிரையொன்றிலிருந்து இக்கவிதையைக் கேட்டுக்கொண்டிருந்த எனது செவிகளில் தேவையை நோக்கிய ஏதேச்சையின் தெய்வீக அழைப்பு தெளிவாகவும் ஆணித்தரமாகவும் வீழ்ந்தது. தவிர்க்கமுடியாத இவனின் அழைப்பு என்மீது ஏற்படுத்திய தவிப்பினால் இவனைத் தேடினேன்.
எனக்குப் பின்னர் பிறந்த இந்த எனது மூத்த சகோதரனை நீண்ட காலமாகத் தேடி அவனின் இறப்பின்பின் சந்தித்துக்கொண்டேன் ஏதோ ஒரு நகரின் ஏதொவொரு வீதியிலுள்ள ஒரு கடைக்குள் சென்று சிகரட்டுக்களை வாங்கி அதிலொன்றைப் பற்றவைத்துப் புகையை உதியவாறு கனவில் நடப்பவனைப் போல் நடந்து கொண்டிருந்தான். தலையில் ஒரு தொப்பி, மூக்குக் கண்ணாடி, குறுமீசை, கையில் முகவரியிடப்படாத கடிதம்.
மாடிப்படிகளில் ஏறி தனது வீட்டின் கதவைத் திறந்துகொண்டு உள்ளே சென்று தாழ்ப்பாள் இட்டுக்கொண்டான். பின்தொடர்ந்த நானோ கதவின் முன்னால் நின்று தயங்கினேன்.
உள்ளே சம்பாசனையொன்று கேட்டது. ஒரே குரல் மீண்டும் மீண்டும் ஒலித்தது.
கேள்வி கேட்பவனும் பதில் கூறுபவனும் அவனாகவேயிருந்தான். பல குரல்கள்.
மனத்தின் பல வடிவங்கள், கவிஞனின் பல அவதாரங்கள்.

(வாழும் உலகில் உன்னை வரையறுக்க முடியாதவனாய் ஏன் வாழ்கிறாய்?
(ஏனெனில் வாழ்க்கையென்றொன்று நிஜமாகவில்லை.
(ஏன் கவிதை யெழுதுகின்றாய்?
(கவிதை யெழுதுவதென்பது என்வகையில் நான் தனியாகவிருப்பது.
(உனக்கென்றோர் பெயருண்டு?
(PERSSOA என்றால் யாருமில்லையென்று பொருள்.
(உனக்கென்றோர் நாடுண்டு?
(எனது நாடு போர்த்துக்கீச மொழி.
(எதற்காக வாழுகிறாய்?
(நான் வாழவில்லை. வாழ்தல் என்பது பற்றிய எனது அர்த்தத்தில், அதாவது இழத்தலில், தோற்றலில், சலித்தலில், அழுதலில் நானிருக்கிறேன்.

ஆம், இதுதான் நானிருக்கும் விதம். வாழும் விதம்,
நான் இருக்கிறேன்.
இருக்கிறேன்...
இருக்கிறேன்... இருக்கிறேன்...
வெளியே நின்று கேட்டுக்கொண்டிருந்த எனக்கு அவனின் அழுகுரல் கேட்டது.
ஒரு குழந்தையைப்போன்று விக்கலெடுத்து அழுதான்.
கதவைத்தட்டவேண்டும் என்று மனதில் பட்டும் தயங்கியவாறு நின்றுகொண்டிருந்தேன்,
தட்டுவதா... விடுவதா...

சில கணங்களில் அவனாகவே கதவைத்திறந்தான். ஆச்சரியத்தால் நான் கண்களைத்திறந்தபோது அவன் கூறினான்.

தட்டினால்தான் கதவை திறப்பேன் என்று அடம்பிடிக்கும் தத்துவத்தை



படிப்பகம்

www.padippakam.com



நூற்றாண்டு காலமாக உளறுபவர்களைத்தேடாது, என் கதவின் முன் தட்டத்தயங்கிய அனைவருக்கும் என் கதவைத்திறக்கிறேன்.

மேலும் எதுவுமே கூறாமல், உள்ளே சென்று ஜன்னலின் அருகேயுள்ள இருக்கையொன்றில் அமர்ந்திருந்து மீண்டும் பேசலானான் "

ஜன்னலூடாகக் கீழே தெரியும் தெருவைப்பார். நீண்ட, கரிய, சிலேட் மட்டையைப் போன்று தென்படுகின்றது. தெருவில் திரியும் மனிதர்களைப் பார். இவர்களெல்லாம் சிலேட் அல்லது மட்டையில் எழுத்துக்களைப் போன்றுள்ளார்கள். அசையும் எழுத்துக்கள். எவ்வித வடிவத்தையோ, அல்லது வசனத்தையோ அமைக்கமுடியாத நிரந்தர அசைவுக்குள் தள்ளிவிடப்பட்ட எழுத்துக்கள். இவர்களெல்லாம் எதிர்பார்ப்புகளுடன் அலைகிறார்கள். எதிர்பார்ப்புகள் அமுகிக்கொண்டிருக்கும் மாயைகள்.

இவர்கள் மத்தியில் நானும் வாழ்கிறேன். இவர்களுக்கெல்லாம் நான் அன்னியனாகவுள்ளதை இவர்கள் அறியவில்லை. ஏன், நான் கூடத்தான் அறியவில்லை. அனைவரும் என்னைத் தன்னவன் என்று எண்ணினார்கள். எவ்விதத் தோற்ற ஒருமைப்பாடுமற்ற நான் அனைவரைப்போன்றும் தோன்றுகிறேன். எந்தக் குடும்பத்திலுமற்ற நான் அனைவருக்கும் சகோதரனாயிருக்கிறேன்.

நீண்ட நேரம் அமைதியாகவிருந்தான். ஏதோ சொல்ல வெண்ணி வாயெடுத்தபோது அதையுணர்ந்து கொண்ட அவன்மீண்டும் சொன்னான்.

இல்லை, சொல்லாதே ஒவ்வொரு சொல்லும் அளவுக்கதிகமானது. எதுவும் சொல்லாதே! ஓ! சகோதரனே, உனக்கு முன்னிருந்த ஊழி அமைதியை மட்டும் விடு. கடற்கரை மணலில் அலையடிப்பதுபோல் என்னிதயத்தில் எதற்காக வேதனையலைகள்?
என்ன வேதனை! சொல்ல அறியேன்.
தனது உணர்வுகள் என்னவென்று சரியாக அறிந்தவன் யார்?
அசையாதே!
இறப்பினிடமிருந்து எதுவும் தப்புவதில்லை.
நிலவொளியையும், கடலலையையும், காலத்தையும், கதைக்க மறந்த கதைகளையும் தவிர.
வந்து போன மாலைப்பொழுதுகளுடன் மீண்டும் மீண்டும் வந்து போகும் மாலைப்பொழுதுகள். தூரத்தில் நாய்கள் குரைக்கின்றன.
நன்மையிதுவென்றும், தீமையிதுவென்றும் பார்க்கமுடியாதபோது உலகத்தை ஒரு வெளியாகப் பார்க்கிறேன்.
தூரத்தில் நாய்கள் குரைக்கின்றன.

தினமும் யன்னலில் நின்று பார்க்கும்போது தினமும் ஒருகுருடன் பாடிக்கொண்டு போகிறான். அவனது வாத்தியமும் அழுகிறது அவனும் அழுகிறான் இரக்கத்தை மட்டும் தேடும் இந்தப் பயணியும் இவனது வாத்தியமும் வேறன்று. நானும் வீதியில் பாடும் குருடன். ஆனால் எதையும் வேண்டிப்பாடுவதில்லை.

அதோபார், தொலைவில், அந்தகார இருளில், இருளின் தனிமைக்குள், ஜன்னல்.
ஒன்றின் பின்னால், விளக்கொன்றின் தீபம். நகரத்தின் மிகுதி இருளில், நானறியாத, அந்தத் தீபத்தை ஏற்றியவனுக்கும் எனக்குமிடையில் கண்டிடமுடியாத, கண்டுகொள்ளமுடியாத அம்மனிதனுக்கும் எனக்கும் இடையில் பரஸ்பர தீபத்திற்கூடாக அறியும் வாய்ப்பு இருளில் நிற்கும் எனக்கு மட்டுமேயுண்டு. இக்கணத்தில் எனது இருத்தலை உறுதிப்படுத்த தொலைவில் பிரகாசிக்கும் யாரோ ஒருவன் ஏற்றிய தீபம் மட்டுமே ஆதாரம். அந்தகார இருளில் எரியும் அந்தத் தீபத்தை நான் பார்த்துக்கொண்டு நிற்பதால் மட்டுமே அந்தத்தீபம் இருக்கிறது என்று தோன்றுகிறது.

இருக்கும் ஒவ்வொன்றும் இருக்கிறது. ஏனென்றால் இன்னொன்று இருக்கிறது. எதுவுமில்லை. அன்றில், எல்லாமிணைந்திருக்கின்றது.

இருவரும் ஒருவரையொருவர் காணமுடியாத இருளுக்குள் நின்றோம்.
இருளிருந்ததால் இருவருமிருந்தோம்.
குரல்மட்டும் கேட்டுக்கொண்டிருக்கிறது.
குரலிலே சலிப்புத்தோன்றியதுபோல் பட்டது. சிகரட் பற்ற வைப்பதற்காக தீக்குச்சியை உரசினான். முன்னுக்குப் பக்கவாட்டில் சரித்து வைக்கப்பட்டிருந்த படமொன்றில் மாலுமிகளின் முகங்களும் கப்பல்களும் தெரிந்தன.
தீக்குச்சி அணைந்தபின், வெறிகொண்டவன்போல் சிரித்தான், மாலுமிகள்.
என்னவர்கள்... என்னவர்கள்... என்னவர்கள்...?
ஓ! என்னவர்களே!
கொலைகாரர்களே! கொள்ளைக்காரர்களே! கொடியவர்களே! போர்த்துகீசர்களே!
என்னையும் உங்களுடன் அழைத்துச் செல்லுங்கள்.
ஒரே நேரத்தில் உங்கள் ஒவ்வொருவருடனும் நீங்கள் சென்ற அனைத்து இடங்களுக்கும் நீங்கள் பொருதிய அனைத்து ஆபத்துகளையும் நானும் பொருதிப் பார்க்க விரும்புகிறேன். கொன்று குவிக்க விரும்புகிறேன். வெற்றியீட்ட விரும்புகிறேன். நாகரீகத்தை இழக்க விரும்புகிறேன். பண்பையும் இரக்கவுணர்வையும் இழக்க விரும்புகிறேன். எனது மனிதத்தை மாற்ற விரும்புகிறேன். உங்களுடன் இணைந்து இரத்தம் பருக விரும்புகிறேன். நான் போட்டிருக்கும் நாகரீக ஆடையை அகற்ற விரும்புகிறேன். உங்களில் நானுமொருவன் என்று கருதும் குற்றவுணர்விலிருந்து என்னை விடுவிப்பதற்காக என்னையும் அழைத்துச்செல்லுங்கள். இல்லாவிட்டால்... விரும்பியோ விரும்பாமலோ உங்களில் ஒருவன் என்று இன்னமும் என்னை நான் கருதும் குற்றத்திற்திற்காக... என்னைக் கழுவிலேற்றுங்கள். மரங்களுடன் பிணைத்துக் கட்டுங்கள். உங்கள் படகுகளின் பாய்மரங்களில் தொங்கவிடுங்கள். (நானும் பயணம் செய்கிறேன் என்று பாசாங்கு செய்வதற்காக) மனிதர்களைப் பொருட்களைப் போன்று அடிமைகளாக்கி விற்றுச் சித்திரவதை செய்தவர்களே! என்னையும் விற்பனை செய்யுங்கள். என்னை விற்றுத் தங்கத்தையும் முத்துமணிகளையும் மாற்றீடாக பெறுங்கள். சித்திரவதை செய்யுங்கள். காயப்படுத்துங்கள். துண்டாடுங்கள், உங்களின் குருதிவெறிக்குள் என் ஆத்மாவைத் தோய்த்தெடுங்கள்.

ஓ! என்னவர்களே!!
நான் பயணம் செய்கிறேன். பயணம் செய்தலென்றால்" நாடுகளையிழத்தல், நகரங்களையிழத்தல், மீண்டும் மீண்டும் இன்னொருவனாக இருத்தல், நிரந்தரமாக ஆத்மாவின் வேரைப்பிடுங்குதல்.

நான் எதுவுமில்லை. என்னால் எதுவுமியலாது. நான் எதையும் தேடவுமில்லை.
மாயைகள் நிரம்பிய ஒரு கனவைக் காவுகிறேன்.
புரிந்து கொள்ளல் என்பதை நான் புரியவில்லை.
எதுவுமில்லையென்ற நான் எதுவாகவிருக்க வேண்டுமோ.
அதுவாகவிருப்பேனோ என்பதையும் அறியேன்.
மாயைப் பூக்கள் அவற்றின் தண்டுகளிலேயே மடிந்துவிட்டன.
இருளின் மடியில் உறங்கு. ஓ! என்னிதயமே!



படிப்பகம்

www.padippakam.com



நினைவினூடாக ஒரு இசை கேட்கிறது.
பரிதாபமான இசை.
ஏனோ தெரியவில்லை நிலைத்துவிட்ட என்பார்வை கண்ணீரால் நிறைகிறது.
உன்னை நான் எங்கேயோ கேட்டிருக்கிறேன்.
ஓ! இசையே.
உன்னில் அடையாளம் காணும் எனது இளமைப்பருவத்திலா உன்னை நான் கேட்டேன்?
எத்தனை வெறியுடன் என் குழந்தைப்பருவத்தை யான் நேசிக்கிறேன்.
அப்போது நான் ஆனந்தமாகவிருந்தேனா? அறியேன்.
ஆனால் இப்போது என் குழந்தைப் பருவத்தில் ஆனந்தமாகவிருக்கிறேன்.
என்னிலிருந்து தொலைவில், குழந்தையாக, என்னில், இப்போதிருக்கும் நானாகவற்று, நானிக்கிறேன்.
கண்ணீர்த்திரைக்கூடாக இந்த இசை அனைத்தையும் காட்டுகிறது. அந்த நாட்களையும் அனைத்தையும், எனக்கொரு வீடிருந்தது. எனக்கொரு தாயிருந்தாள். நிலவொளியிலிருந்தது. முற்றமிருந்தது.
தாயே! அனைத்தும் மாயை என்றும், பொய்யென்றும், வெறுமைறென்றும் உணர்ந்து கொண்டு வருவதைத் தடுக்க ஒரு தெய்வமில்லையா?
நொருங்கிப்போ என்னிதயமே! நொருங்கிச் சிதறிப்போ!

இருண்ட யன்னற் கரையில், இருளைவெறித்துப்பார்த்துக் கொண்டு இருளுக்குள் நின்ற இவனை இருளுக்கூடாக தெளிவாகப் பார்த்துக் கொண்டிருந்தேன்.
அலறல்கள் சங்கமித்தன.

நீண்ட நேர அமைதி,
அனைத்துச் சத்தங்களுக்கும் முன்னர் இருந்த அதே அமைதி.

திடீரெனக் கதவுகளில் யானைப்பலத்துடனான தட்டல்கள். திறக்காவிட்டால் கதவுகளை உடைத்துவிடுவேன் என்ற பயமுறுத்தலுடனான சத்தங்கள்.

டொக்... டொக்... டொக்...
கதவு திறபட்டுக்கொண்டது.
வந்தவன் மனிதன், தசையையும், எலும்பையும், பசியையும் தாகத்தையும் பாடும் அமெரிக்கன், மனிதனை மட்டும் பாடும் மனிதன்.
வோல்ற் விற்மன்.

இவனின் கண்களிலே சூரியன் பிரகாசித்தது. சற்று முன்னர் இருந்த இவன் இவனாகவற்று இன்னொருவனானான். அவன் பிரசன்னமாகிய அடுத்த கணமே அவனின் உள்ளத்தை பெற்றுவிட்டவன் போன்று இவன் ஆனந்தமாகினான்.

' பேரன்மாருடனும், மகன்களுடனும், பரிவாரமாகப் படையெடுத்து அகன்ற தோளை நிமிர்த்தியவாறு வேலைக்குப் புறப்படும் பாட்டனைப் பாடும் பாவலனே, என் கதவுகளைத் திறந்துவிடு. வோல்ற் விற்மன் என்ற சமிக்கையைக் கூறியவுடன் என்னை இங்கு விட்டுவிட்டு என் வீட்டை மட்டும் மேலால் தூக்கி அகற்றிவிடு. நீ இங்கு வந்தவுடன் நான் தெய்வமாகிவிட்டேன். என்னைத் தவிர்ந்த அனைத்துத் தெய்வங்களையும் என் பார்வையிலிருந்தது தூக்கியெறி. அரசியல் வாதிகளையும், இலக்கிய வாதிகளையும் என் கண்ணில் படாதவாறு அடித்துத் துரத்து.
நான் பறக்கவிரும்புகிறேன், உயரத்திலிருந்து பொத்தென்று விழ விரும்புகிறேன். கிரனைட்டைப்போன்று எறியப்பட விரும்புகிறேன்.
அனைத்தை நோக்கியும் போக விரும்புகிறேன், என்னைத் தூக்கிக்கொண்டு என் முடிவுக்குப் போகவிரும்புகிறேன் '

உணர்ச்சிகள் என்பவை தற்காலிக மரணங்கள்.
அவற்றைத் குப்பைத் தொட்டியில் போட விரும்புகிறேன்.
ஓ! வோல்ற் விற்மன்!
மனிதனைப் பாடும் மனிதனே!
அனைத்துக்குமாள கதவு நீ.
அனைத்தின்மீதுமான பாலம் நீ.
அனைத்துக்கும் போகும் பாதை நீ.

உன்னைத் தாண்டும் போதுதான் என்னைக் காண்கிறேன்.
ஓ சோதரனே!
அனைத்துச் சாத்தியங்களையும் அடைத்துவைத்துள்ள வட்டமே!
இவன் வெறிகொண்டவன் போல் காணப்பட்டான். தன்னிடம் இல்லாத, தனக்கு ஒவ்வாத இருப்பினும் உகந்த ஒன்றை அவனிடம் கண்டுவிட்டவன் போன்றும், தன்னுடைய தொலைந்த பாதியைக் கண்டுவிட்டவன் போன்றும் கம்பீரபாணியில் கனன்றான்.

நீடிக்கவில்லை
வந்தவன் போய்விட்டான்.
மீண்டும் இவன் பழையவனாகினான், புயல்போல் நின்றவன் மீண்டும் பூனைபோல் ஆகினான். புரியமுடியாத புதிரொன்றைக் காண்பதுபோல் தன்னைத்தானே கண்டுகொண்டு நின்றான்.

'ஒரு தடவை கூறியபின் எனது சிந்தனையென்பது எனதல்ல. ஒரு காற்று அடித்துச் செல்லும் வரையும் எனது நினைவினல் மிதக்கும் காய்ந்து உலர்ந்த மலர்.

எனது அகத்துக்கும் எனக்கும் இடையிலான வாதமும் நெருக்கடியும் எனக்கும் எனது ஜீவனுக்கும் இடையிலான போராட்டத்தின் வெளிப்பாடு.
எவ்வாறு எப்போது எனக்கும் எனது ஜீவனுக்கும் இடையில் இசைவு தோன்றும்?
என்னை என்னிலிருந்து இடுங்கியெடுத்து என்னுள்ளே அமைதியை ஊற்றும் எனக்கும் எனக்குமிடையான இடைவெளியெங்கே?

சுயத்தின் மீதான பரிபூரணமான பிரஞ்ஞை என்பது எத்தனை கொடுமையானது.
சலனங்களின் பிரசன்னத்தில் நீந்துகின்ற வாழ்க்கையைத் தவிர்ந்த
என் இளமை எங்கே?
என் நகரம் எங்கே?
என் வீடெங்கே?
என் தாயெங்கே?
மீண்டும் அவன் கண்களிலிருந்து கண்ணீர் உருண்டது.

இவன் எதைத் தேடுகிறான, ஏன் தேடுகிறான், எதற்காகத் தேடுகிறான் என்பதை உணரும் சக்தி என்னிடமிருக்கவில்லை.
தான் உணர்வதைச் சரியாகப் புரிந்தவன் எவனென்று இவன் கேட்பதுபோல் என்னை நானே கேட்டுக்கொண்டேன்.
ஏதோ ஒரு நகரின் ஏதொவொரு வீதியின் ஏதொவொரு வீட்டின் யன்னலிடை அவன் குழந்தையாகி அழுதுகொண்டிருந்தான்.
என்ன நகரம்?
லில்பொண்? பாரிஸ்? யாழ்ப்பாணம்?
ஏதோ ஒரு நகரிலிருந்து அவன் கண்ணீர் வழிந்துகொண்டிருந்தது.
(முற்றும்)

வார்த்தை அழகும் கருத்துச்செறிவுமான இக்கட்டுரை
ஓசையிலிருந்து மீள்பதிவாகின்றது.
நன்றி. 'ஓசை' பிரான்ஸ்



படிப்பகம்

www.padippakam.com



# இருட்டு வெளி

இன்னு மென்ன?
எஞ்சியிருப்பது நிலாக் காலத்து
பழைய நினைவுகளும் உதிர்ந்து விழுந்த
நட்ஷத்திரங்களின் காட்சிகளுமே.

வெண்ணுடை வரதலிங்கம் மாஸ்டர்
மோட்டார் சயிக்கிள் — நேர் உச்சி வார்ந்த அதிபர்
மரவேலை உலோவேலை படிப்பித்த சுப்பிரமணியமும்
அவர் அதிரடி வகுப்பும்,

அதிகாலையும் அரங்கமே உருகும்
தேவாரத்தோடு மேலும் இனிய பெண் குரலும்
எப்பவுமே அடிபோடும் சங்கீத மாஸ்டரும்
அந்தக் கார்த்திகேசு கடையும்...

இதற்குமேல்?...

மூளையைத் தூசு தட்டி இயக்கினாலும்
ஒரு துரம்பைக் கூட நினைவுக்குள் நிறுத்தவக்கில்லை
இது தகாது எனிலும்
நிஷம்.

யாரிடமும் வெட்கப் பட முடியவில்லை
ஒரு காலத்திற்காய் கனவு வளர்ந்த படி
கையில் உதிர்ந்துடைந்த நட்ஷத்திரத் தகடுகளும்
பலர் உண்ட கோப்பைகளும் பள்ளியின் முற்றுமே.

முகத்தின் முன்

மாறு வேஷம் நமக்கு மட்டுமல்ல
நினைவுகளுக்கும் தான்

ஒவ்வொரு கணமும்
ஏதொவொரு காட்சிப் படலமாய்
திரும்பத் திரும்ப திரித்துக் கொள்ளும்
அன்றைய பள்ளி யுகம்

அரை நிலவு குறைவாழ்வு மங்கலான சூரியக்கதிர்
குறை கொண்ட நினைவுத் தடயங்கள்

இதற்குமேல்
தேசத்திற்காய் இச்சை கொண்ட குறை புணர்வுகள்
இரையாகிப்போன எதிர்ப்புணர்வு
வங்களாவடிச் சங்கக் கடை பாலன்
பள்ளியுள் கூட்டிய கூட்டம்
வெடி வைத்துத் திறந்த சங்கம் — எல்லாம் வெறுமை.

*22 — 10 — 00*


**ப. வி. சிறீரங்கன்**
*ஜெர்மனி*



படிப்பகம்


www.padippakam.com






கணனிப் பயிற்சியில் எமது பள்ளிமாணவி

பாடசாலை
பரிசளிப்பு விழாவின்போது



கல்லூரி விழாவில் எம்சிறார் பாடல் இசைக்கின்றனர்





படிப்பகம்

www.padippakam.com







கல்லூரி ஆசிரியர் குழாம் ஆசிரியை வேதவல்லி...... பிரியாவிடைவைபவத்தின்போது



படிப்பகம்

www.padippakam.com



Velanai M.M.V Old Students Association U.K (World-Link)

# வேலணை மத்திய மகா வித்தியாலயம்
பழைய மாணவர் சங்கம் – ஐக்கியராச்சியம்

# VELANAI MADYA MAHA VIDYALAYAM
OLD STUDENTS' ASSOCIATION – U.K (World - Link)
30,Caledon Road, Eastham, London E6 2HE
Tel : 020 8548 4435 Fax: 020 8472 5687

Patron:
Mrs.V. Shanmuganathan

President:
Mr. R. Sivathas

Vice-President:
Mr.V.Yoganathan

Secretary:
Mrs. R. Jeyabalini

Asst.Secretary:
Mrs.M.Rajeswaran

Treasurer:
Mr.N.Balachandran

Asst.Treasurer:
Mr.S.Balasundaram

Editors:
Mr.R.Murugaverl
Mr.S.Balasubramaniam
Mr.T.Thirukumaran

Committee Members:
Mr.Siva.Aathithan
Mr.P.Sritharan
Mr.K.Nageswaran
Mr.K.Rajeswaran
Mr.T.Sivakumaran
Mr.B.Raveendran
Mr.T.Maheswaran
Mr.E.Uthayakumar
Mr.P.Sateeshwaran
Mr.P.Jeevakaran
Mr.M.Manran
Mr.M.Sivapathalingam

வேலணை மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் சங்க பிரான்ஸ் கிளையின் "வித்தியாலயம்" என்கிற தங்களால் வெளியிடப்படும் மலருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

அனைத்துத் தீவுப்பகுதி மக்களுக்கும் அறிவுச் சுடர் கொடுத்து ஒளித்தீபமாய் விளங்கிக் கொண்டிருக்கும் வேலணை மத்திய மகா வித்தியாலயத்துக்கு நாடளாவிய ரீதியில் பழைய மாணவர் சங்கங்கள் தோன்றி பல-வகையான சேவைகளை செய்து வருவதையிட்டும் வே.ம.ம.வித்தியாலய பழைய மாணவன் என்ற ரீதியிலும், வே.ம.ம. வித்தியாலய பழைய மாணவர் சங்க ஐக்கியராச்சியக் கிளையின் சார்பிலும் ஆக்கமும் ஊக்கமும் கொடுக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

தங்களின் ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்கும், நடவடிக்கைகளுக்கும் வே.ம.ம. வித்தியாலய ஐக்கிய ராச்சியக் கிளை என்றும் உறுதுணையாக இருக்கும் என்று கூறி, வே.ம.ம. வித்தியாலய பிரான்ஸ் கிளை இது போன்று இன்னும் பலகாலம் நல்ல அரும்பணிகளைச் செய்து மேம்பட வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

அன்புடன்
இ.சிவதாஸ்
வே.ம.ம.வி. ஐக்கியராச்சிய கிளை




படிப்பகம்

www.padippakam.com



# • விஞ்ஞானத்தை சமூகம் சரியாக கையாளுகின்றதா?



வேலணை மத்திய மகாவித்தியாலய பிரான்ஸ் பழைய மாணவர் சங்கம் 13.2.2000 இல் நடத்திய வருடாந்த நிகழ்ச்சியில், 'விஞ்ஞான வளர்ச்சி மனிதனின் அமைதியான வாழ்க்கையைப் பாதிக்கின்றதா?' என்ற தலைப்பில், பட்டிமன்றம் ஒன்று நடை பெற்றது. இந்த விடயம் மீதான மாற்று அபிராயங்கள் மூலம், உங்கள் சமூக அறிவை சிந்திக்க தூண்டுவதே எனது நோக்கமாகும்.



விஞ்ஞானம் என்றால் என்ன? என்ற கேள்வி எழுப்ப படாத நிலையில், விஞ்ஞானம் பற்றிய தவறான அபிராயம், சார்பாகவும் எதிராகவும் மாறிவிடுகின்றது. இந்த கேள்வி பற்றி நாம் ஆராய்வோம்.

இயற்கையில் மனிதன், இயற்கை சார்ந்து வாழ்ந்த காலகட்டம் பற்றி இன்றைய அறிவியல், குரங்கு நிலை என்று வரையறுக்கின்றது. இது குரங்கு மனிதனுக்கு முந்திய நிலை. குரங்கில் இருந்து குரங்கு மனிதனும், குரங்கு மனிதனில் இருந்து மனிதனும், பரிணாமம் அடைந்த நிலை பற்றிய தெளிவான மாற்றம், மனிதனின் உழைப்பே ஆதாரமாக காணப்படுகின்றது. மனிதன் இயற்கையை கடந்து, இயற்கை மீதாக உழைப்பின் மூலம் செயற்கையாக தனது தேவையை அடையத் தொடங்கிய வடிவம்தான், மனிதனை குரங்கில் இருந்து பிரித்தெடுக்கின்றது. மனிதன் இயற்கை மீது தனது உழைப்பை கையாளத் தொடங்கிய முதல் வடிவமே, விஞ்ஞானத்தின் ஆதி மூலமாகும்.




உதாரணமாக கைகளை கொண்டு தடியை வளைக்க, ஊன்று கோலாக பயன்படுத்த, தடிமூலம் பாரங்களை தூக்க, பொருளை புரட்ட, எதிரியை அடிக்க, உணவை பிடிக்க, தோண்ட..... என எண்ணற்ற வகையில், மனிதன் தனது முதல் உழைப்பின் வடிவங்களை கையாண்ட போதே, அது விஞ்ஞானத்தின் மையமாக இருந்தது. விஞ்ஞானத்தை நிராகரித்த மனித வாழ்வு என்பது, இயற்கையை மட்டும் சார்ந்து வாழும் மிருக வாழ்க்கையே ஆகும்.



அனைத்து மனிதனும் தனது முதல் வாழ்வியல் போராட்டத்தில் அனைவரைப் போல பாட, ஆட, உழைக்கவும், பொருளைக் கண்டறியும் விஞ்ஞானியாகவும் திகழ்ந்தனர். இந்த வாழ்வியல் இயற்கை சார்ந்து, இயற்கை மீது உழைக்கும் வடிவத்தில் ஏற்பட்ட வேலைப் பிரிவினைதான், மனித பிளவின் முதல் பிளவாகும். இந்த வேலைப் பிரிவினை பொதுவான மனித உழைப்பை தாண்டி, நுட்பமான வகையில் தனிப்பிரிவுகளை உருவாக்கியது. இதுதான் சிறப்பான விஞ்ஞானிகளையும், கலைஞர்களையும் என பல்வேறு துறைசார்ந்து பிளவின் ஊடாக, தனித் தன்மைகளை வெளிப்படுத்தியது. இந்த தனித்தன்மை கொண்ட, சிறந்த ஒரு துறை சார்ந்தவர்கள், படிப்படியாக மக்களிடம் இருந்து அன்னியப்பட்டு, மக்கள் காரணம் தெரியாது பயன்படுத்திய விஞ்ஞான அறிவியல்களை, தமது ஆய்வு கூடத்தில் பரிசோதித்து தனது கண்டுபிடிப்பாக நிலைநாட்டவும், தனது கண்டுபிடிப்பாகவும் உரிமை கோரவும் தொடங்கினர். உதாரணமாக வேப்பம் மரம் சார்ந்து நாம் பயன்படுத்தும் பல்துறை சார்ந்த அறிவில், இதுபோல் மஞ்சள் சார்ந்த அறிவியல், மக்களின் நீண்ட வாழ்வியல் அனுபவத்தின் விஞ்ஞான கண்டுபிடிப்பாக இருந்தது. ஆனால் இன்று அதை அமெரிக்கா மற்றும் மேற்கு நாடுகளின் உலகம் தழுவிய பன்நாட்டு கம்பனிகள், தமது கண்டுபிடிப்பாக, ஆய்வுகூட பரிசோதனையூடாக காரண காரியத்தின் விளைவை விளக்கி உரிமை கொண்டாடுகின்றன. இந்த உரிமைக்காக, நாம் வேம்பு மஞ்சள் சார்ந்த மருந்து மற்றும் பல்துறை சார்ந்த கண்டுபிடிப்புக்கு, மறைமுகமாக "கண்டுபிடித்தாக" உரிமை கோரும் நிறுவனத்துக்கு வரிகட்டுகின்றோம். இப்படி மக்களின் விஞ்ஞான அறிவியல் சிலரின் கண்டுபிடிப்பாகி, தனிநபரின் மூலதனமாகின்றது.

விஞ்ஞானம் மக்களின் வாழ்வியல் அனுபவங்களில் இருந்தும், தற்செயல் நிகழ்வுகளிலும், இயற்கை அவதானிப்பில் இருந்துமே உருவாகின்றது. விஞ்ஞானத்தை, அது சார்ந்த அறிவியலை பிறப்பின் முன்பிருந்தே மனிதன் பெற்றுவிடுவதில்லை. மனிதனின் வாழ்வியல் அனுபவத்தில் இருந்தே, இவை பிறக்கின்றது. இந்த மக்களின் வாழ்வியல் அனுபவத்தை மறுத்து தனிநபரின் கண்டுபிடிப்பாக மாற்றிய போது, கண்டுபிடிப்புகள் கூட வசதியானவனின் கண்டுபிடிப்பாக மாறிவிடுகின்றது. கண்டுபிடிப்புகள் பணச் செலவு கொண்ட ஆய்வு கூட வசதி தேவைப்படும் போது, கண்டுபிடிப்பும் வசதியை சார்ந்து விடுகின்றது. விஞ்ஞானம் வசதியை சாரச்சார, அது வசதியான நாட்டைச் சார்ந்து விடுகின்றது. இந்த கண்டு பிடிப்புக்கு மறைமுக வரி மற்றும் நேரடி வரி அறவிடப்படுவதால், விஞ்ஞானத்தின் விளைவுகளை பயன்படுத்தும் மக்கள் மேலும் ஏழ்மையை நோக்கிச் செல்லுகின்றனர். விஞ்ஞானம் என்பது இன்று வசதியானவனின் நோக்கத்தை பூர்த்தி செய்பவதாகி விடுகின்றது. இது விஞ்ஞானத்தின் நோக்கத்தை வெளிப்படுத்தும், எல்லைக் கோடாகி விடுகின்றது. விஞ்ஞானம் மக்களிடம் இருந்து அன்னியப்பட அன்னியப்பட, அதன் விளைவுகளும் மக்களிடம் இருந்து அன்னியப்படுகின்றது. விஞ்ஞானம் படிப்படியாக மக்களை அடக்கியொடுக்கும் ஊடாகமாக மாறிவிடுகின்றது.



மனிதன் குரங்கில் இருந்து உருவானவன் என்ற போதும், சிலர் கடவுள் தோற்றுவித்தார் என்ற வாதத்தை முன்வைக்கின்றனர். இந்த இரு போக்கிலும் மக்களின் நிலையைப் பார்ப்போம். உலகம் தோன்றிய பொழுதும், மனிதன் உருவான போதும் இந்த உலகில் உள்ள அனைத்துப் பொருட்களும் இயற்கையில், மக்களின் பயன்பாட்டில் பொதுவாகவே இருந்தது. உலகில் உள்ள எல்லாச் செல்வமும் பொதுவாக, மக்கள் கூட்டத்திற்கு பொதுவாக இருந்ததே ஒழிய, தனிநபர் சொத்தாக என்றும் இருந்ததில்லை. மக்கள் கூட்டத்தின் முன் பொதுவாக இருந்த பொருட்கள் (சொத்து) எப்படி



படிப்பகம்

www.padippakam.com




தனிமனித சொத்தாக மாறியது? இயற்கையிலான பூமிக்கும், அதில் உள்ள பொருட்களுக்கும் எல்லை போட்டு இது உன்னுடையது, இது என்னுடையது என ஏற்பட்டது எப்படி? எப்படி சிலரிடம் சொத்துக் குவிந்தன? இவையே மனித சமுதாயத்தின் அவலத்திற்கு அடிப்படையாகும். இதுவே விஞ்ஞானத்தின் சாபக்கேடாகும். இங்கு திறமையோ, வீரமோ, வல்லமையோ அல்ல, மாறாக மனிதனை, அவனின் உழைப்பை அபகரிப்பதன் விளைவே, சொத்துக்கள், அறிவியல் மற்றும் அதன் விளைவுகள் இன்று தனிமனிதனுக்கு சொந்தமாகக் காரணமாகின்றது. இன்று உலகில் உள்ள எந்தப் பொருளை எடுப்பினும் அவை இயற்கையில் இருந்து எடுத்த பொருட்களின் தொகுதியே ஒழிய, வேறொன்றும் அல்ல. இயற்கையில் இருந்து எடுத்த பொருட்களின் மீது மனிதனின் உழைப்பு (செயற்பாடு) பொருட்களை மாற்றி மீட்டெடுக்க வழிகோலியது. உழைப்பு இல்லாது எந்தப் பொருளையும் மனிதன் பெற முடியாது. இந்த உழைப்பின் காரணகாரிய விளக்கமே விஞ்ஞானமாகும்.



இந்த உழைப்பையும், உழைப்பின் காரண காரிய தொடர்பை விளக்கும் விஞ்ஞான சூத்திரங்களையும், மக்களிடம் இருந்து ஏமாற்றி அபாகரித்து, அதிக உழைப்பை, அறிவை யார் ஒருவன் கூடுதலாக ஏமாற்ற முடிந்ததோ, அவனால்தான் பொதுச் சொத்தை தனதாக்க முடிந்தது. இது தான் உலக அவலத்திற்கு அடிப்படையாகும்.



இயற்கையில் எல்லாப் பொருளும் பெறுமதியற்றவை. உண்மையில் அதன் பெறுமதி பூச்சியமே ஒழிய, தனியாக அதற்கு பெறுமதி இருப்பதென்பது மனிதனை ஏமாற்றுவதாகும். ஏனெனில் எல்லாப் பொருட்களும் பெறுமதி அற்ற, இயற்கையின் விளைவே ஆகும். இயற்கையில் எடுக்கும் எல்லாப் பெறுமதி அற்ற பொருட்களின் மீது ஏற்படுத்தும் மாறுதல், மனித உழைப்பு மூலம் நகர்த்தப்படுகின்றது. மனித உழைப்புத்தான் அப்பொருளை மனிதனின் பயன்பாட்டிற்கு இயற்கையில் இருந்து மாற்றி அமைக்கிறது. இந்த பயன்பாட்டுப் பொருட்களின் மீதான உழைப்பு சக்திதான், ஒவ்வொரு பொருட்களுக்கும் வேறுபடுகிறதே ஒழிய, அப்பொருட்களின் பெறுமானம் எப்போதும் பூச்சியம் தான். எல்லோரும் உழைப்பார்களாயின், உழைப்பின் பயன்பாடு பூச்சியமானது. இயற்கையில் இருந்து சேகரிக்கும் பொருட்களின் பெறுமானம் பூச்சியமாகவும் உள்ளது. எனவே எல்லோரும் உழைக்கும் போது, உழைப்பு சமனாகி, உற்பத்தியின் பின் பொருட்களின் விலையும் பூச்சியமாகின்றது. இன்று உடல் உழைப்பில் ஈடுபட மறுப்பின், அல்லது அது நின்று போயின் உலகத்தில் எந்தப் பொருளையும் பெற முடியாது போய்விடும். மூளை உழைப்பு எப்போதும் உடல் உழைப்பைச் சார்ந்தே உள்ளது. இருந்த போதும் இன்று மூளை உழைப்பு உடல் உழைப்பைவிட முன்னுக்கு உள்ளது எனின், அது உடல் உழைப்பில் ஈடுபடுபவரின் உழைப்பை சுரண்டி மறைக்க செய்யும் சதியாகவே உள்ளது. உலகில் அமைதி என்பது பெறுமதியற்ற இயற்கையின் பொருள் மீதான, எல்லா மனிதனின் உழைப்பையும் பயன் படுத்திக் கிடைக்கும் பெறுமதியற்ற பொருளை, தேவையுடன் பயன் படுத்தும் உலகம் தோன்றும் போது தான், உண்மையில் சமாதானம் உருவாகும். இங்குதான் விஞ்ஞானத்தை மக்கள் நலன் சாா்ந்து பயன்படுத்துவது நிகழும். இல்லாத வரை மக்கள் தமக்குள் மோதுவது தவிர்க்க முடியாத நிகழ்வாக உள்ளது. இதை ஆதார பூர்வமாகப் பார்ப்போமாயின் மதங்கள் கூறுகின்றன, ஆண்டவன் செல்வத்தைக் கொடுக்கிறான். எனவே ஆண்டவனை வணங்குங்கள் என்கின்றன. ஆண்டவனே பூமியையும் அதன் செல்வத்தையும் படைத்ததாகக் கூறும் மதங்கள், அந்த செல்வத்தை தனிமனிதனுடையதாக எந்த ஆண்டவன் எப்போது ஏற்படுத்தினான் என விளக்குவது இல்லை. ஆண்டவன் படைத்ததாக கூறும் செல்வத்தை, வழிபாடு மூலம் தனிமனித சொத்தாக சூறையாட முடியும் எனக் கூறுவது ஏன்?. இது எந்த மதத்திற்கும் விதிவிலக்கல்ல. வழிபடுங்கள் எல்லாம் கிடைக்கும் எனக் கூறி ஏமாற்றும் மதம், நாட்டுக்கு நாடு உள்ள ஏற்றத் தாழ்வை விளக்குவதில்லை. ஆண்டவன் நாட்டுக்கு நாடு ஏற்றத் தாழ்வைத் தந்துள்ளதாக அல்லவா அர்த்தப்படும். இதுபோல் உள்ள பல ஏமாற்றங்களைக் காணமுடியும்.





விஞ்ஞானம் பற்றிய அறிவியல் இன்று செல்வந்த நாடுகளில், செல்வந்தர்களின் சொத்தாக இருப்பதனால், அது மக்களுக்கு எதிரானதாக மாறிவிடுகின்றது. விஞ்ஞானம் மக்களின் வாழ்வை வளப்படுத்துவதற்கு பதில் சிலரின் சொத்துக் குவிப்புக்கு உதவுவதாக மாறிவிடுகின்றது. வசதியானவன் தனது செல்வத்தை பெருக்க விஞ்ஞானத்தை தனது கருவியாக்குகின்றான். மக்கள் தொடர்ச்சியாக விஞ்ஞானத்தில் இருந்து அன்னியமாகின்றனர். விஞ்ஞானம் மக்களை கண்காணிக்க, அடக்கியாள, மக்களின் அறியாமையை ஏற்படுத்த, சூனியமான மனித மிருங்களை உருவாக்க பயன்படுகின்றது. மக்களின் நலன் சார்ந்து, மக்களின் வாழ்வை இலகுபடுத்த விஞ்ஞானம் பயன்பட வேண்டுமாயின், விஞ்ஞானம் மக்களின் சொத்தாக வேண்டும். விஞ்ஞானம் தனிமனித நோக்கத்தை பூர்த்தி செய்வதை கடந்து, சமூகத்தின் நலனை தேவையை பூர்த்தி செய்யும் வகையில் சமுதாயம் மாற்றப்பட வேண்டும். இல்லாத வரை விஞ்ஞானம் ஆக்கத்தை விட, அழிவையே மூலதனமாக கொள்கின்றது. இன்றைய சமுதாயத்தில் விஞ்ஞானம் மனிதர்களின் சமுதாய நலனை அடிப்படையாக கொண்டு ஆக்கத்தை முன்னிறுத்த தவறி, தனிமனிதர்களின் நலன்களை முதன்மைப்படுத்தி, அழிவை கொண்டு மூலதனத்தை ஆக்கின்றது. இது விஞ்ஞானத்தில் தவறல்ல. இவை மனிதனின் தவறு. விஞ்ஞான வளர்ச்சி மனிதனின் அமைதியான வாழ்க்கையை பாதிக்கின்றதா? எனின் இல்லை. மாறாக விஞ்ஞானம் யாரின் கையில் எந்த சமூகம் சார்ந்து காணப்படுகின்றதோ, அதனால் சமூகம் பாதிக்கப்படுகின்றது. விஞ்ஞானம் உயிருள்ளவையல்ல. விஞ்ஞானத்தை தவறாக பயன்படுத்தும் மனிதன் தான், அதை தனது மூலதனத்தை பெருக்கும் நோக்கில் துஷ்பிரயோகம் செய்கின்றான். அதாவது மனிதனின் தனிநபர் நலன்கள், ஒட்டு மொத்த சமுதாய நலனுக்கு எதிராக இருப்பதே இதன் அடிப்படையாகும். விஞ்ஞானம் ஆக்கத்துக்கும், அழிவுக்கு தானாக சுயேட்சையாக வழிகாட்டவில்லை. மனிதனின் சமுதாய நோக்கம் அழிவை நோக்கி விஞ்ஞானத்தை நடத்திச் செல்லுகின்றது. விவாதம் மனிதன் விஞ்ஞானத்தை சரியாக கையாளுகின்றான இல்லையா என்பதே. அதாவது மனிதனின் சமுதாய நோக்கம் சரியானதா இல்லையா என்பதே, இங்குள்ள விவாதமாகும். தனிமனித சமூக நோக்கமே விஞ்ஞான வளர்ச்சியை தவறாக பயன்படுத்தி, மனிதனை பிளந்து வாழ்க்கையை போராட்டமாக்கிவிட்டான். பேராட்டத்தில் மக்களின் சமூகநலன் வெற்றி பெறும் போது, மனிதனின் அமைதியான வாழ்க்கை ஒட்டுமொத்த சமூக நலன்கள் மீது ஏற்படும்.

- இரயாகரன் -



படிப்பகம்

www.padippakam.com



# ஓஷோவின் குட்டிக்கதை

ஒரு பெண் சிங்கம் மலையின் ஒரு பாறையிலிருந்து இன்னொரு பாறைக்குக் குதித்துச் சென்று கொண்டிருந்தது. அந்த இரண்டு பாறைகளுக்கிடையே ஆட்டுமந்தை ஒன்று சென்று கொண்டிருந்தது.

அந்த பெண் சிங்கம் கருவுற்றிருந்தது. எனவே, அது குதிக்கும் போது குட்டி போட்டு விட்டது. அந்தக்குட்டியானது ஆட்டு மந்தைக் கிடையே விழுந்தது. அந்த ஆடுகளில் ஒன்றா கவே அது வளர்ந்து வந்தது.

அது வளர வளர மற்றவற்றிலிருந்து தனது தோற்றம் மாறுபட்டிருந்தும் தன்னை இயற்கையின் விநோதம் என்று எண்ணிக் கொண்டது. சைவமாகவே இருந்தது.

ஒரு நாள் ஒரு கிழட்டுச் சிங்கம் இரை தேடிக் கொண்டு ஆட்டு மந்தை அருகில் வந்தது. ஆடு களோடு நின்ற இளம் சிங்கத்தைக் கண்டது. அதனால், நம்ப முடியவில்லை. ஆடுகளும் தங்களோடிருக்கும் சிங்கத்தைக் கண்டு அஞ்சவில்லை.

கிழட்டுச் சிங்கம் இரையை மறந்தது. ஆட்டு மந்தையைப்பின் தொடர்ந்தது. கிழட்டுச்சிங்கத்தைக் கண்டு இளம் சிங்கம் பயந்து ஒடியது, இறுதியில் இளம் சிங்கத்தைப் பிடித்துக் கொண்டது கிழட்டுச் சிங்கம்.

'தயவு செய்து என்னுடைய கூட்டத்தாருடன் என்னைப் போகவிடு' என்று அழுது புலம்பியது இளம் சிங்கம்.

அந்தக் கிழட்டு சிங்கம், இளம் சிங்கத்தை விடாது பக்கத்திலிருந்த ஏரிக்கு அழைத்துச் சென்றது.
ஏரிநீர் எவ்வித சலனமும் இல்லமால் கண்ணாடி போல் இருந்தது. கிழட்டுச் சிங்கம் அந்த நீர்நிலையில் இளம் சிங்கத்தை அதன் உருவத்தைப் பார்க்கும்படி செய்தது.

இளம் சிங்கம் மாற்றமடைந்தது. தன்னை யார் என்று கண்டு கொண்ட அந்த விநாடியில் பெரிதாக கர்ஜித்தது. அந்த கர்ஜனையை அந்தப் பள்ளத்தாக்கு எதிரொலித்தது. அதுவரை தன்னை ஆடாக எண்ணிக் கொண்டிருந்த சிங்கத்திற்கு உண்மை விளங்கிவிட்டது.

'என்னுடைய வேலை முடிந்து விட்டது. இனிச் சிந்திக்க வேண்டியது நீதான். நீ உனது ஆட்டு மந்தையோடு மீண்டும் போக விரும்பு கிறாயா?' என்று கேட்டது கிழட்டுச் சிங்கம்.

அந்த இளம் சிங்கம் சிரித்துக் கொண்டே, 'என்னை மன்னித்துவிடுங்கள். நான் யார் என் பதை முழுவதுமாக மறந்துவிட்டேன். இப்போது உணர்ந்து கொண்வடுவிட்டேன். உங்கள் உதவிக்கு மிக்க நன்றி' என்று கூறியது.

# புலம் பெயர் நாடுகளில் இளைய தலைமுறை

அழகான கிராமம்
அமைதியான வானம்
ஊர்ப் பருந்து உல்லாசமாய்
உயர்ந்தே பறக்கிறது
என்ன சுதந்திரம்
என்ன ஆனந்தம்
என்ன ரசனை
இது எமது நாட்டு வாழ்க்கை!

இடம் பெயர்ந்த இளைய தலைமுறையோ
ஊரைப்பற்றி புரியாது வாழ்கிறது
அழகான நாடுகள் தான்
அமைதியான வாழ்க்கை தான்
அகதியானாலும்
உல்லாசமாய் திரிகின்றனர் : ஆனால்
இது எமது சொந்த நாடுகள் இல்லை
என்பது தெரியாதா?

உணவோ சுகாதாரமானது தான்
உடையோ தனி ரகம் தான்
கல்வி சிறப்பானது
வாழ்க்கைத் தரம் உயர்வானது
ஈழத்தில் வாடி நிற்கும்
வேதனையின் பிஞ்சுகள் போரிட
புலம் பெயர்ந்ததால்
இவர்களுக்கும் கிடைத்தது
இந்த போகம்
என்பதை மறக்கக்கூடாது அல்லவா?

பார்த்து மிழக் கூடிய பாங்கில்
சிலர் வளர்கின்றனர் : இதில் சிலர்
இலட்சியமற்றவர்களாக வாழ்கின்றனர்
தாய் தந்தையை மதிப்பவர்களும் உண்டு
ஐரோப்பி சட்டம் பற்றி கூறும்
பிள்ளைகளும் உண்டு தெரியுமா?

பார்த்தால் புதுமைதான்
பண்பாடோ தொலைந்து விட்டது
எங்கள் வாழ்வே இங்கு தான்
எனக் கூறி மகிழ்கின்றார்கள்
ஏன் இங்கு வந்தோம் என்பதை மறந்து
எமது மண்ணையும் மறந்து விடுகின்றார்கள்
இவர்கள் யார்?

அறிவை வளர்க்கின்றோம்
பணத்தைத் தேடுகின்றோம்
அன்பையும் பந்தங்களையும் ஏன் மறக்கின்றோம்?
உரிமையைத் தொலைத்து உறவிடம் இழந்து
ஊசலாடும் எமது இனத்தின் வேதனைக்காக!
மனித உரிமை தந்த
பாதுகாப்பு வாழ்வை அனுபவித்து
விடிவைப் பெறப் பாடுபடும்
மக்களை மறந்து வாழ்வது முறையா?


அல்லையூர் அருள் தெய்வேந்திரன்



படிப்பகம்

www.padippakam.com




**19, rue Cail**
**75010 Paris , FRANCE**
**Tél.: 01 53 26 59 21**

*M°.: La Chapelle ou Gare du Nord*




படிப்பகம்

www.padippakam.com




# SAKTHI

## SAKTHI JEWELLERY s.a.r.l.

187, Rue du Faubourg St. Denis,
**75010 PARIS.**
**Tél. : 01 40 37 26 37**
**Métro : Gare du Nord / La Chapelle**

## SAKTHI EMPORIUM

**Vidéo Cassettes**
Vêtements prêt à porter
**Bijoux Fantaisie - Montre en Argent**
193, Rue du Faubourg St. Denis - 75010 PARIS.
**Tél. : 01 42 09 78 24 - Fax : 01 42 09 76 14**
**Métro : La Chapelle / Gare du Nord**

## SAPNA FASHION

**Prêt à porter - Féminin et Masculin**
**Bijouterie, Horlogerie, Cadeaux etc.**
20, Rue Demarquay, 75010 PARIS
**Tél. : 01 42 05 72 81**
**M°: Gare du Nord**




படிப்பகம்

www.padippakam.com



# தாழ்வு மனப்பான்மை

- விக்னா பாக்கியநாதன்.

*விக்னா பாக்கியநாதன். யேர்மனியில் வாழ்கிறார். எண்பத்தி நான்கில் எழுதத் தொடங்கி இன்றுவரையும் எழுதிக்கொண்டிருப்பவர் இவர்தான் புகலிடத்தில் மூத்த எழுத்தாளியா யிருக்காலம். 92ல் இருந்து கலை விளக்கு சஞ்சிகையை கணவருடன் சேர்ந்து வெளியிட்டு தற்போது வீடியோ சஞ்சி கையாக வெளியிட்டுக் கொண்டிருக்கின்றார். சிறுவர் நாடகங்கள் மாணவர்க்கான கட்டு ரைகள். தமிழ் இலக்கணபாடநூல்கள், மற்றும் சிறுகதை, கவிதை, பெண்நிலைவாதக் கட்டுரைகள் எனப் பதின்நான்கு நூல்கள் வெளியிட்டுள்ளார். பெண்ணொடுக்கு முறைக்கெதிராக உரத்த குரலாகவுமிருக்கின்றார்.*

'*மாதர் தம்மை இழிவு செய்யும்*
*மடமையைக் கொளுத்துவோம்*'

என வரகவி பாரதியார் அன்று வீராவேசத்துடன் முழங்கியது ஏன்? வாழ்க்கையின் அடிமட்ட நிலையிலே மிகவும் பிற்போக்கான கட்டுப்பாடுகளின் கெடுபிடிகளிலே சிக்கித் தவிக்கும் பெண்ணினத்தை வெளிச்சத்திற்கு கொண்டு வர முனைந்தார் அவர். இப்படியான பெண்ணொடுக்கு முறைகள் அன்று இருந்திருக்காவிட்டால் பாரதியார் *மாதர் தம்மை உயர்வு செய்யும் மகிமையைப் போற்றுவோம்* என்றல்லவா பாடியிருக்கவேண்டும்! இப்பாவின் அடிகளில் இருந்து பெண்ணினத்தின் அடிமைத்தன்மையையும் அதையுணராத ஆண்களின் அறியாமையும் இருபதாம் நூற்றாண்டு ஆரம்பகாலத்திலேயே சமூகத்தில் வைத்த பெருமை பாரதியாருக்கேஉண்டு.

பெண்ணாகப் பிறப்பதே பாபம். ஏன்று நினைக்கக் கூடிய அளவுக்கு பெண்குலத்திற்கு இழைக்கப்பட்ட அநீதிகளும் கொடுமைகளும் அளப்பரியது. இதன் காரணமாக பெண்ணைப் பெற்றவர்கள் எவ்வளவோ வேதனைப்பட்டார்கள். வேதனைப் பட்டுக்கொண்டே இருக்கின்றார்கள். பிறந்தது ஒரு பெண் குழந்தையாக இருந்தால் பெற்றவள் முகத்தில் சோகத்தின் ரேகைகள். இல்லத்தில் துக்கம் கொண்டாடும் நிலைக்கு வந்துவிடுகின்றது . பெண் என்றவுடன் அலட்சியம் சமூகத்தில் தொனிக்கின்றது. பெண் குழந்தையா பிறந்துள்ளது? பாவம் அவர்கள் எனச்சிலரும், அவருடைய செருக்குக்குப் பற்றாது, இன்னும் ஐந்து பெண் குழந்தை பிறக்கவேண்டும் என்று வசை பாடுவதும் ஏன்? எனச் சிந்திக்க வேண்டியுள்ளது.

ஒரு பெண்ணின் துணையின்றி இயங்காத சமூகம் பெண்ணை இப்படி அலட்சியம் செய்கிறது. ஆண் என்று தம்பட்டம் அடித்துப் பெருமை கொள்வோரும் ஒரு தாய் என்ற பெண்ணின் வயிற்றில் உதித்த பின் பெண்ணை இழிவு படுத்துவது எவ்வளவு அறியாமை பொதுவாக குடும்ப அமைப்பை நோக்கின் தாய், சகோதரி, மனைவி என்ற நிலைகளில் உள்ள பெண்களின் பாத்திரங்களில் 'மனைவி' என்ற பாத்திரம் அதிகப்படியான அடக்கு முறைக்குட்படுகிறது.

பெண்ணினம் இல்லையானால் அதைச் சமூகம் என்று நாமகரணம் சூட்டமுடியுமா? ஆண் என்ற ஒரு இனத்தால் என்ன செய்யமுடியும்? ஆணும் பெண்ணும் சேர்ந்ததுதான் உலகம் என்று இயங்கும் போது பெண் பிறந்தால் ஏன் தாழ்வு மனப்பான்மையோ? என ஆராய்ந்தால், தேவையற்ற அறியாமையில் ஊறிய, பழைய வழிவந்த கொள்கைகளை முறியடித்துப் பெண் சமத்துவத்தை வழங்க நம் சமூகம் திராணியற்று நிற்கிறது.

பெண் குழந்தை பிறந்ததுமே அவளுக்கு அறிவு வளர வளர பெண் ஆணுக்கு அடிமையானவள், மென்மையானவள், என்ற கருத்து தாய்ப்பாலுடன் ஊட்டப்படுகிறது. சிறுவர்களுடன் சேர்ந்து பழகவும் சிறுமிகளுக்குத் தடை விதிக்கப்பட்டு அவர்களுக்கு என்ற ஒரு வட்டத்தைப் பெற்றோர் அமைத்து விடுகின்றனர். இதற்கும் பெண்ணான ஒரு தாயும் உடன்பட்டு கட்டுப்பாடுகளை நடைமுறைப் படுத்துவதில் முன்னிற்கிறாள். எனவே பெண்தான் பெண்ணின் சுதந்திரத்தைப் பொசுக்க ஆரம்பிக்கிறாள்.

அப்படியென்றால் ஏன் பெண்கள் சுதந்திரத்தைக் கோரி நிற்கிறார்கள்? எனக்கேட்கலாம் நியாயமான கேள்வியே. பெண்ணாகப் பிறந்து தான் பட்ட கஷ்டத்தின் காரணமாகவே அந்தத் தாய்மனம் கட்டுப்பாடுகளை, சம்பிரதாயங்களைக் கற்பிக்க விழைகிறது. இதை அடிப்படையாகக் கொண்டே பெண்ணடிமைகள் வளர்ந்து வரக்கூடியதாயுள்ளது. இதனால் பெண் தன்னைப் பலமில்லாதவள் எனக் கருதியமையால், தான் அபலை என்று எண்ணிக் கொள்ளக்கூடிய தன்மையை, அவள் வாழ்கின்ற சூழல் ஏற்படுத்திக் கொடுக்கிறது.

எமது கலாச்சாரப் பண்பாடுகளின்படி எமது சமுதாயத்தில் பூப்படைந்த சிறுமிகளின் அச்சம், திகைப்பு, மாற்றம் என்பவற்றைப் போக்குவதை விட்டு அவற்றை மேலும் அதிகப்படுத்தும் முறையிலேயே அனுபவம் மிகுந்த மாதர், சுற்றவுள்ள மாதர் நடந்து கொள்கின்றார்கள். போதனை செய்கின்றார்கள். பழமை வாய்ப்பாடுகளை மனனம் செய்யத் தூண்டிவிடுகிறார்கள். மற்றும் சடங்குகள், சம்பிரதாயங்கள், இடக்கரடக்கற் சொற்கள், குழூஉக்குறிச் சொற்கள், கேலிப்பார்வைகள் என்பன பெண்களை மேலும் தலைகுனிய வைக்கின்றன இன்னும் மாதவிலக்கான நாட்களில் பெண்களை ஒதுக்கிவைத்தல், அந்நேரம் வீட்டுக்கு விரும்பத்தகாதவர்கள் எனப் பறைசாற்றுதல் போன்ற எல்லாம் பூப்படைந்த சிறுமிக்குத் தாழ்வுணர்ச்சியும், மற்றவர் கண் படக்கூடாது என்ற அருவறுப்பும் அவளிடம் வேரூன்றிவிட, தாழ்வு மனப்பான்மை அவளிடம் குடியிருக்க ஆரம்பிக்கின்றது.



படிப்பகம்

www.padippakam.com

## வித்தியாலயம் 2001



பருவப் பெண்ணான பின்னர் அவளது உடற்கூற்றமைப்பு, ஒரு நாணத்தை, அறியாமையினால் உருவாகும் மெல்லிய பயத்தை ஏற்படுத்தி விடுகின்றது. பெற்றோரோ அவளின் வளர்ச்சி கண்டு சந்தோஷமும், பெருமையும் கொள்ளவேண்டிய நேரத்தில் மனங்கோணும் பாவனையில் மாறிவிடுகிறார்கள். வெளியில் நடமாடி வர என்ன விபரீதங்கள் நடக்குமோ என்று அஞ்சுகிறார்கள். ஆனால் தமது மகனின் வளர்ச்சி கண்டு பூரிப்படைகிறார்கள். பரந்த மார்புடையோனாக, சிங்கம் நிகர்த்த காளையாக வளர்ந்து நிற்கிறானே எனப்பெருமிதம் கொள்கிறார்கள். வெளியே போய் எங்கும் உலவி எந்நேரமென்றாலும் வீட்டுக்கு வா! என அனுமதி கொடுக்கிறார்கள். ஆனால் இத்தகைய அனுமதி பெண்களுக்கு இல்லையே. ஏன்

இங்கே பெண்ணுக்கு ஒரு குழிதோண்டல் நடைபெறுகிறது. பெண்களை வெளியில் விட அனுமதிக்காத காரணம் என்ன? பேய், பிசாசு, கொடிய விலங்குகள் அவளைத் தாக்கிவிடும் என்பதாலா? அல்லது வெளியில் போய்வர அவளுக்குப் பாதை தெரியாது என்பதாலா? தமது இனம் எனக்கூறும் ஆணினத்துக்கே அவள் அஞ்சி வீட்டுக்குள்ளே இருக்கின்றாள். சமுதாயத்தில் ஆரோக்கியமான, மனித உரிமைகளை நியாயப்படுத்துகின்ற மாற்றங்கள், ஏற்படாதவிடத்து இந்தநிலை நீடித்துக்கொண்டே போகும்.

மேலெழுந்தவாரியாக நோக்கும் போது ஆண்களே இவற்றுக்கெல்லாம் காரணம் என்ற முடிவை எடுக்கவேண்டியுள்ளது. இதை மனதில் வைத்துக்கொண்டே தாய்மார்கள் 'அங்கே போகாதே, வெளியில் போகாதே, தெருவில் நிற்காதே, என்ன அலங்காரம் உனக்கு?' என்று கட்டுப்பாடு போதிக்கின்றார்கள்.

இன்னும் சில குடும்பங்களில் 'உன்னை ஒருவன் கையிற் கொடுக்கும் வரைக்கும் எமது வயிற்றில் நெருப்பை வளர்த்துக் கொண்டிருக்கிறோம். கவனமாக இருக்கவேண்டும்' என்ற அறிவுரைகள் யாவும் யாரை மையமாக வைத்து, பெண்களுக்கு ஊட்டப்படுகிறது? எமது சமுதாயத்தில் எந்தப் பெண்ணாவது துணையின்றி, தனிவழியே அச்சமின்றிப் போகமுடியுமா?

இன்னொரு முக்கிய அம்சம், ஒரு ஆணே இன்னொரு ஆணுக்குப் பயப்படும் நிலை இருக்கும் போது பெண்ணின் நிலை எப்படி இருக்கும்? அதாவது கணவன் தன் மனைவியையோ, சகோதரன் தன் சகோதரியையோ, நோக்கி 'நீர் அந்த வழியிலே போகவேண்டாம். அது கூடாத இடம். அங்கே பெரும்பாலும் காடையர்கள், காமுகர்கள், நிற்பார்கள் ' என ஒரு ஆணே தன்னினத்தைப் பற்றி அறிமுகம் செய்து வைக்கின்றார்கள். இப்படியான நிலை இருக்கும் போது எமது சமுதரயத்தில் பெண்களுக்கு எங்கே விடிவுவரும்?

இன்று பல பெண்கள் பலதுறைகளிலும் முன்னேறி சமூகத்தில் முன்னிற்கிறார்கள், என்று பரவலரகப் பேசப்படுகின்றது. பெண் சுதந்திரம் கோரிச்சென்ற பாரதியின் புண்ணிய பூமியிலே, பாரதி கனவு கண்ட பெண்ணாக பாரத ரத்னா இந்திரா காந்தி அம்மையார் தோன்றி, புதுமைப் பெண்ணுக்கு ஒரு அத்திவாரம் போட்டுச் சென்றுவிட்டார். இதை வைத்துக்கொண்டு எல்லாப் பெண்களும் சுதந்திரமாக, வாழ்கிறார்கள் எனக்கூற முடியாது. பாரதி கூறிய புரட்சிப்பெண்ணின் கருத்துக்களுக்கமைய, ஆங்காங்கே சில பெண்கள் வாழ்கிறார்கள் என்பதையும் மறுக்கமுடியாது. ஆனால் சமூகத்தின் புரையோடிப் போன மூடக் கொள்கைகளால் அபலைகளாக வாழும் பெண்களின் தாழ்வு மனப்பான்மை இன்னும் வளர்ந்துகொண்டே போகின்றது. அதற்கு இன்றைய சமூகம் பசளையிட்டு வளர்த்துச் செல்கின்றது. பெண்ணடிமையைச் சட்டங்கள் நீக்கினாலும் சம்பிரதாங்கள் அவற்றுக்கு இடம் கொடுக்கவில்லை.

சம்பிரதாயங்கள், மாறுவதற்கு ஒவ்வொரு தனிமனிதனின் மனமும் மாற்றமடைய வேண்டும். அந்த மாற்றங்களையும் ஒவ்வொருவனும் மனமுவந்து ஏற்கவேண்டும். ஆகவே சமுதாயத்தின் அடிப்படைகளில் ஊறியுள்ள சம்பிரதாயங்களில் ஏற்புடைத்தான அம்சங்களை விட்டு தேவையற்றன எனக் கருதப் படுவனவற்றைத் தவிர்த்துக் கொள்ளுதல் சாலச் சிறந்தது.

'உலக வாழ்க்கையின் நுட்பங்கள் தேரவும்
ஓது பற்பல நூல்வகை கற்கவும்,
இலகு சீருடை நாற்றிசை நாடுகள்
யாவுஞ் சென்று புதுமை கொணர்ந்திங்கே
திலக வாணுத லார் நாங்கள் பாரத
தேசமோங்க உழைத்திடல் வேண்டுமாம்,
விலகி வீட்டிலோர் பொந்தில் வளர்வதை
வீரப் பெண்கள் விரைவில் ஒழிப்பராம்.'

- பாரதியார்.



படிப்பகம்

www.padippakam.com





நிர்வாகிகள் :
இருப்பவர்கள் :-
அ. தேவதாசன்
யா. பாலகிருஷ்ணன்
இயல்வாணன்
சி. மகேந்திரன்
கலைவாணி

நிற்பவர்கள் :-
வரதராஜா
செ. சுந்தரலிங்கம்
ஸ்ரீபாஸ்கரன்
கந்தப்பிள்ளை
யா. பத்மநாதன்
சு. கருணாநிதி





வித்தியாலய விழா 2000 இல்
இடம்பெற்ற நிகழ்ச்சிகள் சில



படிப்பகம்

www.padippakam.com






*வித்தியாலய விழா 2000 இல்*
*இடம்பெற்ற நிகழ்ச்சிகள் சில*




எங்கள் கல்லூரித்தாய் சிறப்புற

THANGAMALIKAI

SOLDERIE BIJOUTERIE


Métro : La chapelle
199, Rue du Fg. St. Denis
75010 PARIS

Phone : 01 42 05 39 05
Fax : 01 42 05 39 06



படிப்பகம்

www.padippakam.com




**வேலணை மத்திய மகா வித்தியாலய பழையமாணவர் சங்கம் - பிரான்ஸ்**
**ASSECVEL 73, Rue Doudeauville, 75018 Paris. France.**
Tél.: 01 42 51 29 92 Fax.: 01 42 51 35 25

படிப்பகம்